Registered as a Newspaper

NEW MASTER
INSTITUTE
241, Navalar Road, Jaffna
89 A/L
Sat & Sun - 11.30 a.m.
ZOOLOGY
சிறுநீர்சனனித் தொகுதி
ஆசிரியர்:
திரு. நாகநாதன்

சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 3-50

NEW MASTER
INSTITUTE
241, Navalar Road, Jaffna
89 A/L
Sat & Sun - 8.30 a.m.
ZOOLOGY
விலங்குப்பாகுபாட்டியல்
ஆசிரியர்:
திரு. நாகநாதன்

மலே: 3 யாழ்ப்பாணம் விபவ ஸு ஆவணி மீ 11 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ் பிறை 13 (27-08-1988) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 25

ஈழத் தமிழர்களை திருப்பி அனுப்புவதில்லை! 12 நாடுகள் இணங்கின

நிதி ஊக்குவிப்புவழங்கவும் திட்டம் நோர்வே மாநாட்டில் அறிவிப்பு

- சஞ்சிவி அலுவலகப் பிரதிநிதி: பென்ஜமின் ராஜரத்தினம் -

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 27

ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் கோரியிருக்கும் இலங்கைத் தமிழர்களை தற்போதைக்கு இலங்கைக்குத் திருப்பி அனுப்ப வேண்டாம் என ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது. இந்த வேண்டுகோளை இலங்கைத் தமிழ் அகதிகள் தஞ்சம் புகுந்திருக்கும் பன்னிரண்டு நாடுகள் ஏற்றுக் கொண்டிருக்கின்றன.

அண்மையில் நோர்வேயில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இந்த பன்னிரண்டு நாடுகளும் இது தொடர்பான தமது இணக்கத்தைப் பகிரங்கமாக வெளிப்படுத்தின.

பிரிட்டன் அகதிகள் கவுன்ஸில் வெளியிட்டுள்ள ஆகப்பிந்திய அறிக்கையில் இந்த விவரங்கள் தெரிவிக்கப் பட்டிருக்கின்றன.

நோர்வேயில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் சம்பந்தப்பட்ட பன்னிரண்டு நாடுகளின் அரச பிரதிநிதிகளும், ஐ. நா சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் கோரியிருக்கும் இலங்கைத் தமிழர்களின் எதிர்காலம் குறித்து விரிவாக ஆராயப் பட்டது.

நிராகரித்து இருப்பினும்...

ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் கோரி விண்ணப்பங்கள் நிராகரிக்கப் பட்டவர்களைக்கூட இலங்கைக்குத் திருப்பி அனுப்ப வேண்டாம் என்று ஐ. நா. சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் விடு

(6 ஆம் பக்கம் பார்க்க)

சிறுப்பிட்டி, புத்தூர் நேற்று சுற்றிவளைப்பு

கோப்பாய், ஆக. 27

ஆவரங்கால், சிறுப்பிட்டி புத்தூர், நீர்வேலி பகுதிகள் நேற்றுக்காலை இந்திய அமைதிப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டன.

இதன் காரணமாக யாழ் - பருத்தித்துறை பாதையில் சேவையில் ஈடுபடும் பஸ்கள், கோப்பாய் சந்தியால் உரும்பராய்க்குத் திரும்பி, அங்கிருந்து வயாவிளான் ஊடாக அச்சுவேலி சென்றன.

நேற்று செல்வச்சந்நிதி இரதோற்சவத்திற்குச் சென்ற பெரும் எண்ணிக்கையானபக்தர்கள் இதனால் பெரிதும் அசௌகரியங்களுக்கு உள்ளாக நேரிட்டது. (உ-72-51)

தமிழகத்தில் கைது செய்யப்பட்ட

விடுதலைப் புலிகளை விடுவிக்கக் கோரி மனு

சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல்

சென்னை, ஆக. 27

தமிழ்நாட்டில் இது வரை கைது செய்யப் பட்டுள்ள 152 இலங்கை தமிழ்ப் போராளிகளை உடன் விடுதலை செய்யக் கோரியும், நீதிமன்றத்தில் ஆஜர் செய்யக்கோரியும் திராவிடர் கழகம் சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

இந்த மனுவை நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமை ஏற்றுக் கொண்டதுடன் மேல் விசாரணையைஎதிர்வரும் திங்கட்கிழமைக்கு ஒத்தி வைத்தது.

''இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்க வில்லை என்ற கோபத்தினாலேயே இந்திய அரசும் ராஜீவ்காந்தியும் இவர்களைக்கைது செய்ய உத்தரவிட்டனர்.

ஆனால் இப்போது இவர்கள் கடவுச்சீட்டு,

(8ஆம் பக்கம் பார்க்க)



நல்லூர் வீரமாகாளியம்மன் ஆலய முன்றலில் நேற்றுக்காலை சுழற்சி முறை உண்ணாவிரதம் ஆரம்பமானது. உண்ணாவிரதம் அனுஷ்டித்த சிலரைப் படத்தில் காணலாம். (படம் — ஜெயம்)

எதிரணித் தலைமை: பர்மாவிலும் பெண்ணிடம்

ரங்கூன், ஆக. 27

பர்மா அரசுக்கு எதிராக நடத்தப்படும் கிளர்ச்சிகளுக்கு தலைமை வகிக்க ஒரு பெண் புறப் பட்டிருக்கின்றார்.

அவர் பெயர் ஒலிங் சங் சி.

பிரிட்டிஷ், ஜப்பானிய ஆதிக்கத்தில் இருந்து பர்மாவை மீட்க 1946 இல் சுதந்திரப்போராட்டம் நடத்திய விடுதலைப் போராட்டத் தலைவர் ஒலிங் சங்கின் மகள் இவர்.

பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை ஆகிய நாடுகளிலும் எதிரணிகளுக்குப் பெண்களே தலைமை வகிக்கின்றார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

நேற்று ரங்கூனில் நடந்த பிரமாண்டமான ஆர்ப்பாட்டப்பேரணிக்கு ஒலிங் சங் சி தலைமை வகித்தார். சுமார் பத்து லட்சம் மக்கள் கலந்து கொண்டனர்.

''இப்போது நடத்தப் படுவது இரண்டாவது சுதந்திரப்போராட்டம்' என்று அவர் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் ''டாக்டர் மொங் மொங் தலைமையிலான அரசை வீழ்த்த மக்கள் அனைவரும் ஒன்று பட வேண்டும் மொங் மொங் அரசு உடனடியாக இராஜினாமாச் செய்து புதிய அரசியல் தலைமுறைக்கு இடம் அளிக்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

நல்லூர் வீரமாகாளி அம்மன் முன்றலில்

உண்ணாவிரதப் போராட்டம் நேற்று ஆரம்பமாகியது

யாழ்ப்பாணம் ஆக. 27

நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவில் முன்றலில் நேற்றுக் காலை 8மணி முதல் சுழற்சி முறை உண்ணாவிரதம் ஆரம்பமானது.

பூஸாமுகாமில் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் மேற் கொண்டுள்ள அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்தே இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படுகிறது.

இந்தப் போராட்டத்தை வடக்கு—கிழக்கு பிரஜைகள் குழுவின் இணைப்புக் குழு ஏற்பாடு செய்திருக்கிறது.

ஸ்ரீலங்கா அரசினால் கைது செய்யப்பட்டு பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளையும்—

வடக்கு-கிழக்கு பகுதி

(6ஆம் பக்கம் பார்க்க)

வீரமாகாளி அம்மன் அருகே

சுடப்பட்ட இருவரும் அடையாளம் காணப்பட்டனர்

யாழ். வீரமாகாளி அம்மன் ஆலயத்துக்கு அருகாமையில் சுட்டுக்கொல்லப்பட்ட இருவரின் சடலங்களும் நேற்று அடையாளம் காணப்பட்டன.

மண்டைதீவைச் சேர்ந்த சக்திவேல் பரணிதரன் (வயது 23), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எம். திருநாவுக்கரசு (வயது29) ஆகிய இருவருமே சுடப்பட்டவர்களாவர்.

வியாழக்கிழமை மாலை இவர்கள் இருவரும் வீரமாகாளி அம்மன் ஆலயத்துக்கு அருகாமையில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்- கொழும்பு சேவை:

44 தனியார் மினிபஸ்கள் நேற்றும் ஓடவில்லை

யாழ்ப்பாணம் ஆக 27

யாழ்- கொழும்பு தனியார் பஸ் சேவை நேற்று மீண்டும் ஆரம்பமானது.

எனினும் தனியார் மினிபஸ் சேவை நேற்றுத் தொடர்ந்து மூன்றாவது நாளாக நடைபெறவில்லை.

தனியார் பஸ் கட்டணங்கள் குறைக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பு- யாழ்ப்பாணம் சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

எனினும் பின்னர் அமைதிப்படை அதிகாரிகளுடன் தனியார் பஸ் உரிமையாளர்கள் பேச்சுவார்த்தை நடத்தியதையடுத்து நேற்று யாழ் கொழும்பு போக்குவரத்து ஆரம்பமானது.

இந்த பஸ்கள் தற்போது ஒவ்வொரு பயணியிடமிருந்தும் 110 ரூபாவைப் பயணக் கட்டணமாக அறவிடுகின்றன.

நேற்று ஏழு பெரிய பஸ்கள் சேவையில் ஈடுபட்ட பொழுதும் கொழும்பு சேவையில் ஈடுபட்டிருந்த 44 மினிபஸ்களும் ஓடாமல் முடங்கிக் கிடந்

(6ஆம் பக்கம் பார்க்க)

முல்லைத்தீவில் தொடர்ந்து கடும் மோதல்! பொதுமக்கள் பெரிதும் பாதிப்பு

ஒட்டுசுட்டான் ஆக 27

முல்லைத்தீவில் தொடர்ந்து கடும் மோதல் நிகழ்ந்து வருகிறது. இருதரப்பிலும் உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம் என அங்கிருந்து கிடைத்த செய்திகள் தகவல் தெரிவித்தன.

இதேசமயம் கடந்த திங்கட்கிழமை நண்பகல் முதல் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமுல் செய்யப்பட்ட ஊரடங்கு உத்தரவைக் தளர்த்துவதில் தாமதம் காட்டப் படுவதாகத் தெரிவிக்கப் பட்டது.

இதனால் பொதுமக்கள் உணவுப் பொருள் வாங்க முடியாமலும், அவசர வேலைகளைக் கவனிக்க முடியாமலும் அல்லற்படுவதாகத் தெரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

27 - 08 - 88
ஆவணி — 11
சனிக்கிழமை

சுபநேரம்:
3.05முதல் 4.35வரை
ராகுகாலம்:
09.05முதல் 10.35வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
பூரணை விரதம்

உண்ணாவிரத கைதிகளின் நிலை மோசமடைகிறது

யாழ்ப்பாணம் ஆக 27

பூஸா தடுப்பு முகாமில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ள மூவரில் செல்லப்பா வாசுதேவன் என்ற அரசியல் கைதியின் உடல் நிலை மோசமடைந்து, கவலைக்கிடமானதாக இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இவர் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டு நேற்றுடன் 13 நாள் முடிவடைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-9)

இன்று முதல் மீண்டும் கொழும்பு ரயில் சேவை

அமைதிப்படை அறிவிப்பு

யாழ்ப்பாணம். ஆக 27

வாரந்தோறும் சனி ஞாயிறு தினங்களில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு பயணிகள் ரயில் சேவை நடைபெறும் என நகரக் கொமான்டன் அலுவலகம் நேற்று விடுத்த பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இவ்விரு தினங்களிலும் கொழும்பில் இருந்து புறப்பட்டு காலை மணிக்கு யாழ்ப்பாணம் வந்து சேரும் ரயில் பிற்பகல் 12.45 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு புறப்படும்.

இச் சேவை இன்று முதல் நடைபெறும். யாழ் பொது மக்கள் இச்சேவையைப் பயன்படுத்திக் கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

இப்படி அந்தப் பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. (உ-எ)

இன்று திறப்பு விழா

அன்புடையீர்,
நிகழும் விபவ வருஷம் ஆவணி மாதம்
11 ஆம் திகதி (27-8-88) சனிக்கிழமை
பி. ப. 3-00 மணி தொடக்கம்
4-00 மணிவரையிலான
சுபவேளையில்

★ ரொப் ரேடேர்ஸ் ★

என்னும் மீன்பிடி உபகரணங்களும்
உதிரிப்பாகங்களும் கொண்ட ஸ்தாபனத்தை
திறந்து நடத்த இருப்பதால் அவ்வமயம்
மீனவ நண்பர்களும், வாடிக்கையாளர்களும்
வருகை தந்து சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

உரிமையாளர்
யமாகாவின் அங்கீகரிக்கப்பட்ட
விநியோகஸ்தர்
TOP TRADERS
V. V. T
(6015)

புதுமையும் எழிலும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

பெரிய 2 கதவு குளிர் சாதனப்பெட்டி கடைப் பாவனைக்கு உரியது உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப் பாணம். (சென்பற்றிக்ஸ் சந்தியருகில்.) (5994)

ரெயிலர் (Trailor) விற்பனைக்குண்டு. மில்க் வைற், யாழ்ப்பாணம். (C6408)

London இல் இருந்து தருவிக்கப்பட்ட Wheel-Chair விற்பனைக்குண்டு. ஞாயிறு, புதன் தவிர்ந்த ஏனைய நாட்களில் எம் முடன் தொடர்புகொள் ளலாம் S. A. Rejinold, Palai Valavu, A. V. Road, Ariyalai, Jaffna. (5972)

பாவித்த வீட்டுத் தளபாடங்கள், குளிர்சாதனப்பெட்டி, அலுமாரி, கட்டில், Show - Case, கண்ணுடிமேசை, Office மேசை, சாப்பாட்டு மேசை, கதிரைகள், விருந்தைக் கதிரைகள், பலவித பித்தளைப் பொருட்கள், Steel அலுமாரி, மெற்றல் கதிரைகள் மற்றும் பலவிதமான பொருட்களும் மிகவும் மலிவுவிலையில் உடன் விற்பனைக்கு உண்டு. M. தியாகராஜன், 326, பிரதானவீதி, யாழ்ப்பாணம். (சென். பற்றிக்ஸ் சந்தியருகில்.) (5995)

யாழ். சச்சேரி கிழக்கு ஒழுங்கையில் 3 அறைகளுடன் ஒரு வீடு உடுவில் மானிப்பாய் வீதியில் 3 பரப்பில் புதிய வீடு விற்பனைக்குஉண்டு. தொடர்பு: J P T. 3. Model Market, (Upstairs) Jaffna. (5948)

முட்டை விற்பனை

முட்டை மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- (1) சிமாட்டி பாம், ஸ்ரேசன் ரோட், மயிலன் காடு, சுன்னும்; (2) சிமாட்டி, பான்ஸி கவுஸ், நவீன சந்தை, யாழ்ப்பாணம். (5934)

மலிவு விற்பனை

ரியூட்டறிக்குத்தேவையான வாங்கில், மேசை, தட்டச்சு இயந்திரம் [ஆங்கிலம்] விற்பனைக் குண்டு தொடர்பு: 11, சின்யர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம். (5946)

விடுவளவு விற்பனைக்கு

தாவடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் தெற்கு வீதி ஒழுங்கையில் 3 பரப்புக் காணியில் ஆறு (6) அறைகளும், 3 ஹோல்களும் சகல வசதிகளும் கொண்டவீடு, வளவுடன் நல்ல சுற்றுடலிலுள்ள காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: செ. சுப்பிரமணியம், தாவடி. (5937)

மைசூர் No. 1 அரிசி விற்பனை

மிகவும் கைதேர்ந்த தொழிலாளர்களால் சுகாதார முறைப்படி அதிநவீன இயந்திரங்கள் மூலம் தயாரிக்கப்பட்டு விற்பனையாகிறது No. 1 அரிசி. சகலதேவைகளுக்கும் கல் இல்லாத சுத்தம், சுவை, தரம் நிறைந்த மைசூர் No. 1 அரிசியையே உங்கள் அருகாமையிலுள்ள கடைகளில் வாங்கிப் பாவியுங்கள். தயாரிப்பாளர்: மைசூர் அரிசி ஆலை, சுதுமலை, மானிப்பாய். (5807)

திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேஷ கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C6107)

வைன்டிங் அன்ட் T.V டெக் உதிரிப்பாகங்கள்

ஸ்பீக்கர் வைண்டிங் ரான்ஸ் போமர், வைன்டிங், பற்றறி சார்ஜர் புதிதாகச் செய்யவும். கசற் பிளேயர், றேடியோ -- திருத்தல் ஆகியவற்றுக்கும், T.V. டெக் உதிரிப் பாகங்களை மலிவாகப் பெற்றுக் கொள்ளவும், பதிவு செய்த புதிய, பழைய பாடல்களைப் பெற்றுக் கொள்ளவும் மினி ரேட் சென்ரர், 3 J. M. C பில்டிங், ஸ்ரான்லி ரோட், யாழ்ப் பாணம். (5933)

புறஜெக்டர் விற்பனை

வீடியோ சினிமா புறஜெக்டர் (100") ஒன்றும், இரத்தம் சோதிக்கும் குளுக்கோ மீற்றர் (Glucometer) ஒன்றும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- "மினி ரேட் சென்ரர்", J. M. C. கட்டடம், 3 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (5932)

இறைச்சிக் கோழிகள்

Broiler இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். தொடர்பு:- Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (C/6063)

கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lohmann வெள்ளை சிவப்புப்பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், HY-Line கறுப்பு வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன் கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (சி/6066)

வான், மோட்டார் சைக்கிள் விற்பனை

ஒஸ்ரின். J4 மொடல் டிலிவரி வான், கொண்டா CB 90 மோட்டார் சையிக்கிள் விற்பனைக்கு உண்டு. நல்ல நிலையில் உள்ளவை. விலை நேரில் கதைத்துக் கொள்ளலாம். K. பரமநாதன், சுருவில். Bus Route No, 780. (ஊர்காவற்றுறை) (5928)

உலகத் தமிழர் குரல்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 4 ஆவது மாநாட்டு சிறப்பு மலர் விற்பனையாகின்றது. பிரதியொன்றின் விலை ரூபா 5/50 சதம் மட்டுமே. தலைமையகம்:- 67, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம். பூபாலசிங்கம் புத்தகசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம். (5960)

தேவை

சகலவிதமான தையல் கட்டிங் வேலைகளில் அனுபவமிக்க ஓர் தையல் நிறுவனத்தை (Garments) பொறுப்பாக மேற்பார்வை செய்ய 40 வயதிற்கு மேற்பட்ட பெண் மேற்பார்வையாளர் தேவை. அத்துடன் தையல் அனுபவமுள்ள பெண்பிள்ளைகளும் விண்ணப்பிக்கவும். 346, C/o உதயன், யாழ்ப்பாணம். (5944)

புதிதாகத்தொடங்கிய அச்சகத்துக்கு பின்வருவோர் உடன் தேவை. (1) மிசின் மைண்டர், [சைனு பிளேட்டின்] (2) அச்சுக் கோப்பாளர், (3) பைன்டிங், றூளிங் மெசின் [ஒட்டமெற்றிக்]. சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நேரில் வரவும். கிழமை நாட்களில் (12 மணி முதல் 2.00 மணி வரை). தொடர்பு:- டில்கா மேல்மாடி, 402/2 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப் பாணம். (5947)

கருங்கற்கள் தேவை

அலங்கார வேலைக்கு 500 சதுர அடி 1½ அங்குலம் தடிப்புடைய கருங்கற்கள் தேவை. குறைந்தது 6"×6" அளவுடையதாக இருக்க வேண்டும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சமக்கோன் நிறுவனம், 165, 4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் (5997)

Garments- Vacancy

கொக்குவிலில் இயங்கிக்கொண்டிருக்கும் Garments Centre க்கு சகலவிதமான கட்டிங் தெரிந்த பெண்களும், தைப்பதில் அனுபவம் உள்ள பெண்களும் உடன் தேவை. நேரில் வரவும் தொடர்பு:- Vertex Travels கொக்குவில் சந்தி, கொக்குவில். (5697)

மணப்பந்தல்

மணமகன் தேவை

யாழ்/ இந்து வேளாள 38 வயது. சாதகத்தில் செவ்வாய்க் குற்றமுள்ள பெண்ணுக்கு மணமகன் தேவை. நியாயமான சீதனம் வழங்கப்படும். சாதகத்துடனும் மற்றும் விபரங்களுடனும் விண்ணப்பிக்கவும். பொறுப்பற்ற தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம் இல 343. C/o உதயன் யாழ்ப்பாணம். (5939)

யாழ்/ இந்து உயர் வேளாள குல, குற்றமில்லாச் சாதகமுடைய படித்த பெண்ணுக்கு அரசாங்க வங்கி, கூட்டுத்தாபனத்தில் நல்ல பதவி வகிக்கும் நற்குணமுள்ள 31- 36 வயதுக்குட்பட்ட மணமகன் தேவை. யாழ்நகரில் வீடு, ரொக்கம். முதற் கடிதத்தில் குறிப்பு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும் 342 C/o உதயன் யாழ்ப்பாணம். (5938)

யாழ். இந்து வேளாள குல படித்த 29 வயதுள்ள மகளுக்கு அரச வங்கி கூட்டுஸ்தாபன சுயதொழில் வாய்ப்புள்ள மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றார்கள் சீதனமாக காசு, நகை, வீடுவளவு வழங்கப்படும். குறிப்புடன் தொடர்பு கொள்ளவும் C/o 328, உதயன், யாழ்ப்பாணம். (5857)

மணமகள் தேவை

32 வயதுடைய வேளாள குடும்பத்தைச் சேர்ந்த கட்டிடப்பொறியியலாளருக்கு பெற்றோர் 26 வயதுக்கு குறைந்த குடும்பப் பெண்ணை மணமகளாகத் தேடுகிறார்கள். சீதனம் எதிர்பார்க்கப்படும். இல. 345, C/o உதயன், யாழ்ப்பாணம். (5943)

மணமகள் தேவை

யாழ்/இந்து வேளாள 37 வயதுடைய லண்டன் பிரஜாவுரிமையுள்ள பொறியியலாளருக்கு படித்த நற்குணமும் அழகும் நிறைந்த பெண் தேவை. சாதகத்துடன் முழு விபரங்களையும் முதல் கடிதத்திலேயே தொடர்பு கொள்ளவும். இல. 334, C/o உதயன் யாழ்ப்பாணம். (5913)

தவறிவிட்டது

கு. சுதேஸ்குமார் ஆகிய எனது அடையாள அட்டை இல. 671201248 V பேர்சுடன் மருதனுமடத்திற்கும் சுன்னுத்திற்கும் இடையில் மின்பஸ்ஸில் தவறி விட்டது, கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (5942)

மகேந்திரன் இந்திரமதி ஆகிய எனது அடையாள அட்டை இல. 565591789X காங்கேசன் துறை பஸ்ஸில் தவறி விட்டது. இதைக்கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (5940)

சுப்பிரமணியம் புஸ்பராணி ஆகிய எனது அடையாள அட்டை இல. (536092994 V) 16-8-88 அன்று பழைய முருகண்டி என்ற இடத்தில் பஸ்விபத்தின்போது தவறி விட்டது. தயவு செய்து கண்டெடுப்பவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (5988)

மயில்வாகனம் யோகலிங்கம் ஆகிய எனது அடையாள அட்டை இல. 570552074V கச்சேரிக்குள் டிறைவிங் பஸ் எடுக்கும் அலுவலகத்திற்குள் தவறிவிட்டது. இதைக் கண்டு எடுப்பவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (5989)

ஆங்கில வகுப்புகள்

O/L88 பழைய/புதிய பாடத்திட்ட ஆங்கிலம் விசேஷ சனி, ஞாயிறு வகுப்புக்கள் மற்றும் Spoken English A/L89 ஆங்கில வகுப்புக்கள், தினசரி காலை, மாலை. கனகசபை 8, ஆம் ஒழுங்கை, பலாலிவீதி, பரமேஸ்வரா சந்தி. யாழ்ப்பாணம் (5927)

கல்வி

G.C.E (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரையும் சித்தியெய்தாதவர்களுக்கும் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 20 வருட அனுபவமுள்ள ஆசிரியரினுல் 2 மாதத்திற்குள் சகல போசன்களும் விஷேட சித்திக்கு வீடுகளில் சென்று கற்பிக்கப்படும். மற்றும் சகல பாடங்களும் Spoken English பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களினுல் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குழி. (6017)

பிரெஞ்ச் மொழி

1988 ஆம் ஆண்டு க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க விசேட "பிரெஞ்ச் மொழி" வகுப்புக்கள் சனிக்கிழமைக் கட்டணத்தில் 1- 9. 88 இல் ஆரம்பமாகின்றன. விபரங்களுக்கு:- "Alliance Francaise De Jaffna" (யாழ்/ பிரெஞ்சிய நட்புறவுச் சங்கம்) 139, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப் பாணம். [5929]

DIPLOMA IN NURSING
தாதியர் பயிற்சி

இரண்டாம் பிரிவு வகுப்புக்கள் தகுதிவாய்ந்த டாக்டர்களினுல் செப்டம்பரில் ஆரம்பம். விபரங்களுக்கு:- எலைற் றியூசன் சென்ரர், மானிப்பாய் அல்லது நவீன வைத்தியசாலை உடுவிலில் காலை 9 முதல் 11 மணிவரை தொடர்பு கொள்ளவும். (5954)

யாழ். சைனீஸ் றெஸ்ரோறென்ற்

எங்கள் ஸ்தாபனம் தினசரி பிற்பகல் 5. 30 வரை திறந்திருக்கும் தங்குமிட வசதியும் உண்டு யாழ். சைனீஸ் றெஸ்ரோறென்ற் பிறைவேற் லிமிட்டெட் முதலாம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம். (5917)

ஒத்துமாறல்

மட்டக்களப்பு பல்கலை கழகத்திற்கு 1988 / 89 கல்வி ஆண்டிற்கு வர்த்தகப் பிரிவிற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்திற்கு அதே பிரிவிற்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவரோடு ஒத்துமாற விரும்புகிறார். முழு விபரங்களோடு உடன்தொடர்பு கொள்ளவும். சி. கந்தசாமி அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப் பாணம். (5996)

பின்போடப் பட்டுள்ளது

யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் இன்று 27-8-88 தவிர்க்க முடியாத காரணங்களினுல் நடைபெற மாட்டாது. பின்போடப் பட்டுள்ளது. புதியதிகதி பின்னர் அறிவிக்கப்படும் தலைவர் Dr C. Wijayarajah. (5993)

வெடியரசன் நூல் வெளியீட்டு விழா இன்று

யாழ்ப்பாணம் ஆ. 27

"விஷ்ணு புத்திரர் வெடியரசன் வரலாறு" நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறும்.

காரையூர் திரு. மு. க. சிவப்பிரகாசம் எழுதிய இந் நூல் வெளியீட்டு விழாவில் தலைமை விருந்தினராக யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு சி வீ. கே. சிவஞானம் கலந்து கொள்வார்.

விழா காலை 8 30 மணிக்கு ஆரம்பமாகும்.

பண்டிதர் க. சச்சிதானந்தன் தலைமையில் நடைபெறும் விழாவில் நூலாசிரியருக்கு "சிந்தனைச் செம்மல்" என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படுவதுடன் திரு. சி. வி. கே. சிவஞானம் புலவர் நா. சிவபாதசுந்தரனுர் ஆகியோரால் பொன்னுடை போர்த்திக்கௌரவிக்கப்படுவார்.

யாழ் பல்கலைக் கழக நுண்கலைப்பீட தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி வெளியீட்டு உரை நிகழ்த்துவார். (ஓ-க)

வீதி திருத்தும் வேலையில் படையினர்

யாழ்ப்பாணம், ஆக. 27

பலாலி தொண்டமானுறு வீதி திருத்தும் வேலையில் அமைதிப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

நீண்ட நாட்களாக திருத்தப்படாது குண்டும் குழியுமாக இருந்த இவ் வீதி திருத்த வேலையில் பெருமளவிலான அமைதிப்படையினர் ஈடுபடுகின்றனர். (உ- 126)

மருந்து வகைகளை மீட்க பொதுமக்களின் உதவியைக் கோருகிருர்பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஆக.

சுகாதாரத் திணைக்களத்தின் மருத்துவக் களஞ்சியத்திலிருந்து கொள்ளையிடப்பட்ட பொருள்களை மீட்க வட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் திரு. எம். கனகசபை பொதுமக்களின் உதவியைக் கோரி உள்ளார்.

இதுபற்றி அவர் உதயனுக்குத் தெரிவித்ததாவது:-

ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய காலாண்டுத் தேவைக்காக வழங்கப்பட்ட மருந்துகளே கொள்ளையிடப்பட்டுள்ளன. இதனுல் அடுத்த சில மாதங்களுக்கு யாழ் பிராந்திய வைத்தியசாலைகளுக்கு மருந்து வகைகளை விநியோகிக்க முடியாதவாறு மருந்து பற்றுக்குறை ஏற்படலாம்.

மேலும் இந்த களஞ்சியத்திலிருந்து ஜெனரேட்டர் ஒன்றும் களவாடப்பட்டுள்ளது. இந்த ஜெனரேட்டர் மின்தடை ஏற்படும் நேரத்தில் தடுப்பு மருந்துகளை பாதுகாக்கும் குளிர்சாதனப் பெட்டியை இயக்க உதவி வந்தது.

இந்தத் தேவைக்காக குளிர்சாதனப் பெட்டி பொது ஸ்தாபனமொன்றிடமிருந்து இரவலாகப் பெறப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவத்திஞல் இனிமேல் மின்தடை ஏற்படும் நாட்களில் தடுப்பு மருந்துகளைப் பாதுகாக்க முடியாமல் போகும்.

எனவே இந்தப் பொருள்களைக் கொள்ளையிட்டவர்கள் மனிதாபிமானத்துடன் திருப்பித் தரும்படியும்—

கொள்ளையர்கள் இந்தப் பொருள்களை விற்க முயற்சிக்கலாம் அவ்வாறுன சந்தர்ப்பங்களில் தகவல் தெரிந்தவர்கள் யாழ். சுகாதார திணைக்களத்திற்குத் தகவல் தெரிவிக்கும்படியும் —

இந்தநடவடிக்கையின் மூலம் வடபிராந்தியத்தின் எதிர்கால மருத்துவப் பாதிப்பைத் தடுக்க உதவும் படியும் பொது மக்களைக் கேட்டுக்கொள்கிறேன் — என்றுர். (ஓ-9)

ஈழத்து சிதம்பரத்தில் பாலஸ்தாபனம்

காரைநகர், ஆக. 27

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பாலஸ்தாபனக் கிரியைகள் நடைபெறும்.

கடந்த சில மாதங்களுக்கு முன் இக்கோவிலில் பெறுமதி மிக்க பொருட்களும்-

பிரதான தெய்வங்களான ஐயனுர் நடேசர் முருகன் போன்றோர் புரட்டப்பட்டு யந்திர தகடுகளும் களவு போயிருந்தன. அதையடுத்தே பாலஸ்தாபனம் நடைபெறுகின்றது.

அரசடிப்பிள்ளையார் திருவிழா

வட்டுக்கோட்டை ஆக 27

துணவி அரசடிப் பிள்ளையார் கோவில் ஒன்பதாம் திருவிழா இப்பகுதி இந்து வாலிபர்களால் இன்று நடாத்தப்படுகிறது.

இன்று பிற்பகல் ஒரு மணிக்கு விசேட ஆராதனையுடன் திருவிழா ஆரம்பமாகும். சோடோபசார பூஜையின் பின் விசேட அலங்காரத்துடன் விநாயகப் பெருமான் குதிரை வாகனத்தில் வீதியுலா வருவார்.

சிறப்பு நிகழ்ச்சிகளாக சானமூர்த்தி, பஞ்சமூர்த்திசகோதரர்களின் நாதஸ்வர இசை நிழ்ச்சி இடம் பெறும். நாளை திருவூஞ்சல் வைபவம் நடைபெறும் (உ)

ரூ. 20 கோடி மாகாண சபைகளுக்கு

மாவட்ட அபிவிருத்திச் சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதியிலிருந்து இருபது கோடி ரூபா மாகாணசபைகளுக்கு வழங்கப்படும்.

இதேவேளையில் மாகாண சபைகளுக்கு மேலும் பத்து கோடி ரூபாவை வழங்குவதற்காக நாடாளுமன்றத்தில் குறை நிரப்புத் தொகை ஒன்று சமர்ப்பிக்கப்படும்.

மாகாண சபைகளின் அவசர நிதித் தேவைகளைக் கவனிப்பதற்காகவே இந்த 30 கோடி ரூபாவும் வழங்கப்பட இருக்கிறது. (ஓ- ஐ)

நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஆக 27

வியாழன்வடபகுதியெங்கும் ஏற்பாடு செய்யப்பட்ட ஹர்த்தால் வெற்றி பெற உதவிய அனைவருக்கும் வடக்கு, கிழக்கு பிரசைகள் குழுவின் இணைப்புக்கு குழுவினர் தமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

பிரஸ்தாப குழுவின் சார்பில் அதன் செயலாளர் திரு கே. சிவானந்தராசா தெரிவிக்கையில்-

தமிழ் மக்களைப் பாதிக்கும் முக்கிய ஆறு கோரிக்கைகளை முன் வைத்து எமது பிரசைகள் குழுவின் இணைப்புக் குழுவினர் ஏற்பாடு செய்த ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவு வழங்கிய அனைத்து பொது ஸ்தாபனங்களுக்கும் பொதுமக்களுக்கும் தமது குழுவின் சார்பில் நன்றி கூறினர்

மேலும் இது போல பிரஸ்தாப குழுவினுல் ஏற்பாடு செய்யப்பட்டு நடந்து வரும்-

பூஸா அரசியல் கைதிகளின் உண்ணுவிரதப் போராட்டத்திற்கு ஆதரவான உண்ணுவிரதத்துக்கும் - பூரண ஆதரவு வழங்கும் படியும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (ஓ-9)

அஷ்டலக்ஷ்மி கலண்டர்

தமிழ் மாநிலத்தின் உன்னத தயாரிப்பு! 1989ம் ஆண்டு அஷ்டலக்ஷ்மி தினத்தாள் கலண்டருக்காக ரூபா 35/- அனுப்பிப் பதிவுசெய்பவர்களுக்கு 365 பொது அறிவுக் களஞ்சியங்கள் அடங்கிய "பொது அறிவு டயறி" அன்பளிப்பாக வழங்கப்படும்!

★ வீட்டுக்கு அழகுதரும் தெய்வீகப் படங்கள்
★ தவறு இல்லாதபஞ்சாங்ககுறிப்புகள்
★ நாள்தோறும் சுபநேரம், எமகண்டம், ராகு காலம் போன்ற குறிப்புகள்
★ பொது அறிவை விருத்திசெய்யும் பொன்மொழிகள் ஆகியன அடங்கியது.

TRADE MARK

தயாரிப்பாளர்: சிவா பிறின்ரேர்ஸ், த.பெ.1, கைதடி.

சித்திரங்கள்: ஞானம் ஆர்ட்ஸ் அன் அட்வடைசிங்ஸ்

நல்லை ஆதீனத்திலுள்ள கலண்டர் காட்சிச்சாலையிலும் பதிவுசெய்து அன்பளிப்பைப் பெற்றுக்கொள்ளலாம். (C-6416)

திருமண ஒப்பந்த அழைப்பு

★ பிரபல பத்திரிகையாளரும் ஈழநாடு, ஈழமுரசு பத்திரிகைகளின் முன்னுள் ஆசிரியருமான திரு. எஸ். எம். கோபாலரத்தினம் தம்பதியின் மூத்த புதல்வன் திருநிறை செல்வன் **கோ. கபிலன்** அவர்களுக்கும்.

★ வேரவில் வலைப்பாடு செபஸ்தி பிரகாசம் தம்பதியின் இளைய புதல்வி திருநிறை செல்வி **பி. அமலநாயகி** அவர்களுக்கும்

21, ஸ்ரீவெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் **29 . 8 . 88** திங்கட்கிழமை காலை 9-30 பகல் — 11-30 மணியளவில்

ஈழநாடு பொதுமுகாமையாளரும் பிரபல சமூக சேவையாளருமான திரு. து. சீனிவாசகம் அவர்கள் முன்னிலையில் திருமண ஒப்பந்தம் நிகழவுள்ளது.

இத்தருணம் உற்றுர், உறவினர், நண்பர்கள் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை)

எஸ். எம். கோபாலரத்தினம் தம்பதிகள்
21, ஸ்ரீ வெங்கடேசன் வீதி, (பெருமாள் கோவிலடி) யாழ்ப்பாணம்.

செபஸ்தி பிரகாசம் தம்பதிகள்
வலைப்பாடு, வேரவில். [5987]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உலகைக் கலக்கி வரும் அமெரிக்கப் பெண் சோதிடர் கூறுகிறார்:

இளவரசர் சார்ள்ஸ் கொல்லப்படுவார்;

தம்பி அன்ட்ரூஸ் அரசர் ஆவார்!

இங்கிலாந்து பட்டத்து இளவரசர் சார்ள்ஸ். அரசி எலிசபெத் மரணமடைந்த பின் சார்ள்ஸ் இங்கிலாந்து மன்னராக பதவி ஏற்பார். ஆனால், 'சார்ள்ஸுக்கு மன்னராகும் யோசம் கிடையாது. அவரது தம்பிதான் அரசர் ஆவார்' என அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல பெண் ஜோசியர் ஒருவர் ஆருடம் கூறியுள்ளார்.

ஜோதிடம் பார்ப்பது, சகுனம் பார்ப்பது எல்லாம் மூட நம்பிக்கை என நம்நாட்டில் எல்லா அரசியல்வாதிகளும் மேடையில் பகுத்தறிவு பிரசாரம் செய்வார்கள். ஆனால், தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்வது முதல் எல்லா காரியங்களையும் ஜோசியம் பார்த்து, சகுனம் பார்த்துத்தான் செய்வார்கள்.

பெண் ஜோசியர்

இந்தக்கூற்று இலங்கையில் மட்டும்தான் என நினைக்காதீர்கள். விஞ்ஞான வளர்ச்சியில் உலகிலேயே முன்னணியில் இருப்பதாக பீற்றிக் கொள்ளும் அமெரிக்கா உட்பட உலகில் எல்லா நாடுகளிலும், ஜோசியத்தை நம்புபவர்கள் உள்ளனர்.

அமெரிக்காவில் பிரபலமான நகரம் ஹொலிவுட், ஏராளமான சினிமா ஸ்ருடியோக்கள் இங்கு உள்ளன. பிரமாண்டமான ஆங்கிலப் படங்கள் இங்குதான் தயாராகின்றன.

இந்த நகரில் வசிப்பவர் கெப்ரினு கின்காடி, அமெரிக்க நடிகர் நடிகைகள், அரசியல்வாதிகளுக்கு ஜோசியம் கூறுவர். முகத்தைப் பார்த்த உடனேயே அவரைப் பற்றிய உண்மைகளைச் சொல்லிவிடுவர்.

இந்தப் பெண் ஜோசியரைப் பார்க்க பல நாட்களுக்கு முன்பே 'அப்பாயின்மென்ட்' வாங்கவேண்டும். ஒரு மணி நேரத்திற்கு இவரது பீஸ் 6 ஆயிரம் ரூபா.

சூப்பர் ஜேம்ஸ்பான்ட் நடிகர் சீன்கானரி, அமெரிக்க அதிபர் றேகன் உட்பட பலருக்கு இவர் ஜோசியம் பார்த்துள்ளார். இவர் கூறியது அப்படியே நடந்துள்ளது என பலர் கூறியுள்ளனர்.

சீன் கானரிமீது காதல் கொண்டுள்ள கின்கார்டி இதற்குமுன் சீன்கானரி மூன்று பிறவி எடுத்துள்ளார் எனக் கூறியுள்ளார்.

றேகன் தேர்தலில் போட்டியிடும்போது றேகன் தான் வெற்றி பெறுவார் எனக் கணித்தார். கரோலின் கென்னடி வீட்டில் குண்டுவீச்சு நடக்கும் எனக் கூறினார். அதுபோல் குண்டுவீச்சுச் சம்பவம் நடந்தது. இசைக்கலைஞர் ஜான் லென்னன் என்பவரிடம் உங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது எனக்கூறினார். அதுபோல் இரண்டு நாளில் அவர் கொல்லப்பட்டார். அதுபோல் தனது நண்பர் எல்விஸ் பிரிஸ்லி மரணத்தை எட்டு மாதங்களுக்கு முன்பே கூறியிருந்தார்.

அமெரிக்க அதிபராக நிக்சன் இருந்தபோது அதிபர் பதவியில் இருந்த நிக்சன் இராஜினாமாச் செய்வார் எனக் கூறியிருந்தார். அதுபோலவே நிக்சனும் ஊழல் வழக்கில் சிக்கி பதவியை இராஜினாமா செய்தார்.

ஈரான் மன்னர் ஷாவிடம் உங்கள் பதவி பறிக்கப்படும் எனக் கூறியிருந்தார். அதுபோல் ஷாவும் பதவியிழந்தார்.

இங்கிலாந்து அரச குடும்பம்

இவ்வாறு பலரை ஆச்சரியத்தில் மூழ்டித்துள்ள கின்கார்டி இப்போது இங்கிலாந்து அரச குடும்பத்தைப் பற்றி ஜோசியம் கூறியுள்ளார்.

இங்கிலாந்து அரசி எலிசபெத்துக்குப் பின் இளவரசராக முடிசூட்டப்பட்டுள்ள சார்ள்ஸ் தான் மன்னராக வரவேண்டும். அவரது மனைவி டயானா அரசி ஆவார். சார்ள்ஸுக்கு ஏதாவது நேர்ந்தால் அவரது மகன்தான் அரசர் ஆகவேண்டும். அவரது தம்பி அன்ட்ரூஸுக்கு அந்த வாய்ப்புக் கிடைக்காது. இது இங்கிலாந்து அரச மரபு.

ஆனால் இங்கிலாந்து அரச பதவி சார்ள்ஸுக்கு கிடைக்காது. அவரது தம்பி அன்ட்ரூஸ்தான் மன்னராவார் என கின்காடி ஜோசியம் கூறியுள்ளார்.

சார்ள்ஸ் அவரது மனைவி டயானா, இரண்டு குழந்தைகள் எல்லாரும் ஒன்றாக ஓர் இடத்துக்குப் போகும்போது தீவிரவாதிகள் அவர்களைக் குடும்பத்தோடு சுட்டுக் கொலை செய்துவிடுவார்கள். இதனால் அரசபதவி அன்ட்ரூசுக்கு கிடைக்கும் என கின்காடி கணித்துள்ளார்.

சார்ள்சும் டயானாவும் திருமணத்துக்கு முன் காதலர்களாக இருந்தார்கள். அப்போதே சார்ள்ஸுக்கும் டயானுக்குப் திருமணம் நடக்கும் என கின்காடி கூறியிருந்தார்.

அன்ட்ரூஸ் அரசர் ஆவார்?

அன்ட்ரூஸ் தான் அரசர் ஆவார் என ஜோசியம் கூறியுள்ள கின்காடி அன்ட்ரூசைப் பற்றி இன்னொன்றும் கூறியுள்ளார்.

இப்போதைய மனைவி சாராவை அன்ட்ரூஸ் விவாகரத்துச் செய்து விடுவார். அன்ட்ரூஸ் ஒரு பெண் பித்தர். சாரா விரைவில் குண்டாகி அழகு இழந்து விடுவார். இதனால் சாராவை அன்ட்ரூஸ் விவாகரத்துச் செய்து விடுவார். உடன் வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்வார். அன்ட்ரூசும் அந்தப் பெண்ணும்தான் இங்கிலாந்தின் அரசராகவும், அரசியாகவும் வருவார்கள் என கின்காடி கணித்துள்ளார்.

இந்திய கவர்னர் ஜெனரலாக இருந்த மவுன்ட்பேட்டன் பிரபு சில ஆண்டுகளுக்கு முன் இங்கிலாந்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். இக்கொலையை முன்பே கின்காடி கணித்திருந்தார். அதுபோல் மவுன்ட்பேட்டனும் கொலை செய்யப்பட்டதால் கின்காடி ஜோசியம் மீது இங்கிலாந்து மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. மேலும் பல தலைவர்கள் பற்றி கின்காடி கூறியுள்ள ஜோசியம் அப்படியே பலித்துள்ளதால் சார்ள்ஸ் பற்றி கூறியுள்ள ஜோசியமும் அப்படியே பலிக்கும் என நம்புகிறார்கள். இதனால் இப்போது சார்ள்ஸ் எங்கு சென்றாலும் அவருக்குப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஜோசியம் என்பது மூடநம்பிக்கை எனக் கூறினாலும் இப்படியும் நடக்குமா என எல்லாரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்.

எவ்வளவுதான் சார்ள்ஸுக்குப் பாதுகாப்புப் போட்டாலும் விதியை வெல்ல முடியுமா? அல்லது கின்காடி கூறிய ஜோசியம் வெறும் பிதற்றலா? என்ற கேள்விக்குக் காலம் தான் பதில் கூறவேண்டும். ★

தனியுடமை

வீதியோரத்தில் ஓர் ஆடு கவனிப்பார் யாருமின்றிச் செத்துக் கிடந்தது.

போக்குவரத்து ஒழுங்காக நடைபெற்றுக் கொண்டிருந்த போதிலும் அதை யாரும் பொருட்படுத்திக்கொண்டதாக இல்லை.

எல்லோரும் அவ்விடத்திற்கருகில் வந்ததும் மூக்கைப் பொத்திக் கொண்டும் வேகமாக நடந்தும் சென்றனரே அன்றி அதை எடுத்து அடக்கம் செய்யவோ அப்புறப்படுத்தவோ முயலவில்லை.

எல்லோரும் எனக்கென்ன சொந்தக்காரன் எடுத்து அடக்கம் செய்தாலென்ன? என்ற கேள்வியோடுதான் நின்றனர்.

காகம் ஒன்று செத்துக் கிடக்கும் ஆட்டுப் பிணத்தைக் கண்டு குரல் வைத்தது. காக்கை இனம் கூட்டமாகக் கூடி உண்ணத் தொடங்கின.

தூரத்திலிருந்தவாறு இந்தக் காட்சியை நாயொன்று கண்டது. அவ்வளவுதான் பாய்ந்து வந்து சேர்ந்தது. தனது குரல்வலிமையால் வள் ... வள்ளென்று குரைத்துக் காக்கைகளைத் துரத்தியது.

காக்கைகள் சிதறிப் பறந்தன. நாய் போன பின்னர் மீண்டும் வந்து உண்ண எண்ணியவாறு அவை மரக்கிளைகளில் குந்தி விட்டன.

நாய் தன் உறவினர்களை அழைக்காமல் காக்கைகளையும் உண்ணவிடாது தானே தனித்து ஒருவனாக நின்று தின்னத் தொடங்கியது.

தனியுடமையின் ஆதிக்கத்தைப்புரிந்து கொண்டகாக்கைகள் சிந்தனையில் மூழ்கின. ★

உருவகக் கதை

- வளவை வளவன் -

20 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

அமரர் முருகுப்பிள்ளை நாகலிங்கம்
(இளைப்பாறிய தலைமையாசிரியர், புங்குடுதீவு)

தோற்றம்: 7 - 8 - 1901

மறைவு: 27 - 8 - 1968

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்போமாக!

நா. சற்குணலிங்கன்,
(படப்பிடிப்பாளர்)
2 ஆம் ஒழுங்கை,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(5986)

"நாட்டிய நிகழ்ச்சிகளின்போது
உடல்வலி ஏற்பட்டால் எனக்குத் துரித
நிவாரணம் தருவது பனடோல்."

அஸ்பிரின் அடங்காதது. வளர்ந்தோருக்கும் பிள்ளைகளுக்கும் உகந்தது.

வில்லையொன்று 50 சதம்
ஒவ்வொரு வில்லையும் 500 மி. கி.
பரசிற்றமோல் கொண்டது.

வலி, காய்ச்சலுக்கு எதிரான குடும்ப நிவாரணி

செயற்திறனுக்குப் பனடோல் ஒப்பற்றது என்பதை வாசுகி நன்கறிவார். எனினும், பனடோல் மென்மையானது. அதிமென்மையான வயிற்றில்கூட அது எரிவை உண்டுபண்ணாது.

தலைவலி, காய்ச்சல், நங்கையரின் நலக்குறைவு, பல்வலி முதலிய பலதரப்பட்ட வலி, நோவுகளுக்கு எதிராக பனடோல் செயற்படுகிறது. உலகெங்குமுள்ள வைத்தியர்கள் சிபாரிசு செய்யும் பனடோல் உங்கள் வீட்டிலும் இருப்பதை உறுதிசெய்யுங்கள்.

பனடோல்

விந்றெப் வழங்கும் பரசிற்றமோல் வர்க்கம்

துரித நிவாரணி.... வயிற்றுக்கு இதமானது.

தயாரிப்பு விநியோகிப்போர்: மக்லூட்ஸ் விந்றெப் லிமிட்டெட்

JWT MW 2583

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவூதி அரேபியாவிற்கு உடனடி

வேலைவாய்ப்பு

1. **S. O. M. C**
   CLEANERS HOSPITAL
   (1) ஆண்கள் 456 SR
   (2) பெண்கள் 456 SR
2. **AIR PORT**
   CLEANERS 400 + 100 SR
   (ஆண்கள்)
   வயது 21 — 49 வரை
   பெண்கள்
   வயது 30 — 45 வரை
   இருவாரத்தில் பயணம்

KUWAIT
CLEANERS 30 KD
3 மாதத்திற்குள் பிரயாணம் செய்யலாம்.
வயது 18 — 48 வரை

T. V. TRAVELS & TOURIST
Kokuvil Station (Front)
Brown Road,
KOKUVIL.

(C-6410)

சர்வதேசக் கிரிக்கெட் அரங்கு;

சீனாவும் குதிக்கிறது

சீனாவும் சர்வதேசக் கிரிக்கெட் அரங்கில் குதிக்கிறது.

முதல்தர கிரிக்கெட் போட்டிகளில் சீனா தனது அணியை அனுப்பி இதுவரை வரவேற்கவில்லை.

இப்போது அந்த ஆசை வந்து விட்டது.

இதற்காக தனது வீரர்களுக்குப் பயிற்சியும் அளிக்க சீனா திட்டமிட்டு இருக்கிறது.

அதன்படி ஆஸ்திரேலியாவின் புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர்கள் இந்த மாதம் சீனாவுக்கு வருகிறார்கள்.

அப்படி வருகிற ஆஸ்திரேலிய அணிக்கு முன்னாள் கப்டன் பொபி சாம்சன் தலைமை ஏற்று வருகிறார்.

இங்கிலாந்து முன்னாள் கப்டன் டோனி கிரேக்கும் சீனாவுக்குப் போய் பயிற்சி அளிக்கிறார். ★

இந்திரா காங்கிரஸில் வெங்சாகர்

இந்திய கிரிக்கெட் அணியின் கப்டனாக இருந்தவர் திலிப் வெங்சாகர்.

அவர் அரசியலில் குதித்து உள்ளார்.

இளைஞர் காங்கிரஸில் சேர்ந்து இருக்கிறார்.

இளைஞர் காங்கிரஸின் தேசிய குழுவுக்கு 39 உறுப்பினர்கள் அறிவிக்கப்பட்டனர்.

அதில் வெங்சாகர் பெயரும் இடம்பெற்றிருக்கிறது. தமிழக எம். பியான ரெங்கராஜன் குமாரமங்கலமும் அதில் ஒருவர். ★

டேவிஸ் கிண்ண இறுதிப்போட்டி சுவீடன் - மே. ஜேர்மனி மோதல்

டேவிஸ் கிண்ணத்துக்கான டென்னிஸ் இறுதிப் போட்டி எதிர்வரும் டிசம்பர் 16 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இறுதிப் போட்டியில் சுவீடன் அணியும் மேற்கு ஜேர்மனி அணியும் மோதுவதற்குத் தகுதி பெற்றுள்ளன.

சுவீடன் கடந்த ஆண்டு டேவிஸ் கிண்ணத்தை வென்றது.

1985 ஆம் ஆண்டிலும் இதே இரு அணிகளும்தான் இறுதிப் போட்டியில் மோதின.

அப்போதும் சுவீடனே வென்றது. மேற்கு ஜேர்மனி இதுவரை ஒரு முறை கூட சாம்பியன் ஆனது இல்லை. ★

ஒலிம்பிக் போட்டி; சில தகவல்கள்

ஒலிம்பிக் போட்டிக்கு எந்த இடையூறும் வராமல் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று அமெரிக்கா, தென்கொரியாவுக்கு உறுதியளித்துள்ளது.

வட கொரியாவினால் ஒலிம்பிக் போட்டிக்கு இடையூறு நேரிடலாம் என்று தென்கொரிய அரசு அச்சம் தெரிவித்து உள்ளது.

தென்கொரியாவில் 40 ஆயிரம் அமெரிக்கத் துருப்புக்கள் உள்ளன. ★

இந்த ஆண்டு உலக அழகியாகத் தேர்ந்து எடுக்கப்பட்டவர் நேர்கிருன்னேக்.

இவர் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்.

'சிறப்பு அழைப்பாளர்' என்கிற முறையில் அவருக்கு அனுமதிச் சீட்டு வழங்க வேண்டும் என்று தாய்லாந்து அரசு ஒலிம்பிக் சமிட்டியைக் கேட்டது.

ஆனால் அப்படிப்பட்ட அனுமதியை வழங்க ஒலிம்பிக் கமிட்டி மறுத்துவிட்டது.

அதிகாரிகளுக்குத்தான் அத்தகைய அனுமதிச்சீட்டு தரப்படுவது வழக்கம் என்று ஒலிம்பிக் கமிட்டி கைவிரித்து விட்டது.

ஆனாலும் தாய்லாந்து அரசு தொடர்ந்து உலக அழகிக்காக ஒலிம்பிக் கமிட்டியிடம் போராடிக்கொண்டிருக்கிறது. ★

மைக் காட்டிங்குக்கு $2\frac{1}{2}$ லட்சம் ரூபா அபராதம்

இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் மைக் காட்டிங் பெண் விவகாரத்தில் சிக்கி அணியில் இருந்து நீக்கப்பட்டவர்.

கடந்த ஆண்டு பாகிஸ்தானில் நடந்த போட்டியின் போது பாகிஸ்தான் நடுவர் ரானேயைத் தாக்கிப் பேசினார்.

மைக் காட்டிங் மேலும் தனது சுயசரிதையில் அதை எழுதி இருக்கிறார்.

எனவே அவருக்கு இங்கிலாந்து கிரிக்கெட் சபை 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

இத்தண்டனையை எதிர்த்து அப்பீல் செய்ய அவருக்கு 28 நாள் அவகாசம் கொடுக்கப்பட்டது. இருப்பினும் மைக் காட்டிங் அப்பீல் செய்ய மறுத்துவிட்டார், ★

உஷா
பெருமிதமாக அறிமுகப்படுத்தும் பலவிதமான சீலிங் மின்விசிறிகள்



உஷா ஸ்டான்டர்ட்
விலை: ரூபா 1500 முதல் 1575/- வரை

- 36'', 42'', 48'', 56'' அளவுகளில்
- ஒரு அடி நீளமான கீழ்த்தண்டு, இணைப்பு வசதிகள் இரப்பர், புல்லி 2 கவசங்கள், 5 வேக ரெகுலேட்டர் என்பவற்றுடன் பூர்த்தியானது.
- மேலதிகமாக ரூ 75/- செலுத்தி மின்குமிழ் ஒன்றை இணைத்துக் கொள்ளலாம்.

அண்மையிலுள்ள உஷா விற்பனையாளரிடம் இன்றே விரையுங்கள்!

தொகையாகக் கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவு

உஷா அலங்கார விசிறிகள்
பொன் வண்ணத்திலும் அலங்கார இணைப்புகளுடனும்
விலை ரூ 1,750/- முதல் 1975/- வரை

- தேவைக்கேற்ப கண்கவரும் மண் நிறத்திலும் வெள்ளை நிறத்திலும்
- கோன்வடிவ மின்குமிழ்

தயாரித்து விநியோகிப்போர்:
உஷா இண்டஸ்ரீஸ் லிமிடெட்
68, அத்திடிய ரோட், ரத்மலானை
தொலைபேசி: 71-6922, 71-7934, 71-7341
இலங்கையின் சகல நகரங்களிலும் ... தேவைக்கேற்ற ... தொகுதி

FIRST TIME IN JAFFNA

விசேட ஆங்கில வகுப்புகள்

To Help You
Begin Build up & Enrich Your English
யாழ்நகரின் முன்னணி ஆசிரியர்கள்!!

ஆரம்பம்: 4 - 9 - 88

க. பொ. த. சா/உ, தொழில்நுட்ப, பல்கலைக்கழக, பட்டதாரி மாணவர்களுக்குரிய

AN INTEGRATED ENGLISH COURSE

ஆசிரியர்: **திரு. T. N. பஞ்சாட்சரம்**

6 மாத கால தீவிரப்பயிற்சி

★ ENGLISH SPEECH PRACTICE (SPOKEN)
★ GRAMMAR & USAGE
★ VOCABULARY ENRICHMENT
★ READING WITH UNDERSTANDING PROSE & VERSE
★ PRACTICE IN WRITING

ஆரம்ப அறிவு குறைவானவர்களுக்கும், ஏனையோருக்குமுரிய

SPECIAL

Basic English Course

ஆசிரியர்: **திரு. K. சபாநாயகம்**

3 மாத கால துரிதப்பயிற்சி.

★ SPEECH, BASIC GRAMMAR
★ READING, COMPREHENSION
★ GUIDED COMPOSITION

பலர் ஓரளவு ஆங்கில அறிவிருந்தும் ஆங்கிலத்தில் பேசத் தயங்குகிறார்கள், இக்குறையைப் போக்க

SPOKEN ENGLISH

4 மாத கால துரிதப்பயிற்சி.

ஆசிரியர்கள்: **திரு. T. N. பஞ்சாட்சரம், திரு. S. மூர்த்தி**

★ FUNCTIONAL GRAMMAR
★ SPEECH PRACTICE
★ VOCABULARY ENRICHMENT
★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
★ வகுப்புகள் யாவும் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்.

விவரங்களுக்கு நேரில், தபாலில்:

ASTAN INSTITUTE

166/1 HOSPITAL ROAD — JAFFNA
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி)

(C. 6157)

திருச்சியில் ஒரு நாள் போட்டி

பிரபல இந்திய கிரிக்கெட் வீரர்கள் ஆடும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி திருச்சியில் எதிர்வரும் செப்டம்பர் 11 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

சுனில் கவாஸ்கர், கபில் தேவ், நவஜோத் சிங்சித்து, ஸ்ரீகாந்த் ஆகியோர் விளையாடுவார்கள்.

இப்போட்டியில் ஒரு அணிக்கு கபில்தேவ் கப்டனாக இருப்பார் என்று சொல்லப்படுகிறது. ★

ஊனமுற்றவர் ஏற்படுத்திய உலக சாதனை!

இந்தியாவைச் சேர்ந்தவர் தர்னுத் ஷெனாய்.

இவர் காது கேளாதவர், வாய் பேசாதவர். இருந்தும் தனது ஊனத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை.

கடந்த ஒன்பதாம் திகதி அவர் ஜிப்ரால்டர் கால்வாயை நீந்திக் கடந்து புதிய சாதனையை ஏற்படுத்தி உள்ளார். அந்தக் கால்வாயைக் கடந்த முதல் ஊனமுற்ற இந்தியர் என்ற பெருமையை அடைந்திருக்கிறார்.

அவர் கடந்த தூரம் 30 கிலோ மீட்டர் ஆகும். அதனைக் கடப்பதற்கு 5 மணி 10 நிமிடம் ஆனது.

ஏற்கனவே 1966 ஆம் ஆண்டு மெஹர் என்ற இந்திய வீரர் இதனைக் கடந்துள்ளார். அவர் எடுத்துக் கொண்ட நேரம் 8 மணி ஆகும். ★

உலக விளையாட்டு

M '3' TRAVELS

பெருமையுடன் வழங்கும் உடனடிப்

பிரயாண ஒழுங்குகள்

சவூதி அரேபியா

		வெற்றிடங்கள்
(1)	புல்டோசர்ஒப்பறேற்றர்	2
(2)	கிறேன் ஒப்பறேற்றர்	2
(3)	எக்சிவேற்றர் ஒப்பறேற்றர்	3
(4)	A/C மெக்கானிக்	

மேற்கூறிய தொழில் வாய்ப்புகளுக்கு எம்மிடம் கடவுச் சிட்டுத் தந்தவர்கள் பிரயாணம் செய்து விட்டனர். மிகுதி வெற்றிடங்களுக்கு உடன் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

(5) கேற்றறிங் கிளினேர்ஸ் (சாப்பாடு பரிமாறும் கிளினேர்ஸ்)
(6) கனரக வாகன சாரதிகள், 6 வருட கனரக வாகன அத்தாட்சிப் பத்திரத்துடன்

குவைத்

(1) கிளினேர்ஸ்

குறிப்பு:

1. சவூதிஅரேபியாவிற்கு பிரயாணம் செய்வதற்குக் கடவுச்சீட்டுதந்தவர்களில் அநேகரின் பிரயாண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் எமது முகவர் இங்கு நிற்பதனால் கடவுச்சீட்டுத்தந்தவர்கள் முகவரை எமது காங்கேசன்துறைக் காரியாலயத்தில் சந்திக்கவும்.
2. தங்கள் வசதி கருதி எதிர்வரும் 26ஆம் திகதி முதல் இல. 1, 2ஆம் ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். இம் முகவரியில் எமது கிளைக் காரியாலயம் ஒன்று திறக்கப்படவுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

வெளிநாட்டுப் பிரயாணம் என்றதும் உங்கள் மனதில் ஒலிக்க வேண்டிய பெயர்:

M '3' Travel's

உங்கள் தேவை எங்கள் சேவை

T. INDRANATHAN
M '3' Travel's
College Road, Sothy Lane,
K. K. S.

(C6409)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊறுகாய், மோர்மிளகாய் விற்பனை

ஆலய உற்சவ, தண்ணீர் பந்தல் தேவைகளுக்கு வேண்டிய தரமான ஊறுகாய், மோர்மிளகாய் ஆகியவற்றை எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

✶ சுதேசிய ஊறுகாய்ப் போத்தல் ஒன்றின் அறிமுக விலை ரூபா 15/— மட்டுமே.

ஷி பொருட்களை கடைகளுக்கு ’மிஷன் அடிப்படையில் விநியோகம் செய்ப விரும்பும் விநியோகஸ்தர்கள் எம்முடன் தொடர்பு கொள்க.

எமது சபைக்கு பத்திரிகை முகவர்களாக செயற்பட போதிய முன் அனுபவம் உள்ளோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

சமூக அபிவிருத்திச் சபை
140, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[C/6307]

இளைஞர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம் ஆக 27

உரும்பராய்ப் பகுதியில் இளைஞர் ஒருவர் இனந் தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

எம். துரைராசா [வயது 29] என்ற இளைஞரே கொலையுண்டவராவார்.

புதன்கிழமை இரவு இவரது சடலம் யாழ்-ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டு, மரண விசாரணையின் பின் வியாழனன்று உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ஒ-10)

யாழ் பாடசாலை மாணவர்களிடையே

மதுவிலக்கு குறித்து கட்டுரைப் போட்டி

பருத்தித்துறை, ஆக 27

மதுவிலக்குப் பிரச்சாரத்தின் ஒரு நடவடிக்கையாக மாணவரிடையே கட்டுரைப் போட்டியொன்று நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையே "மதுவிலக்கு" என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டி ஒன்றை நடாத்த "அடெப்ற்" என்ற சமத்துவம், அமைதி, மதுவிலக்கு என்பனவற்றிற்கான அபிவிருத்திச் சங்கம் திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் ஒன்று ஜி. சி. ஈ சாதரண உயர்தர வகுப்புக்களுடைய பாடசாலைகளின் அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இக் கட்டுரைப் போட்டியில் பரிசு பெறும் மாணவர்களுக்குத் தங்கப்பதக்கம், வெள்ளிப் பதக்கம் மற்றும் விலையுயர்ந்த பரிசுப் பொருட்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

போட்டிக்கான சகல நடவடிக்கைகளையும் சங்கத் தலைவர் திரு. ச. செந்துராசா தலைமையில் திருமதி ஜோசப், திரு. ச. ஞானப்பிரகாசம், திரு. எஸ். ஆனந்தராசா ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர். இப் போட்டி செப்டெம்பர் மாத இறுதியில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[உ-18

ஊரடங்குவேளையில் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு, ஆக. 27

அதிகாலையில் – ஊரடங்குச்சட்ட நேரத்தில்- மோட்டார் சைக்கிளில் சென்றதாகக் கூறப்படும் முஸ்லிம் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லபபட்டார்.

இச்சம்பவம் அக்கரைப்பற்றுப் பகுதியில் கடந்தவாரம் இடம் பெற்றது.

உயிரிழந்தவர் ஜனாப் ஏ. ஆர். எம். மூஸாம்பில் (வயது 27) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரிடமிருந்து கிரனேட் ஒன்று மீட்கப்பட்டதாக இந்தியப்படை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(உ- 21)

முதல் வருட நினைவஞ்சலி

தோற்றம்:
14-4-1937

மறைவு:
7-9-1987

திதி:
ஆவணிப்பூரணை
27-8-1988

அமரர்

திரு. சரவணமுத்து சோமசுந்தரம்
(முன்னை நாள் ஊர்காவற்றுறை ப. நோ. கூட்டுறவுச் சங்க ஊழியர்)

ஐயா!

எங்கள் கனவிலும் நனவிலும் உங்கள் தோற்றம் செயல்கள் அடிக்கடி தோன்றி மறைகின்றனவே, நீங்கள் கட்டிய மனக் கோட்டைகள் எல்லாம் உடைந்து சிதைந்து போயினவே, நீங்கள் புதிதாக அமைத்த இல்லத்தில் காலடி எடுத்து வைக்கு முன்பே இறைவன் உங்களைத் தன்னுடன் அழைத்துக் கொண்டான்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்
சகோதரர், சகோதரிமார்,
உற்றார், உறவினர்.

புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.

[5971]

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திரு. அவுரன் தம்பிராசா

தோற்றம்:
10—3—1924

மறைவு:
27—8—1987

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து எமக்கெல்லாம் வழிகாட்டிய அன்புத் தந்தையே! நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் இதயங்களை விட்டு என்றும் அகலா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்;
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

72/31, இராசசிங்கம் வீதி,
யாழ்ப்பாணம்.

(5969)

5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் வி. ம. கண்ணையா
(யாழ்-மாகோ ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

மலர்வு :
12 - 12 - 1907

உதிர்வு :
23 - 08 - 1983

திதி: 27 - 08 - 1988

அன்புத் தெய்வமே!

ஆண்டு ஐந்து உருண்டோடிச் சென்றாலும் தங்கள் அழியாச் சுவடுகள் எங்கள் மனதில் ஆர்ப்பரித்து நிற்குதையா.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

மனைவி, மக்கள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்

'சாந்தி பவனம்'
மாரியம்மன் வீதி, திருநெல்வேலி.

[6014]

31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி

வள்ளியம்மை சங்கரப்பிள்ளை

அன்னை மடியில்:- 27-7- 1920
ஆண்டவன் அடியில்:- 27- 7- 1988

ஈழத்திலே எமை ஈன்ற ஈடு இணையற்ற எம் அன்பு அன்னை தெய்வமே! இமயமே சரிந்து விழுந்தது போல் எமை எல்லாம் அதிர்ச்சியுறச் செய்து எங்கே சென்று விட்டாய். எம் அன்புத் தெய்வமே மீண்டும் ஒரு முறை எம் முன்னே வரமாட்டாயா? தெய்வமே ஓலமிட்டு அழுகிறோம் ஓடி நீ வாராயோ, மாறாத அன்பினால் மகிழவைத்த தெய்வமே தீராத துயர்தன்னில் தவழ வைத்து எங்கு சென்றாய். கணப்பொழுதில் உன் கண்மூடி எம் கண் கலங்க வைத்தாயே தெய்வமே!

26-7-88 அன்று, எங்கள் தாயின் இயற்கை மரணச்செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் ஆதரவு நல்கிய பெரியோர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு எம் அன்னை தெய்வத்தின் ஆத்மா சாந்திஅடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

நன்றி
பிரிவால் வாடும்;
கணவன், மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ச. கந்தசாமி,
குசகிரி,
கைதடி கிழக்கு,
கைதடி.

(6003)

யாழ்-கொழும்பு

விமான சேவை

இன்று சனிக்கிழமை மாலை 1 மணிக்கு புறப்படும் 15 ஆசனங்களைக் கொண்ட விமானத்தில் சில வெற்று ஆசனங்கள் உள்ளன. ஆசனங்களை உடனடியாக வந்து பதிவுசெய்து கொள்ளவும்.

தொடர்பு கொள்ளவும்:

மக் ரவல்ஸ்

8, முதலாவது ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(C6424)

31ஆம் நாள் நினைவஞ்சலி

நவக்கிரியூர்

சிதம்பரப்பிள்ளை சின்னத்துரை
[இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்]

[நவக்கிரியூர் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் சிதம்பரப்பிள்ளை, திருமதி சிதம்பரப்பிள்ளை செல்லம்மாவின் அருமைப் புத்திரன்]

அன்புடனே பாசமுடன் வாழ்ந்து நீரும்
அவனிதனில் மீளாத்துயில் கொண்டுவிட்டீர்
சடுதியாகக் காலன் உம்மை அழைத்தபோது
சரியென்று தயங்காமல் சென்றுவிட்டீர்
அண்ணாவென்று அழைப்பதற்கு யார்தான் உண்டு
அறிந்தும் நீர் அழைத்தவுடன் சென்றுவிட்டீர்
நெஞ்சிருக்கும் வரை உமது நினைவு
நெஞ்சைவிட்டு என்றுமே அகலாதய்யா
பூரணை தினமதிலே பரித்த நீரும்
பூரண முக்திதனை அடைவீர் ஐயா!

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

சகோதரிகள் :- செல்வி சிவக்கொடி சிதம்பரப்பிள்ளை
திருமதி இராசமணி நவரட்ணம்
மைத்துனர்:- திரு. வைத்திலிங்கம் நவரட்ணம்

[5955]

பிரயாண ஒழுங்குகள்

GOLDEN TRAVELS & TOURS

SAUDI ARABIA

1. ஓட்டோ எலக்றிசன் 650 + 150 FA
2. ஓட்டோ மெக்கானிக் 650 + 150 FA
3. Gen. Electrician 750 + 150 FA
4. Civil Supervisor 900 + 200 FA
5. Work Scheduler 1100+100 FA
6. H v a c Split Units/ Central Technicians 900 - 1000 + 100 FA
7. A.C. Technicians 700-800+100 FA
8. Appliances Technicians 800+100 FA

SINGAPORE

கார் திருத்துனர் 500 S.Dollar (O.T. உண்டு)
ஒப்பந்தம் 2 வருடம்

SHIP: சரக்குக் கப்பலில் வேலை வாய்ப்புக்கள்
(கிரேக்கக் கப்பல்)

சம்பளம்: **500 U.S. Dollar**
ஒப்பந்தம்: 1 வருடம்

முற்பணம் அறவிடப்படமாட்டாது.

பிரயாணம் செய்யக் கடவுச்சீட்டுத் தந்தவர்கள் ஒழுங்குகள் அனைத்தும் செய்யப்பட்ட பின் பிரயாணம் செய்யத்தவறின் கடவுச்சீட்டுத் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

காரியாலயங்கள் அனைத்தும் செவ்வாய் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8-30 மணி முதல் மாலை 5.30 மணி வரையும் திறக்கப்படும்.

தலைமைக் காரியாலயம்:-

கோல்டன்
ரவல்ஸ் & ரூர்ஸ்

புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

கிளை 1: **கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**
குப்பிளான் சந்தி, குப்பிளான்.

கிளை 2: **கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**
வன்னிச்சி கோவிலடி, வல்வெட்டி.

(C 6415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூரில் கந்தசுவாமி கோவில் வீதியில்

மில்க்வைற் சகாயம்

'மில்க்வைற் தயாரிப்புகள் இருபது ரூபாவிற்கு வாங்குவோருக்குப் பொலிதீன் பையில் கவர்ச்சிகரமான பரிசுகள் வழங்கப்படும்.

இன்னும் மேலுறைகளுக்கும் விசேட பரிசுகள் உண்டு. நாளும் நற்பணி செய்திட உங்கள் ஆதரவை நாடும்

"மில்க்வைற்"

சஞ்சீவி

27- 08 - 1988 சனிக்கிழமை

பொன்னாலை வரதராஜப்பெருமாள் தேர்த்திருவிழாவில் (3-9-1988)

மில்க்வைற் சகாயம்

மில்க்வைற் தயாரிப்புகள்

இருபது ரூபாவிற்கு வாங்குவோருக்குப் பொலித்தின் பையில் கவர்ச்சிகரமான பரிசில்கள் வழங்கப்படும்.

இன்னும் மேலுறைகளுக்கும் விசேட பரிசில்கள் உண்டு.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்

பணிப் பெண்கள் தேவை

வயது: 20க்கும் 35க்கும் இடைப்பட்டவர்கள்

சிங்கப்பூருக்கும் - கனடாவுக்கும்

சம்பளம்: Rs. 2.800/-, Rs. 3.800/-

பாஸ்போட் சகிதம்

கீழ்க்காணும் விலாசத்தில்:

சனி, ஞாயிறு

காலை 10-00மணிக்கும்

மாலை 4-00 மணிக்கும் இடையில் சந்திக்கவும்.

தற்போது பணம் வசூலிக்கப்படமாட்டாது.

A. T. அலோய்

713, ஆஸ்பத்திரி வீதி,

(ஆஸ்பத்திரி றோட்

உப தபாற்கந்தோர் அருகாமையில்)

யாழ்ப்பாணம்.

(6053)

மற்றொரு தமிழ் இளைஞர் சாக்கில் சடலமாக மீட்பு

கொழும்பு, ஆக. 27

வெள்ளவத்தையில் சாக்கு மூடை ஒன்றுக்குள்ளிருந்து மற்றொரு தமிழ்இளைஞனின்சடலம் கண்டெடுக்கப்பட்டது.

பொலீஸார் வெள்ளவத்தை விவேகானந்தா வீதியை அண்மித்திருந்த ரயில் பாதைக்கு அருகில் வைத்து இந்த சடலத்தை சாக்கு மூடைக்குள்இருந்து எடுத்தனர்.

இளைஞரின் சடலத்துடன் "உரும்பராய் ராசகுமாரன் - பரணி குரூப் உளவாளி" என எழுதப்பட்ட துண்டு ஒன்றையும் பொலீஸார் கண்டெடுத்தனர் என கூறப்படுகிறது.

இதேவேளை வெள்ளவத்தை மனிங்பிளேசில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ் இளைஞரின் சடலத்தின் பிரேத பரிசோதனை அறிக்கையில் மூச்சுத் திணறலால் ஏற்பட்ட மரணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில்,...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

இதேசமயம் நீற்றுக்காய்க்குளத்திற்கும் தண்ணிமுறிப்புக் குளத்திற்கும் அண்மித்த பகுதியில் தொடர்ந்து மோதல் இடம்பெற்று வருவதாகவும்-

இம் மோதல் சம்பவங்களைத் தொடர்ந்து ஆண்டான்குளம், தண்ணிமுறிப்புக்குளம், நீற்றுக்காய்க்குளம் மற்றும் குமுளமுனை ஆகிய பகுதிகளிலிருந்து தொடர்ச்சியான ஷெல் தாக்குதலும், துப்பாக்கிவேட்டுச் சத்தங்களும் கேட்டுக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப் பகுதி எங்கும் ஹெலிக்கொப்டர் வட்டமிட்டு வருவதாகவும்-

இரவில் 'பரா' வெளிச்ச உதவி கொண்டு காடுகளில் தேடுதல் நடத்தப்படுவதாகவும் அங்கிருந்து வந்த செய்திகள் தெரிவித்தன.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக உணவுப் பொருள் பற்றுக்குறை ஏற்பட்டிருப்பதாகவும்-

வன்னிப் பகுதி விவசாயிகள் தமது விவசாய உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த முடியாது திண்டாடுவதாகவும் தெரியவந்தது.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக முல்லைத்தீவு மாவட்டம் தற்போது தனிமைப்படுத்தப்பட்டிருப்பதாக ஒரு செய்தி தெரிவித்தது.

இதே சமயம் நெட்டிகைக்குளத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வெளிப்புற அரணை தாங்கள் முறியடித்திருப்பதாக அமைதிப்படைச் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது.

இப் பகுதியில் கண்ணிவெடிகள் மீட்கப்பட்டதாகவும் அச் செய்தி மேலும் தெரிவித்தது.

(உ-எ-10-1 3)

சுடப்பட்ட...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வந்து கொண்டிருந்த பொழுது இனந்தெரியாதோரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானார்கள்.

இருவரின் சடலங்களும் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுமரண விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

எம். திருநாவுக்கரசின் சடலம் உறவினர் வருகைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (உ-10)

ஈழத் தமிழ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

த்த வேண்டுகோளையும் சம்பந்தப்பட்ட நாடுகளின் அரசாங்கங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன,

இலங்கைக்கு இவர்களைத் திருப்பி அனுப்புவதற்கான பாதுகாப்புச் சூழ்நிலைகள் இலங்கையில் ஏற்படும் வரையில்- இலங்கைத் தமிழர்களை திருப்பி அனுப்ப வேண்டாம் என்று ஐ. நா. சபை விடுத்த வேண்டுகோளும் ஐரோப்பிய நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

நிதி ஊக்குவிப்பு

இந்த வேளையில் சம்பந்தப்பட்ட 12 ஐரோப்பிய நாடுகளும் இலங்கைத் தமிழர்களுக்கு நிதி ஊக்குவிப்புத் திட்டங்களை வழங்கவும் ஆலோசித்து வருகின்றன.

சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் சொந்த முயற்சியில் வாழ்வதற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்கும் விதத்தில் இந்தத் திட்டங்கள் அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுவிட்சர்லாந்தைப் பொறுத்த வரையில் சுமார் 4ஆயிரத்து 500 இலங்கைத் தமிழர்கள் தஞ்சம் கோரியுள்ளனர். இவர்களில் ஆயிரத்து 500பேரின் விண்ணப்பங்களை சுவிஸ் அரசாங்கம் நிராகரித்திருக்கிறது. மேலும், ஆயிரத்து 300 பேரின் விண்ணப்பங்கள் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களைக் கூட சுவிஸ் அரசாங்கம் மேலும் ஒன்பது மாதங்கள் வரை அங்கே தங்கியிருக்க வசதி செய்து கொடுக்கிறது.

அத்துடன் சம்பந்தப்பட்டவர்களை சுவிஸ் அரசாங்கம் ஒருபோதும் பலாத்காரமாக வெளியேற்றுது என்றாலும்—

அங்கு சட்டத்தை மீறும் அகதிகள் மாத்திரமே பலாத்காரமாக நாட்டைவிட்டு வெளியேற்றப்படுவார்கள் என்றும்—

சுவிஸ் அரசாங்கம் இந்தச்சலுகைகளை ஒரு கொள்கையாகவே கடைப்பிடித்து வருகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-ஐ-9)

விடுதலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அந்நிய பிரஜைகள் சட்டவிதிகளின் படி கைது செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களில் பலர் உடல் உறுப்புக்களை இழந்து காயமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வந்தவர்கள்.

தற்போது இவர்கள் மீது ஆத்திரம் கொண்டு இவர்களை கைதுசெய்து காவலில் வைத்திருப்பது சட்டவிரோதமாகும்.

— இவ்வாறு அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-9)

சொற்சிலம்பம் போட்டி இல: 85

பரிசு பெற்றோர் விவரம் வருமாறு:

1. பி. பாலதயாளினி, சுதா கிளினிக், இராஜகாரியர் லேன், மானிப்பாய் வடக்கு, மானிப்பாய்.
2. இ. ஜெயந்திரன், இல: 24. பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.
3. கே. சோமதி "இந்து வாசா" புளியங்கூடல், ஊர்காவற்றுறை.

சரியான விடைகள்:

இடமிருந்து வலம்:

1. பச்சாத்தாபம்
5. மிடி
7. சதம்
9. ஊண்
10. மிகை
11. வம்பு
13. மைசூர்
15. கைவினை
18. சணல்
19. மோதகம்
21. பதர்
22. ரம்
23. மிதிலை

மேலிருந்து கீழ்

1. பஞ்சமி
2. சாமம்
3. தாமிரம்
4. படி
6. தண்டனை
8. தகைமை
11. வர்ணம்
12. புகை
14. துசகம்
16. விடுதலை
17. நமோ
20. தர
21. பதி

திருடன் பிடிபட்டான்

கொக்குவில், ஆக. 27

கொக்குவில் சம்பியன் ஒழுங்கையில் பட்டப்பகலில் சங்கிலி அறுத்துக்கொண்டு ஓடிய 20வயது இளைஞன் ஒருவன்நேற்று துரத்திப் பிடிக்கப்பட்டான்.

உண்ணா விரத...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களில் இந்திய அமைதிப் படையினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளையும்—

விடுவிக்க இலங்கை- இந்திய அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியே இந்த உண்ணாவிரதம் நடத்தப்படுகிறது.

அன்னையர் முன்னணி பிரமுகர் ஒருவர் இறை வழிபாட்டுடன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து பிற்பகல் 4 மணி வரை உண்ணாவிரதம் நடைபெற்றது.

உண்ணாவிரதத்தின் போது சமய வழிபாடுகளும் இடம்பெற்றன.

பூஸா தடுப்பு முகாமில் இருந்துவிடுதலையான ஒருவரும் —

வடக்கு - கிழக்கு பிரஜைகள் குழு இணைப்புக் குழுவின் சார்பில் ஒருவரும் –

அன்னையர் முன்னணி பிரதிநிதிகள் இருவரும்-

பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டவர்களின் பெற்றோர்கள் இருவருமாக நேற்று 6 பேர் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர்.

இவர்களுக்கு ஆதரவாக பலபொது மக்களும் பங்குபற்றினர்.

படைவாகனம் - பஸ் காரைநகரில் விபத்து

டிப்போ அதிகாரிகள் மீது தாக்கு

யாழ்ப்பாணம், ஆக 27

இந்திய அமைதிப் படையினரின் வாகனம் ஒன்றும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் ஒன்றும் மோதுண்டதால் விபத்து ஏற்பட்டது. காரைநகரில் நேற்று நண்பகல் நடந்த விபத்தை அடுத்து காரைநகர் டிப்போ அதிகாரிகள் சிலர் தாக்குதலுக்கு ஆளானார்கள்.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்று காரைநகர் களபூமி என்ற இடத்தில் இந்திய அமைதிப் படையினரின் வாகனம் ஒன்று காரைநகர் போக்குவரத்துச்சாலை பஸ் ஒன்றை விலத்திச் செல்லும் போது விபத்துக்குள்ளானது.

இச் சம்பவத்தை யடுத்து காரைநகர்போக்குவரத்துச்சாலை அதிகாரிகள் சிலர் அங்கு வைத்து தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து மேலதிகாரிகளுக்கு முறையிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

எமது நேற்றைய

★ புதிய வெளியீடு ★

சரண்ராஜ் - ரேகா

செந்தில் - S.S. சந்திரன்

"நான் சொன்னதே சட்டம்"

✶ வெகு விரைவில் ✶

"என் தங்கச்சி படிச்சவ"

குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி,

யாழ்ப்பாணம்.

(C-6425)

செல்வச்சந்நிதியில் சிறப்பாக நடந்த தேர்விழா

குருநகர், ஆக 27

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய இரதோற்சவம் நேற்றைய தினம் சிறப்பாக நடைபெற்றது.

ஆயிரக் கணக்கான பக்தர்கள் நேற்றுக் காலை ஆலயத்திற்கு வந்து கூடினர்.

துலாக் காவடிகள் பால் காவடிகள் வழக்கம் போலவே வெவ்வேறு இடங்களில் இருந்து ஆரம்பித்து தகிக்கும் வெய்யிலில் பக்தர்கள் கூட்டம் கால்நடையாக பவனி வர கோவிலை வந்து சேர்ந்தது

தொண்டைமானாறில் உள்ளமடங்களில் அன்னதானமும் வழங்கப்பட்டன. (உ-51)

44 தனியார்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தன.

இந்த 44 மினிபஸ் உரிமையாளர்களும் இன்று இந்தியப்படை உயரதிகாரிகளைச் சந்திக்கவுள்ளனர். (உ-10)

90ஆம் நாள்

நினைவஞ்சலியும்

அந்தியேட்டி அழைப்பும்



செல்வன்

வேலாயுதம் வன்னியசிங்கம்

தோற்றம்:	மறைவு:
22-03-1961	30-05-1988

அன்பு மகனாய், பாசமுள்ள தம்பியாய், நேசமுள்ள அண்ணனாய், எங்களுடன் வாழ்ந்து, எங்களைத் தீராத துயரத்தில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டு ஆறு தலடையகாலன் கையில்சரணடைந்தாயோ?

உன் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

27-08-1988 ஆம் திகதி சனிக்கிழமை கீரிமலையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், 28-08-1988 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு மிகப் பணிவுடன் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்;

தாய், தந்தை

சகோதரர்களும், சகோதரிகளும்.

ஆஸ்பத்திரி வீதி,

சங்கானை.

(5894)

மரண அறிவித்தல்

திரு. வைத்திலிங்கம் பாலச்சந்திரன்

திரு. வைத்திலிங்கம் பாலச்சந்திரன் காலமானார் இவர்குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற இராசேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி வே. ஆனந்தலட்சுமியின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தெய்வேந்திரம், திரு ஞானச்சந்திரன்(ஆகாயப்படைப்பிரிவு) திரு.இராமச்சந்திரன், திரு. பிரேமச்சந்திரன் (பிரான்ஸ்) செல்வி பாலேஸ்வரி (கனடா), செல்வி ஞானேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி சாந்தினி, திருமதி சௌந்தரம், திரு குகேந்திரன், திரு. ஞானபாலன் (சுவீஸ்) திரு. வரதராசா (பிரான்ஸ்), திரு. கருணரத்தினம் (ஜேர்மனி) திரு. மனோகரன் (சுவீஸ்) செல்வி வாசினி, செல்வி கலைவாணி, செல்வன் ஆதிபாலன் ஆகியோரின் மாமனாரும், செல்வன் பிரசாந், செல்வன் நிஷேவிதன் ஆகியோரின் பாட்டனுருமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் இறுதிக் கிரியைகளுக்காக கொத்தியாகல்லு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

ஞானச்சந்திரன்

(மகன்)

கட்டுவன்,

தெல்லிப்பழை.

(6025)

ஓர் ஆண்டு நினைவஞ்சலி

டாக்டர். சு. கதிரேசு-நயினை

தோற்றம்:	மறைவு:
02 - 04 - 1932	09 - 09 - 1987

திதி: 28 - 08 - 1988

நயினை மண் நாடறிய
நயந்தளித்த நன் மகனே!
புயலாய்த் திரிந்து
பொதுப்பணிகள் புரிந்தோனே!
வயித்திய கலா நிதியாய்-
மாநாக பூஷணியின்
தயைக் கருணைத் தொண்டனுமாய்
தன் பணிகள் தாங்கி
அயராது உழைத்த அரும் தந்தையே
ஆழ்ந்து உறங்கி ஆகுதே ஓராண்டு
அண்ணலே உம் ஆத்மா
சாந்திஅடைவதாக.

மனைவி, மக்கள்

"புலவர் வளவு"

நயினாதீவு - 5

(C.6427)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் பிறைவேற் [illegible] யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2, இலக்கத்தில் உள்ளஅவர்களது அச்சகத்தில்- 27 08 - 1988 அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publication (Pvt) Ltd 292/2, Navalar Road, Jaffna on Saturday 27th August 1988.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ் - கொழும்பு
விமான சேவை விசேட போக்குவரத்து வசதியுடன் தினசரி நடைபெறுகிறது.
முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.
TELEX MESSAGES, கடிதங்கள், சிறு பொதிகள் விமான மூலம் அனுப்பப்படும்.
MACK TRAVELS
1st - Lane, Pt - Pedro Road,
Jaffna.

சஞ்சீவி
சஞ்சிகை

27-08-1988 சனிக்கிழமை

★ குறைந்த கட்டணத்தில் விமான டிக்கற் CONFIRMATION, RECONFIRMATION and CANCELLATION
★ பாஸ்போட் பொண்டிங் இந்தியன். விசா.
ஆகியவைக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
MACK TRAVELS
Jaffna.

கருத்துக் கலசம்

பூசகர் பணி

ஓய்வூதியம் என்பது அரசாங்க ஊழியர்களுக்கு மட்டும் தான், என்று இருந்த நிலைமை மாறி வருகிறது. தனியார் சுய தொழில் துறையினருக்கும் ஓய்வூதியத் திட்டங்களை ஆரம்பிக்க அரசு முடிவு செய்தது.

இளமையில் கஷ்டப்பட்டு உழைப்பவர்கள், முதுமையில் தங்களுக்கென, ஒரு நிச்சயமான வருமானத்தைப் பெற வகை செய்வதே ஓய்வூதிய முறை. இந்த வசதி சமூகத்தின் சகல மட்டத்திலும், தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்கள், சுய தொழில் புரிபவர்கள் ஆகிய எல்லோருக்கும் செய்யப்பட்டால் பாகுபாடற்ற ஓர் சமூகக் காப்புறுதியை உருவாக்க வழி உண்டாகும்.

அந்த வகையில் சிவாச்சாரியார்களுக்கும், ஓய்வூதியத் திட்டம் கொண்டுவரப்பட இருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

வடக்கில் இப்போது நிலவும் பெரும் தட்டுப்பாடுகள் பட்டியலில் சிவாச்சாரியர்கள் தட்டுப்பாடும் முன்வரிசையில் இடம்பிடித்துள்ளது. உரிய பயிற்சியும், அனுபவமும் உள்ள சிவாச்சாரியார்கள் பற்றுக்குறையும், பயிற்சி தரும் குருகுலங்கள் போதிய அளவில் இல்லாமையும் இந்தத் தட்டுப்பாட்டுக்கு முக்கிய காரணிகள் ஆகும்.

அது மட்டுமன்றி, பயிற்சியும், அனுபவமும் உள்ள பூசகர்கள் சிங்கப்பூர் என்றும் மலேஷியா என்றும் தொழில் தேடிச் செல்வதும். பூசகர்கள் வெளியேற்றம் நடப்பதும் இங்கு நிலவும் தட்டுப்பாட்டுக்குப் பிரதான காரணம் எனக் கூறப்படுகிறது.

பூசகர் பணி ஒரு தெய்விகப் பணி. அது ஆகம அடிப்படையில், பூரண கிரியா முறைப்படி செய்யப்படவேண்டிய ஒன்று. மக்கள் மனதில் ஆன்மீக உணர்வை, பக்தி உணர்வை உருவாக்கக் கூடிய விதத்தில் மனம் ஒன்றிச் செய்யப்படவேண்டிய தொண்டு. ஆலயத்தில் நடக்கும் ஒவ்வொரு கிரியைக்கும் ஆன்மீகத் தத்துவம் உண்டு என்பர். அந்தத் தத்துவம் பிரதிபலிக்க கிரியைகள் செய்யப்பட வேண்டும். அதுவே சிறப்பு.

ஆனால் ஆலயங்களில் இப்போது அவ்வாறான கிரியை முறை அமைந்த பூஜைகளையும், பக்தி உணர்வை உண்டாக்க வல்ல பூஜைகளையும் காண்பது மிக மிக அரிதாகவே உள்ளது.

இந்தக் குறைபாடு, தட்டுப்பாடு என்பன நீக்கப்பட வேண்டும். இல்லையேல் சுயமாகவே தெய்விகப்பணியில் ஈடுபாடு கொண்ட எவரும் பூசகர்களாக வருவதற்கு வாய்ப்பு வசதிகள் செய்யப்படுவது பற்றிய மாற்று வழிகளைச் செயற்படுத்த வேண்டிய நிர்ப்பந்த நிலை உருவாகலாம்.

கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கவேண்டாம் என்றார்கள். இருக்கின்ற கோயில்களில் பூஜைகள் செய்ய ஆள் இல்லையேல், அடியவர்கள் ஒவ்வொருவரும் தாமே பூஜை செய்து கடவுள் அருளை வேண்டும் மறுமலர்ச்சி நிலையும் உருவாகலாம். ★

ஆணவம் அனைத்தும் அழிந்த நிலையில் கண்ணன் திருவடியில் மாலையான அர்ஜுனன்

குருஷேத்திரப் போர் முடிந்து விட்டது.

தர்மம் அதர்மத்தை வென்றுவிட்டது.

கௌரவர்களை அழித்துப் பாண்டவர்கள் யுதிஷ்டிரர் தலைமையில் தர்மராஜ்யம் ஸ்தாபிக்கும் நன்னாள் பிறந்து விட்டது.

பதினெட்டாம் நாள் போர் முடிந்து சூரியன் அஸ்தமிக்கும் வேளை.

அந்தக்கால முறைப்படி வெற்றி பெற்ற மன்னர்கள், மகாரதர்கள் தங்கள் வீரத்திற்கு மரியாதை பெரும் சடங்கு நிகழவேண்டியிருந்தது.

அவரவர்களின் தேரோட்டிகள் கீழிறங்கி, ரதத்தை வலம் வந்து தரையில் மண்டியிட்டு நிற்க, மகாரதர்களும் மன்னர்களும் தேரில் இருந்து இறங்கி வந்து மலர்மாலைகளை ஏற்று மக்கள் ஆரவாரத்தைக்கேட்டு மகிழ்ச்சி அடையும் நேரம் அது.

பாண்டவர்களின் ரதங்கள் வரிசையாக வந்து நிற்கின்றன.

யுதிஷ்டிரர், பீமன், அர்ஜுனன், நகுல, சகாதேவர்கள் ரதங்களில் வீற்றிருப்பது கண் கொள்ளாக் காட்சியாக இருக்கிறது.

தர்மத்தின் வெற்றியைக் கொண்டாட அஸ்தினபுரத்து மக்களில் எஞ்சியோரும், இந்திரப்பிரஸ்தப் பிரஜைகளும் கூடி நிற்கின்றனர்.

தலைவர்கள் பெறும் மாலை மரியாதையைக் கண்டு களிக்க வீரர் கூட்டம் காத்து நிற்கிறது.

யுதிஷ்டிரரின் தேர்ப்பாகன் தேரினின்றும் இறங்கித், தேரை வலம் வந்து மண்டியிட்டு மன்னன் யுதிஷ்டிரன் பாதம் பணிந்து நிற்கிறான். யுதிஷ்டிரன் கீழே இறங்கியதும் அவனுக்கு மாலை அணிவித்து 'யுதிஷ்டிரர் வாழ்க' என்று குரல் எழுப்புகிறான். 'வாழ்க, வாழ்க, என்ற மக்கள் ஒலி வானைப் பிளக்கிறது.

அடுத்து பீமனின் ரதம், பாண்டவர்களின் வெற்றிக்குக் காரணமான வீரன் அல்லவா! துரியோதனனின் துடையைப் பிளந்தவன் அல்லவா! மரியாதை சற்று அதிகமாகவே கிடைக்கிறது.

அடுத்து, அர்ஜுனன் ரதம், தேர்ப்பாகன் சாதாரணமானவனா? துவாரகாதிபதி ஸ்ரீ கிருஷ்ணன்.

பாண்டவர்களும் பகவானின் அவதாரம் என்று போற்றிப் புகழ்ந்த புண்ணிய புருஷனல்லவா அவனுக்குத் தேரோட்டி!

பின் பெருமை இருக்காதா அர்ஜுனனுக்கு? யாருக்கும் கிடைக்காத பெரும் புகழும் பாக்கியமும் தனக்குக் கிடைக்கப் போவதை எண்ணிப் பூரித்தான்.

அர்ஜுனனுக்குத் தலைக்கனம் ஏறியது. அஸ்திரம் எல்லாம் கீழே விழ அஞ்சி நடுங்கி நின்ற நிலையில், ஆசானாக கீதோபதேசம் செய்த அண்ணலை அப்போது தேர்ப்பாகனாக மட்டுமே அவன் எண்ணினான். ஒரு கணம் அறிவு மழுங்கி ஆணவம் மேலிட நின்றான்.

ஆனால் தேர்ப்பாகன் கண்ணன் கீழே இறங்கவில்லை.

எங்கும் ஒரே அமைதி. அனைவர் மனத்திலும் ஒரு விதப் பரபரப்பு.

அர்ஜுனன் ஒரு கணம் பொறுத்தான். அவன் அறியாமை அவனுள்ளே பேசியது; "கர்மத்தைச் செய் பயனை எதிர்பாராதே என்று எனக்கு உபதேசித்தானே கண்ணன், இப்போது தான் மட்டும் தேர்ப்பாகனுக்கு உரிய கர்மத்தைச் செய்யாமல் விதிவிலக்குப் பெற நினைக்கிறானே கண்ணன்?'' என்று சிந்தித்தான்.

ஒரு கணம் திகைப்பு.

அர்ஜுனா! நீ முதலில் இறங்கு. இந்தத் தேர் ஓர் விதிவிலக்கு,'' என்ற ஆணை கண்ணனிடமிருந்து பிறந்தது.

கண்ணனின் ஆணையை மீறி அறியாதவன் அர்ஜுனன். தேரில் இருந்து இறங்கவில்லை; குதித்தே விட்டான்.

கண்ணன் ஏதுமறியாதவன் போல தேரில் இருந்து இறங்கினான். அவ்வளவுதான், அர்ஜுனன் தேர் திடீரெனத் தீப் பற்றி எரிய ஆரம்பித்தது.

அனைவர் முகத்திலும் அதிர்ச்சி.

''அர்ஜுனா, எதிரிகள் உன் ரதத்தின் மீது ஏவிய மந்திர சக்தி எல்லாம் நான் அமர்ந்திருந்த காரணத்தினால் பலனற்று இருந்தது.

''உன் தேரின் முடிவு காலத்தைத்தெரிந்து கொண்டுதான் உன்னை முதலில் இறங்கச் சொன்னேன்.

''நான் முதலில் இறங்கியிருந்தால், இந்தத் தீயினின்றும் உன்னைக் காப்பாற்ற வேண்டிய நிலை வந்திருக்கும்.

இப்போதும் உன்னைக் காக்கவே நான் சம்பிரதாயச் சடங்குகளை மீறினேனே தவிர, தேரோட்டியின் கடமையைச் செய்யத் தயங்கியதால் அல்ல. சற்று நில். உன்னை வலம் வந்து மாலையிடுகின்றேன்—'' என்று சொன்னான்.

ஆணவம் அனைத்தும் அழிந்த அர்ஜுனன்தன்னையே ஒரு மாலையாக்கி, கண்ணனின் திருவடிகளில் தன்னைச் சமர்ப்பித்துக் கொண்டான். ★

- சைதன்யா -

இறைஞானிகள் நடமாடிய நல்லூர் நாயகனின் தேரடி!

முருகு என்றால் அழகு என்பார்கள்.

அழகுத் தெய்வத்தை முருகன் என்றனர் ஆன்றோர்.

முருகன் அழகன். இளையவன். தெய்வத்தன்மையும் மணமும் பொருந்தியவன்.

அவன் தமிழ்க்கடவுள், கலியுகவரதன்.

இந்நாளிலே முருகனை வணங்காதார் யாருளர்? முருகவழிபாடு இன்று பரந்து விரிந்திருக்கிறது.

பலர் புகழ் ஞாயிறு கடற் கண்டாங்கு நீல மயிலினில் வீதிவலம் வரும்மயில் வாகனன் வழிபடுவார்க்கு என்றும் யாது வாரிவழங்கும் வள்ளல். அவனை அடைந்தார்க்கு இல்லை வினை. வேலை வணங்குவதே நமக்கு வேலை. வேலை வணங்காது வேறென்ன வேலை என்றார் ஓர் அறிஞர்; உண்மை தான்.

நல்லூரிலே மூலஸ்தானத்தில் வேல்தானுண்டு. இது கூர்த்த ஞானத்தையுணர்த்தும் வேல்; நம்வினை தீர்க்க வல்லது. இருபத்தைந்து தினங்களும் இந்திரலோகம் எனக்காட்சிதரும் நல்லையின் எல்லையிற் கால் மிதித்தாலும் வினைமாளும்.

நல்லையின் நாயகனை நாளும் ஆசாரசீலராக விரதம் அனுஷ்டித்து முப்போதும் வழிபட்டு உணர்ந்து உருகிக் கண்ணீர் சசிந்து தமிழோடு இசை பாடின் அருள் கிடைக்கும் என்பர்.

சரித்திரப் பிரசித்தியும் தொன்மையும் வாய்ந்த நல்லூரில் கோயில்கொண்ட கலியுகவரதன் தமிழ் மக்களின் தனிப்பெருந்தெய்வம் அழகிய கலைக் கோயிலாகக் காட்சியளிக்கும் நல்லூர் ஆலயம் அமைந்த இடம் ஒரு புனிதமான பிரதேசம் ஆகும். இங்கு ஞானிகள் பலர் நடமாடி இறையருள் பெற்றுள்ளனர்.

சித்தர்களும், பக்தர்களும், நல்லூரான் கருணையை நாடி அங்கு கூடுவார்கள்.

கடையிற் சுவாமிகள் அங்கு நடமாடி அருள்பெற்று மகிழ்ந்த நிலையில் ஒரு சித்தர் பரம்பரையை உருவாக்கியுள்ளார்.

செல்லப்பா சுவாமிகளை நல்லூர்த் தேரடியில் யோகர் சுவாமிகள் கண்டு தரிசித்தார். நல்லூர்த் தேரடியில் எங்குருவைக் கண்டேன் என்றும் தேரடியில் தேசிகனைக் கண்டு தரிசித்தேன் என்றும் சிவயோகசுவாமிகள் தமக்குக் கிடைத்த குருவருள் பற்றிக் கூறியுள்ளார்.

- திருமதி காவேரி யோகநாதன் -

முருகன் பெருமையைச் சங்கத்தமிழில் பாடினார் நக்கீரர். முருகவழிபாடு மிகப்பழைமையானது.

அவன் சேயோன் என்று தொல்காப்பியத்தில் குறிக்கப்படுகிறான்.

சங்க இலக்கியங்களிலே முதல் நூல் திருமுருகாற்றுப்படை; சங்கத் தமிழர் முருகனுக்கு உள்ளத்தில்கொடுத்த உயர்ந்த இடம்போன்று நிலப் பகுதியிலும், மலைப்பகுதியே அவன் வைகுமிடமாகக் குறிக்கப்பட்டுள்ளது.

முருகா என்று ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றுகின்ற பெருமானை தமிழர் தம் வாழ்வில் மறந்ததில்லை. தந்தைக்கு உபதேசித்த ஞானபண்டிதன் சகல உயிர்களுக்கும் ஞானம் வழங்கவும் அவைகளின் துன்பம் போக்கவும் வல்லவன். 'உலகமுய்ய உதித்தனன்' என்கிறது கந்த புராணம்.

நல்லைக்கந்தன் எமையெல்லாம் இனியும் துன்புற விடான் என்ற எண்ணமே இதயத்தை நிறைவுசொல்கிறது. ★

நல்லூரா! நீவருக! விழுத்துணையே!

என்பெலாம் வற்றி எம்முயிரதன் இருக்கையுள்
இருக்குதோ புறத்ததோ என்றுநாம் ஏங்கிடும்வேளை
அன்பெலாம் சொரிந்து உன்னருட்பெரும் திருப்பேரொளி
ஆலயஉள் மூலவேல் அதனில்நின் றருட்சுடர்வீச
தென்பெலாம் பெற்றுன் திருவருளே தஞ்சமெனத்
திழைத்திடும் ஓர் திருப்தியில் தினமெலாம் வாழ்ந்தோமையா!
முன்பெலாம் அவுணர் மூர்க்கமற முழுதாண்ட
முதல்வனே! நல்லூரா! நீ வருக! விழுத்துணையே!

ஆதியாய் வந்துன் அருட்பெருகு திருக்கோயிற்
புழுதியாய் (ப்) புறமெல்லாம் புரண்டெழுந்து மக்கள் துன்பச்
சகதியாய் நின்று தடுமாறித் தத்தளிக்க
விடுதியாய் இருக்கவென வேலவநின் வீதியெலாம்
உதவியாய் (ச்) செய்து உன்கருணைப் பெருவெள்ளம்
மிகுதியாய் முழுக்காட்டி மெய்யருளைச் சுரந்தனையே
பதவியாய்ப் பேறு பணிவார்க்கு உவந்தளிக்கும்
நியதியாய்! நல்லூரா நீ வருக! விழுத்துணையே!

அறிவுதான் பிறழ்ந்து போம்போதுன் ஆறுமுகம்
ஆற்றல்தான் வற்றியே அகன்றிடஉன் அருட்திருக்கரமுமும்
செறிவுதான் நெருங்கித் திகைக்க உன் திருக்கைவேலும்
திசைகள் முழங்கிஅதிர; ஒலிக்கும்உன் சேவற்குரலும்
நெறியில்நாம் நின்று உழலஉன் இரு திருப்பாதமும்
நின்எழில் இருமாதர் உலாவரு திருக்காட்சியும்
பரிவினால் நின்கடைப் பார்வையும் படவிட்டது
பயமே; நல்லூரா! நீ வருக! விழுத்துணையே!

— நயினைக் கவிஞர் நா. க. சண்முகநாதபிள்ளை —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குக்கொடுப்பது மறப்பதற்கில்லை....



அடிபட்ட நாகம் அரை உயிரையும் இழந்து சடமாவது போல் கால்கள் தடுமாற, கைகளை ஊன்றிக் கொண்டு திண்ணையில் அமர்ந்தார் பாலகிருஷ்ணர்.

பீறிட்டுக் கொண்டு வந்த பெருமூச்சுடன் 'முருகா!' என்றபோதுதான் சப்பி நெல்லுப் பிடைத்துக் கொண்டிருந்த மனைவி கமலம் திரும்பிப் பார்த்தாள்.

'வந்திட்டியளே! என்னவாம்.! ஐப்பசியில் செய்யிற தெண்டாலும் இப்பவே ஆயத்தப்படுத்த வேணுந்தானே!'' கமலத்தின் வெற்றி நம்பிக்கையின் எதிர்பார்ப்புகள்.

''அவை எல்லாம் ஆயத்தம். வாற புதன்கிழமை வைக்கினமாம்... பொம்பிளை... பவானியில்லை...'' பாலகிருஷ்ணரின் வார்த்தைகள் விம்மலாகின. ''அப்ப...?'' கமலத்தின் விழிப்புக்குப் பதில்... 'மச்சான்ர தங்கச்சியாற்ற மகள் வசந்தியாம்.''

உள்ளே பச்சையரிசிக் கஞ்சியை மதிய போசனமாக்கிக் கொண்டிருந்த பவானிக்கு அதற்கு மேல் புலன்கள் இயங்கவில்லை. இருந்த நிலவும் மறைந்து உலகமே இருண்டு விட்டது போன்ற பிரமை.

'வெளியே வந்தால் பெற்றோர் மனந்திறந்து கதைப்பதையும் நிறுத்திவிடுவார்கள்'' என்று எண்ணியவளாய் உள்ளேயிருந்து செவிகளைத் தீட்டினாள்.

மனங் கொள்ளாத நிலையிலும் ''ஏதோ வேலைக்குச் செல்ல வேண்டுமே'' என்ற தவிப்பில் கொதிக்கும் வெயிலில் நெசவுசாலையை நோக்கி நடந்தாள்.

நெசவுத் தறிகள்கூட அவளிடம் இயங்க மறுத்தன. சென்ற இரு வாரமாக தறியுடன் போட்டி போட்டு வென்றவளை இன்று தறி ஏளனம் செய்கிறது.

வேலை முடிந்ததும் நேரே சுரேசின் பிடவைக் கடைப் பக்கமாகச் சென்றாள். கடைப் பையன் ''அக்கா வாங்கோ! என்ன வேணும்!'' வரவேற்றான். அவளது காதில் அவைகள் தைக்கவில்லை. பவானி நேரே காசாளர் மேசைக்குச் சென்றாள்.

''உங்களோட கொஞ்சம் தனியக் கதைக்கவேணும். அவளது விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட சுரேஸ் எழுந்து கடையின் களஞ்சிய அறைப் பக்கமாகச் சென்றான்.

''என்ன விசயம்! பவானி! ஏதும்... காசு வேணுமே!''

அவனது வினவுக்கு முன் அவள் குமுறினாள். ''உங்களுக்கு இப்ப காசுதானே பெரிசு...! ஆக்களைப் பற்றி அக்கறையில்லையே!...'' அழுகையாய்த் தொடர்ந்தாள்.

''ஏன் பவானி! என்ன விசயமெண்டு சொல்லுமன்! சொன்னாத்தானே தெரியும்!''

'!வசந்திக்கும், உங்களுக்கும் கல்யாணமாம் உண்மைதானே!'' அவள் நேராகவே விடயத்திற்கு வந்தாள்.

''நீர்... என்ன சொல்லுநீர்.! ஆர் சொன்னது! எனக்கு அப்பிடி ஒண்டுந் தெரியாது.'' சுரேஸ் பரிதாபமாய் பதறினான். அப்பா உங்கட வீட்டை போனவர்.

வாற புதன்கிழமை உங்களுக்கும் அந்த வசந்திகும் கலியாணம் என்டு சொன்னவாம் உங்க அம்மா! உண்மை தானே!

- சி. சக்தியகுமாரன் -

''என்ன பவானி! நீர் என்னில சந்தேகப் படுறீ..! உண்மையா எனக்கு ஒண்டுந் தெரியாது. அப்ப — அவை— எங்களை நிச்சயம் பண்ணின பிறகு நான் உம்மைத் தவிர வேறு ஆரையும் மனசால நினைச்சது கூடக் கிடையாது. அப்பிடியிருக்க... இப்படியொரு வம்பு.''

''அப்ப புதன்கிழமை கலியாணம் எண்டால்...'' பவானி வார்த்தையை முடிக்கும் முன் ''பவானி! உமக்குத் தெரியுந்தானே! இந்த ''ஒப்பறேசன் லிபறேச'னோட நான் பட்ட நட்டங்கள் கஷ்டங்கள்! இப்ப திரும்ப கடைக்கு முதல் போட்டதில் சொஞ்சம் கடனிருக்கு. அதை அடைக்குமட்டும் எண்டுதான் பொறுத்திருக்கிறன். கடைசி ஒரு ஆறு மாதம் பொறுத்திரும். என் செலவிலேயே கலியாணம் நடத்தி உம்மட கழுத்தில் தாலி கட்டுறன்''

''நீங்க உங்கட அம்மான்ர சொல்லுக்குக் கட்டுப்பட்டு வசந்தியைச் செய்தால்...''

''என்ன பவானி! உமக்கு இன்னும் என்னில நம்பிக்கையில்லை.! நான் திருமணம் பண்ணிறதெண்டால் உம்மத்தான்...!'' ''சத்தியமா!''

சுரேஸ் பவானயின் தலையில் அடித்துச் சத்தியம் செய்கின்றான். பவானி ஒருவித நிம்மதியுடன் விடைபெற்றுச் செல்கிறாள். ஆனால் சுரேஸ் நிம்மதியிழந்தான்.

தலையே வெடித்து விடும் போல் இருந்த குழப்ப நிலையில் சுரேஸ் கடையைப் பூட்டிக் கொண்டு புறப்படுகிறான்.

★ ★ ★

''என்ன தம்பி! இன்டைக்கு வேலைக்கு வந்திட்டாய்! ''வீட்டில் அம்மாவின் வுரவேற்பு வரவேண்டிய அவசரமான அலுவலொன்று- வந்தன்''

அவன் விறைப்பான பதிலுடன், கடைத்திறப்பை மேசையில் எறிந்து விட்டு கிணற்றடிக்குச் சென்று கால் முகம் கழுவிக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்து கொண்டான்.

அம்மா தேநீருடன் வந்து ''இண்டைக்கு நீ வேளைக்கு வந்தது நல்லதாய்ப் போச்சுது. கனக்கக்கதைக்கவேணும். நேரம் கிடைக்கிறேல்லை நீயும் ஆறுதலா நிக்கிறேல்லை இந்த கலியாண வீட்டு அலுவல்களையும் பாக்கவேணும்!''

''ஆருக்குக் கல்யாணம் சுரேஸின் அலட்சியமான கேள்வி

''வசந்திக்கும் உனக்குந் தான்''

உங்களுக்கென்ன விசரே! சுரேஸ் கொதித்தான். கதைக்க வந்த விடயமே சபைக்கு வந்த திருப்தி.

''ஏன்! அவள் உனக்குச் சொந்த மச்சாள். அதோட வடிவான பெண் வேலையும் பார்க்கிறாள்......''

''அதுக்காக எனக்கும் பவானக்கும் பேசின பேச்சை உதறி எறியிறதே! ''அன்னை முடிக்கு முன் குறிக்கிட்டான் சுரேஸ்.

''அது பேச்சளவில் தானே நிண்டது. எழுத்தில் இருந்தாத்தான் பிரச்சினை''!

''அந்தக் கதை ஒண்டும் தேவையில்லை. எனக்கு இப்ப கல்யாணம் அவசரமில்லை. –தலைக்கு மேலை கடன் இருக்குது. அதை ஒரு வழியா அடைச்சாத்தான் எனக்கு நிம்மதி''

''அதுதானே நான் உனக்கு நல்ல வழியைக் காட்டுறேன். அண்ணை மகளுக்கெண்டு குடுக்குற சிதனக் காசில அந்தக் கடனுகளை அடைச்சுப் போட்டுப் பிறகு நீ உழைச்சுத்தேடலாந்தானே!'' அம்மாவின் சமாதானம்.

''ஓ! ஓ! இது நல்ல வழியில்லை. பெத்த பிள்ளைக்குச் செய்யிறது...! ஒரு பெண்ணை ஏமாத்தின பாவந்தான் சேரும். அதை விட மற்றவன் காசில நான் கடன்கட்டோணுமெண்டு எனக்குத் தலைவிதியும் இல்ல.''

''உனக்கிப்ப நான் சொல்லுறது விளங்காது! பிறகு அனுபவிக்கேக்க தான் விளங்கும்.! நானும் உன்னை நம்பி அதுகளிட்ட சம்மதம் குடுத்திட்டன்,! அதுகளும் ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்குதுகள்...... நீ ..இப்ப முடிவா என்ன சொல்லுறாய்?''

''நான் திருமணம் பண்ணிறதெண்டால்பவானியைத்தான் அதில உங்களுக்கு விருப்பமில்லையெண்டா அவளை என்னோட வாழவைக்கிற வழியும் எனக்குத் தெரியும். வாக்குக் குடுத்துப் போட்டு மீறிற பழக்கம் எனக்கில்லை.''

சுரேஸின் உறுதியான பதில் அவளை சற்றுக் கலங்க வைத்தது.

''அவள் பவானி உன்னை மயக்கிப் போட்டாள். கடவுளே! இப்ப நான் என்ன செய்யிறது?''

அம்மாவின் புலம்பலுக்கு சுரேஸ் இறுதி வழி கூறினான்.

''அம்மா! இப்ப வசந்தி வீட்டபோய் முதல்ல குடுத்த கலியாணப் பேச்சை வாபஸ் வாங்குங்கோ. அப்பிடியே பாலகிருஷ்ணன் மாமா, கமல மாமியிட்டப் போய் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வாங்கோ! அதுக்குப் பிறகுதான் நான் உங்கட பிள்ளை.

உறுதியான பதிலுடன், தாயார் கொடுத்த தேனீரையும் பருகாமல் அப்பால் சென்று வானொலியை முடுக்கி விட்டு இசை மழையில் நிம்மதியைத் தேடினான் சுரேஸ்.

அம்மாவும் மன்னிப்புக் கோரும் படலத்திற்கான பாதயாத்திரையைத் தொடங்கினாள். அவள் இப்போதுதான் உண்மைத் தாய்மையடைகிறாள். இனி அவளுக்கு அந்த ஏழை பவானி தான் மருமகள். ★

(யாவும் கற்பனை)

சஞ்சீவி சிறுகதை

மிருகங்களின் பாலின் பயன்

★ பசும்பால், பசி, மயக்கம், பலவீனம், ரத்தக் குறைவு இவற்றுக்கு நல்லது.

★ எருமைப்பால் குளுமை தரும். பித்தத்தை நீக்கும்.

★ வெள்ளாட்டுப் பால் மயக்கம், ஜுரம், சுவாசம், ரத்தக் குறைவு இவற்றுக்கு நல்லது.

'அவார்' கவிஞன் கண்ட கனவு!

சோவியத் நாட்டைச் சேர்ந்த ஒரு கவிஞன் ரசூல் கம்சதோவ் என்பது அவனுடைய பெயர். அவன் 'அவார்' மொழிக்குச் சொந்தக்காரன்.

அந்த அவார் மொழி மலைப்பகுதியிலே வாழுகிற மக்கள் பேசுகிற வளராத மொழி. ஒரு பின்தங்கிய மொழி தமிழிலே இரண்டு லட்சம் சொற்கள் உண்டு என்று சொன்னால் அந்த அவார் மொழியிலே பத்தாயிரம் சொற்கள்தான் இருக்க முடியும். அதுவும் இலக்கியச் செல்வத்தை, இலக்கண வரம்பைப் பெறாத மொழி. அதற்கென ஒரு எழுத்து வடிவம் கொண்டு எழுதப்படாத ஒரு மொழி. அந்த மொழிக்கு சொந்தக்காரன் ஒரு கவிஞன். அருமையான கற்பனை உணர்வுகளிலே திளைத்தவன். அவனுடைய கவிதைகளை சோவியத் நாட்டில் பல்வேறு மொழிகளிலே மொழி பெயர்த்து வழங்கி இருக்கிறார்கள். அது ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டு வந்திருக்கிறது

அவன் சொல்லுகிறான்:

''நான் தூக்கத்தில் ஆழ்ந்தேன். கனவு ஒன்று என்னை எங்கோ கொண்டு சென்றது. ஒரு பெரிய மலை. அந்த மலைப் பாதையிலே நான் நடந்தேன், ஒரு பக்கம் மடு இன்னொரு பக்கம் மலைச் சிகரம். இடையிலே நடக்கிறேன். நடந்து கொண்டே இருக்கிற நான் களைப்படைகின்றேன். தளர்ச்சியுறுகின்றேன். மெல்ல என் கால்கள் தடுமாறுகின்றன, என் உடலிலே வலுவில்லை தள்ளாடி சாய்ந்து விடுகிறேன். சாய்ந்ததால் உருண்டு விழுகின்றேன். உருண்டு கிடக்கிற எனக்கு மூச்சும் இல்ல, பேச்சும் இல்லை. நினைவு சரியாக இல்லை எங்கே விழுந்தோம் என்று அதுவும் புரியவில்லை. இருள் கவ்வும் நேரம் பனி படர்ந்த நிலை. அங்கு நான் பேச்சு மூச்சற்று கிடக்கிற நேரத்தில் என் உயிர் இப்போதே அடுத்த வினாடியோ பிரிந்துவிடும் என்ற எண்ணம் எனக்கு வந்துவிட்டது. இனிப் பிழைக்கமாட்டேன் என்ற அந்த எல்லைக்கே நான் போய் விட்டேன். வானத்திலே பருந்து வட்டமிடுகிறது. ஓநாய் ஓலம் கேட்கிறது. என் உடல் அதற்கு இரையாகி விடும் என்று எனக்குப் புரிகிறது. என்னுடைய உடலைப் புதைப்பதற்குக் கூட நான் வாழ்ந்த இடத்திலே வழி செய்து கொள்ள முடியாமல் போய்விட்டேன். யாரையும் கேட்டுக்கொள்ள முடியாமல் அனாதையாகிவிட்டேன். முதலில் இப்படி எண்ணிக் கொண்டிருந்தேன். எண்ணமும் மங்கிப் போய்விட்டது. காது பஞ்சடைந்தது. கண்பார்வையும் மங்கிற்று. எல்லா நம்பிக்கைகளும் அற்றுப்போய்விட்டேன்.

ஆனால் எங்கோ நீண்ட தொலைவிலே யாரோ இரண்டு பேர் பேசுவதாக ஒரு சத்தம் கேட்டது. அப்படிப் பேசிக் கொண்டே வழியோடு போனவர்கள் என் தாய்மொழியிலே பேசிக் கொண்டு போனார்கள். அவர்கள் பேசுவது என் தாய் மொழி என்று தெரிந்த உடனேயே எனக்கு உயிர்வந்து விட்டது. அதிலே உணர்ச்சி பெற்ற நான் உயிர்பெற்றேன். என் தாய் மொழியிலே இரண்டு பேர் பேசிக் கொண்டு போன அந்த ஓசை செத்துப் போன பிணமான என் உடம்பு உயிர்பெற்று மறுபடியும் உணர்ச்சி கொள்ளக் கூடிய ஒரு நிலையை எனக்குத் தந்தது. ஆம். என் தாய் மொழி என்னை மீட்டது'' என்று அந்தக் கவிஞன் சொல்லுகிறான்

மேலும் ''என் தாய் மொழியைவிட ஆற்றல் பெற்ற மொழி சோவியத் ரஷியமொழி. என் தாய் மொழி எழுத்து நடையுள்ள மொழியல்ல. அந்த எழுத்து நடையில்லா மொழியை இன்றைக்கு வேறு மொழி எழுத்துக்களிலே எழுதுகிறோம். ஆனாலும் என் தாய் மொழி என்றைக்கேனும் இறந்து விடும் என்ற செய்தி எனக்கு வருமானால் அதற்கு முன்னாலே நான் இறந்து விடத்தான் விரும்புவேன். நான் இறந்த பின்னர் தான் என் தாய் மொழிக்கு ஒரு முடிவு வரலாம். என் தாய்மொழி இறந்த பின்னாலே நான் ஒரு நாளும் வாழ விரும்பமாட்டேன்'' என்று அந்தக் கவிஞன் பாடினான். ★

சிதைந்த செயற்கைக் கோளினால் விண்வெளிச் சூழல் கேடு!

விண்ணில் ஏவப்பட்டு சிதைந்துபோன செயற்கைக் கோள்களின் இடிபாடுகள் ஆகாயத்தில் மிதந்துகொண்டிருப்பதால் எதிர்காலத்தில் மனித குலத்திற்குப் பெரிய ஆபத்தை விளைவிக்கக் கூடிய அபாயம் உள்ளது! 1961 முதல் சுமார் 80 செயற்கைக் கோள்கள் விண்ணில் சிதைந்து, அவற்றின் இடிபாடுகள் மிதந்து கொண்டிருக்கின்றன. ஒரு செ. மீ. முதல் 10 செ மீ. வரை நீளமுள்ள சுமார் 70000 துண்டுகள் தற்போது வானில் மிதந்து கொண்டிருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது!

சிதைந்துபோன செயற்கைக் கோள்களின் துண்டுகள் வானில் சுற்றிக் கொண்டிருப்பதால் மனித குலத்துக்குப் பெரும் அபாயம் ஏற்படக் கூடும் என்று வான் பௌதிக ஆராய்ச்சியாளர் ராபர்ட் கல்ப் எச்சரித்துள்ளார்.

ராபர்ட் கல்ப் தற்பொழுது கொலராடோவில் உள்ள வான் பௌதிக இயல் ஆய்வுக்கூட கூட்டு இயக்குநராகப் பணிபுரிந்து வருகிறார்.

அமெரிக்கப் பத்திரிகையான 'ஸ்பேஸ் வொர்ல்டு' வானைச் சுற்றி வரும் செயற்கைப் பொருளைப் பற்றிக் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது. வானில் சுற்றிவரும் துண்டுகளில் ஒரு சென்டி மீட்டர் நீளமே உள்ள ஒரு சிறிய துண்டு அதிவேகத்தில் செல்லும் செயற்கைக்கோள் ஒன்றின் மீது உராய்ந்தால் கூட போதும்! கைஎறி குண்டு ஒன்றினால் ஏற்படும் நாசத்தை விளைவித்துவிடும் என்று 'ஸ்பேஸ் வொர்ல்டு' பத்திரிகை எச்சரித்துள்ளது.

அமெரிக்கா முன்னர் அனுப்பிய டெல்டா ராக்கெட் ஒன்றில் பூசப்பட்டிருந்த பெயிண்ட் துகள் ஒன்று 1983 ஆம் ஆண்டு சேலஞ்சர் விண்கலத்தில் மேற்பகுதியில் மோதிய போது 5000 டாலர் மதிப்புள்ள காற்றுத்தடுப்பினை பிய்த்துச் சென்றுவிட்டது!

தற்பொழுது வானில் மிதக்கும் இத்துண்டுகளின் எண்ணிக்கை அபாய அளவை எட்டவில்லை. ஆனால் தற்போதைய வேகத்தில் அவை அதிகரித்தால் அபாயம் ஏற்படக்கூடும் என்று 'ஸ்பேஸ் வொர்ல்டு' கட்டுரையின் ஆசிரியர்கள் ஜான்சன், டாரென் எஸ். மெக்னைட் ஆகிய இருவரும் எச்சரித்துள்ளனர். அவர்கள் மேலும் கூறுவதாவது; இத்தகைய நிலை என்று ஏற்படுமென்று கூற முடியாது. ஆனால் இத்தகைய நிலை ஏற்பட்டுவிட்டால் தொடர் விளைவுகள் ஏற்படும். அவற்றை மனிதர்கள் தடுக்க முடியாத நிலை ஏற்படும்!

1986 இல் பிரான்சின் ஏரியன் ராக்கெட் ஒன்று வெடித்துச் சிதறியபொழுது 500 துண்டுகளாகப் பிரிந்தது. அவை வானில் சுற்றுவதை ராடார் மூலம் உறுதி செய்ய முடியும்.

விண்வெளியில் சுற்றும் செயற்கைக்கோள்களில் இயக்ககாலம் முடிந்தவுடன் அவற்றுக்குப் பதிலாகப் புதிய செயற்கைக் கோள்களை வானில் ஏவுவதைத் தவிர்த்து அந்தச் செயற்கைக்கோளுக்கே எரிபொருள் வழங்கி இயக்கினால், மேலும் மேலும் செயற்கைக்கோள்களை அனுப்புவது குறையும்.

மேலும் தானாகச் சிதையும், செயற்கைக்கோளின் பாகங்கள் விரைவாக அழிக்கக்கூடியதாக இருந்தால் இந்தப் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு காணலாம்: ★

பசுவின் குரல்!

சிவ சம்பந்தம் பெற்ற நந்தியின் தொடர்பு கொண்ட பசுக்கள் நாங்கள். நாங்கள் சிவன் ஆணைப்படி நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமலை ஆகிய இனங்களாகத் தோன்றி உலகமெங்கும் பல்கிப்பெருகினோம். நாங்கள் தருகின்ற பால், அதினின்றும் தயிர், அதனின்றும் நெய், என்னும் மூன்றோடு எங்கள் சாணம், சலம் ஆகிய இரண்டும் சேர எங்கள் பெயரால் ஐந்து பூசைப்பொருளாகி உள்ளன. அவை பரிசுத்தமான பஞ்சகௌவியங்கள். கௌ என்பது ஆங்கிலத்திலும் பசு. சிவபூசைக்கு இந்த ஐந்தும் தருகின்ற பசுக்களாகிய எம்மைப் பாராட்டித் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் ''ஆவினுக்கு அருங்கலம் அரன் அஞ்சாடுதல்'' என்றார்.

சிவசின்னங்களுள் முதலில் மகிமைவாய்ந்த திருநீறு எங்கள் புனிதசாணத்தின் நீறே. எங்கள் சாணத்தை ஏந்தினால் அது சாந்திரம், தாமரை இலையில் ஏந்தினால் பௌட்டிகம், நிலத்தில் விழுந்தபின் எடுப்பது காமதம் என்பர். தாமரையிலை தட்டுப்பாடாயின் வாழையிலையில் ஏந்துக. அது நல்லது.

பஞ்சகௌவியங்களில் அதிக சாணத்தோடு பஞ்ச வில்வங்களான வில்வை, மாவிலங்கு, விளா, கிளுவை, நொச்சி என்பவற்றையும், நன்றாகச் சேர்த்துப் பிசைந்து விரட்டி செய்து சூளையிட்டு நீறு பெறலாகும். ★

— தொகுப்பு: க. கனகராசா

யாழ். நகர வாசிகளே!

காலையில் எழுந்ததும் உதயன் வாங்குவதற்காகக் கடைக்குச் செல்கிறீர்களா?

உங்களுக்கு ஏன் அந்தச் சிரமம்?

உடனடியாக உதயசேவையில் சேர்ந்துவிடுங்கள்!

விடியும் வேளை உதயன் உங்கள் வீடு தேடி ஓடி வருவான்!!

உதயசேவை

இலவசம்! இலவசம்!!

யாழ். மாநகர பிரதேசத்திற்குள் வதியும் வாசகர்களுக்கு

விநியோகக் கட்டணம் எதுவுமில்லை.

தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:

விநியோக முகாமையாளர்,
உதயன் / சஞ்சிவி
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சாமிர்தம் பலாச அமிர்தம்

ஹிட்லரைச் சந்தித்து நேதாஜி கேட்ட உதவி!

ஜேர்மனியில் சுபாஷ் சந்திரபோஸ், ஹிட்லரைச் சந்தித்தார். எல்லா வெளிநாட்டவரும் இந்தியரிடம் வழக்கமாகக் கேட்கும் 'உங்களுக்கு என்ன உதவி வேண்டும்' என்ற கேள்வியைக் கேட்டார் ஹிட்லர்.

'நீங்கள் எழுதியுள்ள 'மெயின்கேம்ப்' என்ற புத்தகத்தில் இந்தியர்கள் பற்றி இழிவாகச் சில பகுதிகள் காணப்படுகின்றன, அப்பகுதிகளை நீக்கிவிட வேண்டும். இது தான் நீங்கள் செய்ய வேண்டிய உதவி' என்ருர் சுபாஷ் சந்திரபோஸ்.

ஹிட்லரோ, 'நான் எழுதியது சரியே! இந்தியர்கள் அச்சமும், பலவீனமும் கொண்டவர்களாக இல்லாமலிருந்தால் சில லட்சம் ஆங்கிலேயர்களுக்கு பலகோடி இந்தியர்கள் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் அடிமையாக இருக்கின்ற அவலநிலை ஏற்பட்டிருக்குமா? என்ருர்:

வேதனையோடு இதைக் கேட்டுக் கொண்டிருந்த சுபாஷ் தலைநிமிர்ந்து, 'எங்களிடம் நவீன ஆயுதங்கள் இருந்திருந்தால் ஆண்மையில், ஆற்றலில் உலகில் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல என்பதைக் காட்டியிருப்போம்' என்ருர் சுபாஷ் சந்திரபோஸ்.

ஹிட்லர் மகிழ்ச்சியுடன் சுபாஷின் கையைக் குலுக்கிஞர். சுபாஷின் வேண்டுகோளை ஏற்று, இந்தியர்கள் பற்றி இழிவாக எழுதியதை நீக்கிஞர்.

அச்சமும், பலவீனமும் அப்புத்தகத்திலிருந்து போய் விட்டன.

★ ★ ★

ரஷ்யாவின் தாஷ்கண்டில் கிடைக்கும் திராட்சைப் பழம் புகழ் பெற்றது. இந்தத் திராட்சைப் பழம் மெலிந்து நீளமாக நுனிப்பகுதி வளைந்து இருப்பதால் இதை 'மணமகளின் சுண்டுவிரல்' என்று செல்லமாக அழைக்கிருர்கள்.

★ உலகிலுள்ள திரை அரங்குகளிலே மிகப் பெரியது ஹாவஞவிலுள்ள 'பிளான்க்விடா' திரை அரங்கம்தான். இதில் 6500 பேர் ஒரே நேரத்தில் படம் பார்க்கலாம்.

எல்லாம் 'புதன்' மயமே!

இந்திரா காந்திக்கும் புதன்கிழமைக்கும் என்ன தொடர்பு?

31. 10. 1984 காலை 9. 10 மணியளவில் இந்திரா சுட்டுக் கொல்லப்பட்டார்.

அன்று புதன்கிழமை.

இக்கொலை தொடர்பாக நீதிபதி மகேஷ் சந்திரா வழக்கை விசாரித்து சத்வன் சிங், கேஹர்சிங், பல்பீர்சிங் ஆகிய ஆகிய மூவருக்கும் 26. 1. 1986 இல் மரணதண்டனை விதித்தார்.

அன்றும் புதன்கிழமை.

மூன்று எதிரிகளும் மரண தண்டனையை ஆட்சேபித்து புதுடில்லி சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்தனர்.

மே 11 ஆம் திகதி அப்பீல் விசாரணை முடிந்து தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது.

அன்றையை தினமும் புதன்கிழமை.

சென்ற 3 ஆம் திகதி புதுடில்லி சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கியது.

இரண்டு எதிரிகள் மீதான மரணதண்டனை உறுதி செய்யப்பட்டது. மூன்ருவது எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

இந்திராகாந்தி

அன்றும் புதன்கிழமையே. ★

அடகு முறை எப்போது வந்தது?

ஒரு பொருளை பிணையாகப் பெற்றுக்கொண்டு பணம் கொடுப்பது 'அடகு' முறையாகும்.

சீனவில் 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே 'அடகு' முறை இருந்துவருகிறது. அங்கு அடகு பிடிப்பவர் 3 சதவீத வட்டியே வாங்கலாம். அடகுவைத்தோர் பணம்கொடுத்து பொருளைத் திருப்ப 3 ஆண்டுகள் வரை காலக்கெடு உண்டு.

அடகுமுறை ரோமாபுரியிலும், கிரேக்க நாட்டிலும் நடந்துவந்ததற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. ரோமானிய அடகுமுறைகளை ஒட்டியே இக்காலத்து ஐரோப்பிய நாட்டு விதிமுறைகள் இருந்துவருகின்றன.

ஐரோப்பாவில் இப்போதுள்ள அடகுமுறை முதன் முதலில் தோன்றியது இத்தாலி நாட்டில்தான். 12 ஆம் நூற்ருண்டில் 'போப்'பாக இருந்தவர்கள் ஏழைகளுக்கு பண உதவி செய்வதற்காக வட்டியின்றி அடகின்பேரில் கடன் கொடுத்து வந்தனர்:

ஆனால் இம்முறையில் நஷ்டம் ஏற்பட்டதால் வட்டி வாங்குவது தவருகாது என்று முடிவுசெய்யப்பட்டது.

இத்தாலியில் இருந்து அடகுமுறை ஐரோப்பா முழுவதும் பரவியது. பிரான்ஸ் நாட்டில் அரசாங்கமே 'அடகு' முறையை செயற்படுத்திவருகிறது.

1 ஆம் வில்லியம் இங்கிலாந்தை ஆளத் தொடங்கிய போது அங்கு அடகுமுறை வந்தது. ஜேர்மனியிலும், ஆஸ்திரேலியாவிலும் அரசும், தனிப்பட்டவர்களும் தனித்தனியாக அடகுகடை நடத்திவருகிருர்கள்.

தமிழ்நாட்டில் 'ஒத்தி, முறையும், 'அடகு' முறையும் மிகப் பழைமையானவை என்று தெரிகிறது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பழம்பெரும் புலவர்கள் எழுதிய பாடல்களில் 'அடகு' முறை விளக்கப்பட்டுள்ளது.

அடகுப்பொருளை பாதுகாப்பதற்காக ஏற்படும் விசேஷ செலவை, அடகு வைப்பவரிடம் இருந்து அடகு பிடிப்பவர் வாங்க உரிமைஉண்டு. அடகு வைத்தவர் குறிப்பிட்ட நாளில் பணத்தைக் கொடுத்து பொருளை மீட்காவிட்டால், அடகு பிடித்தவர் பொருளைத்தன்னிடமே வைத்துக்கொண்டு அடகு வைத்தவர்மீது வழக்குத்தொடரலாம், விற்கக்கூட உரிமை உண்டு.

ஆனல் பொருளை விற்பதற்கு முன் அடகு வைத்தவர் கடைசிநேரம்வரை திருப்பிக்கொள்ளலாம்.

அடகு பிடித்தவர் வீட்டில் அடகுப்பொருளுக்கு ஏதேனும் சேதம் உண்டானல் பொருளை வாங்க மறுத்து அடகு வைத்தவர் கோர்ட்டில் வழக்குத்தொடரலாம். ★

பெண் என்ருல் சீன இரங்காது!

'ஒரு குடும்பம், ஒரு குழந்தை' என்ற கொள்கையை சீன அரசு தளர்த்தியிருக்கிறது.

பிறக்கும் ஒரு குழந்தையும் பெண்ணுகப் பிறந்துவிட்டால் கிராமவாசிகள் மிகவும் கவலைப்படுகிருர்களாம். அதனுல் பெண் குழந்தை பிறந்தால் அவர்கள் இன்னும் ஒரு குழந்தையைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது தளர்த்தப்பட்ட விதிமுறை.

உலகில் மக்கள் தொகை அதிகமாக உள்ள நாடு சீன. மக்கள் தொகை வளர்ச்சியைக் குறைக்க விரும்பிய சீன அரசு பத்து ஆண்டுகளுக்கு முன்பு 'ஒரு குடும்பம் ஒரு குழந்தை' என்ற கொள்கையை அறிமுகப்படுத்தியது. நடைமுறை ரீதியில் அந்தக் கொள்கையைச் சரியாக அமுல்படுத்த முடியவில்லை என்பதை சீன இப்போது ஒப்புக்கொண்டு விட்டது.

'பெண் குழந்தை பிறந்தால் ஆண் குழந்தையை விரும்புகின்றனர். எனவே இதில் கட்டாயங்கள் சரிவரவில்லை என்பதால் கொள்கையில் சிறிய மாற்றம் செய்துள்ளோம். அதன்படி முதலில் பிறப்பது பெண்ணுக இருந்தால் அவர்கள் மீண்டும் ஒரு குழந்தை பெற்றுக் கொள்ளலாம். அதுவும் பெண்ணுகப் பிறந்துவிட்டால் நாங்கள் பொறுப்பில்லை. முதலில் பிறப்பது ஆண் குழந்தை என்ருல் அந்தக் குடும்பத்துக்கு ஒரு குழந்தை போதும்'' என்று குடும்பநல அதிகாரிகள் கூறினர்.

இந்தக் கொள்கை அமுலில் இருந்தபோதும், அதனுல் பெரிய அளவில் பயன் ஏதும் ஏற்படவில்லை என்பதுதான் உண்மை. காரணம் சீன மக்கள் தொகையில் 19 சதவீத குடும்பங்களில் தான் ஒரு குழந்தை என்ற திட்டம் பின்பற்றப்பட்டிருக்கிறது.

இதற்கிடையில் இந்தக் கொள்கை மாற்றத்தால் சீனவில் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதற்காக ஐ. நா. சபை எடுத்துக்கொண்ட விசேஷ முயற்சிகளும், அதற்காக ஒதுக்கப்பட்ட நிதியும் வீணுகப் போகுமோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. காரணம் இதற்காக பீகிங்கில் தனி அலுவலகமும், அதிகாரிகளும் உள்ளனர். ஒரு குழந்தை கொள்கை தளர்த்தப்பட்டது குறித்து அவர்கள் வருத்தமடைந்துள்ளனர்.

இந்த அலுவலக உயர் அதிகாரி மேன்பிரட் குலேசா கூறுகையில், ''ஆணுக இருந்தாலும் பெண்ணுக இருந்தாலும் எதிலும் சமம் என்று நாம் கூறுகிருேம். ஆனல் இப்போது இந்த மாற்றத்தைப் பார்த்தால் ஆண் குழந்தை என்ருல் உயர்ந்தது; பெண் குழந்தை என்ருல் மட்டம் என்று கருதுவதுபோல உள்ளது'' என்ருர்.

இதே வேளை —

சீனவில் பிறக்கும் குழந்தை பெண்ணுகவோ அல்லது ஊனமுற்ற தாகவோ இருந்தால், அதைத் தலை முழுகி விடும் பழக்கம் பெற்ருேர்களிடம் அதிகரித்து வருகிறது.

தலைநகர் பீகிங் ரயில் நிலையத்தில் மட்டும் கடந்த 5 மாதங்களில் 18 பச்சைக் குழந்தைகள் அனுதையாக விடப்பட்டு உள்ளனர்.

கடந்த ஆண்டு இதே ரயில் நிலையத்தில் 38 குழந்தைகள் அனுதையாகக் கண்டுபிடிக்கப்பட்டன. ★

500 கோடி ரூபாவைத் தண்ணீரில் 'மிதக்க' விட்ட அதிசய மனிதர்!

ஹிட்லர் எப்படி ஒரு போர் வெறியன் ஆனன்? ஷேக்ஸ்பியர் ஏன் உலக மகா இலக்கிய வாதியாக உருவெடுத்தார்? அகில உலக அதிசயங்களில் ஒன்ருன தாஜ்மகாலை வடிவமைக்க ஷாஜகானைத் தூண்டியது எது? இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் மனேதத்துவ அறிஞர்கள் தரும் விளக்கம் இது தான்:-

ஒவ்வொரு மனிதனையும் ஆட்டிப்படைக்கும் அடிப்படை உணர்வு ஒன்று உண்டு. ஆங்கிலத்தில் இதை ''லிபிடோ'' என்பார்கள். அநேகருக்குப் புரிகிற மொழியில் இதை விளக்க வேண்டுமானல் ''செக்ஸ் உணர்வு'' என்று இதைச் சொல்லலாம். அதாவது உடலுறவை மையமாகக்கொண்டு எழும் உணர்வு இது.

இந்த உணர்வை உடலுறவுக்காக மட்டும் செலவழிக்காமல் வேறு வழிகளிலும் நாம் திசை திருப்பலாம். இப்படி திசைதிருப்புவதை ''சப்ளிமேஷன்'' என்ற வார்த்தையால் குறிப்பிடுகிருர்கள் மனேதத்துவ அறிஞர்கள்.

ஒரு சாதாரண மனிதன் ஒடுவது, சாடுவது போன்ற அன்ருடப்பணிகளில் இதைத் திசை திருப்புகிருன். ஒரு ஓவியன் சித்திரங்கள் தீட்டுவதிலும், எழுத்தாளன் இலக்கியங்களைப் படைப்பதிலும், பேராசைக்காரன் நினைத்ததை அடைய முயல்வதிலும், இறைவழி நடப்பவன் இருப்பதைத் துறப்பதிலும் இந்த லிபிடோ என்னும் அடிப்படை உணர்வைச் செலவிடுகிருர்கள்.

இப்படி வெவ்வேறு வழிகளில் இந்த உணர்வுக்கு வடிகால் அமைத்தவர்கள் தான் ஹிட்லரும், ஷேக்ஸ்பியரும், ஷாஜஹானும் ..!

இப்போது இதற்கு இன்னும் ஒரு குறிப்பிடத்தக்க உதாரணமாக வந்து சேர்ந்திருக்கிருர் அமெரிக்க வாழ் கோடீசுவரர் ஒருவர். இவரது பெயர் டொனல்டு டிரம்ப். ரீயல்-எஸ்டேட் நிறுவன உரிமையாளர் இவர்.

இந்த அதிசய மனிதர் என்ன செய்தார் தெரியுமா? 500 கோடி ரூபாயை தண்ணீரில் மிதக்க விட்டார். அதாவது உல்லாசக் கப்பல் ஒன்றைத் தனது தனிப்பட்ட பொழுது போக்குக்காக வாங்கி உள்ளார். அதன் பெயர் ''டிரம்ப் பிரின்சஸ்'' என்பதாகும்.

சொந்த உபயோகத்துக்காக, தனியார் வைத்துள்ள உல்லாசக் கப்பல்களில் உலகிலேயே மிக மிக ஆடம்பரமானது இந்தக் சப்பல் தான்...... இதை உல்லாசப் படகு என்றும் அழைக்கலாம். ★

முத்தமிழ்ச் செல்வர் அடைந்த ஏமாற்றம்!

மிருகங்களை வள்ளலார் இரண்டு இனமாகப் பிரிக்கிருர். ஒன்று தட்டைப்பல் இனம். மற்றது கோரப்பல் இனம். முன்னதில் யானை, குதிரை, ஒட்டகம், ஆடு, மாடு, குரங்கு கழுதை முதலியன அடங்கும். மனிதனும் இந்த இனம்தான். இவை சாகபட்சிணிகள். புல் பூண்டு தின்பவை. பின்னதில் சிங்கம், புலி, நாய், நரி, கரடி முதலியவை அடங்கும். மாமிசம் சாப்பிடுவதற்காகப் படைக்கப்பட்டவை.

இதே போல் வள்ளுவர் மனிதர்களை இரண்டு இனமாகப் பிரிக்கிருர். ஒன்று சான்ருேர், மற்றது கயவர். மனிதருள் உயர்ந்த குணமான சான்ருண்மை படைத்தவர் சான்ருேர். தாழ்ந்த குணமான கயமை படைத்தவர் கயவர். நான் பல பேராசிரியர்களையும் பல பல்கலைக் கழகங்களையும் 'சான்ருண்மை,, 'கயமை' இவ்விரு சொற்களையும்ஆங்கிலத்தில்மொழிபெயர்க்குமாறு கேட்டேன். எல்லோரும் கைவிரித்து விட்டார்கள்,

கி. ஆ. பெ. விசுவநாதம்

—சாந்தி வள்ளலார் விழாவில் கி. ஆ. பெ. விசுவநாதம் பேசியது. ★

சார்லி சப்ளினுக்கு திருடன் பரிசு!

உலகப்புகழ்பெற்ற நகைச்சுவை நடிகர் சார்லி சப்ளின். இவர் ஒருநாள் தன் வீட்டிற்கு வந்து சட்டையைக் கழற்றிப்பார்த்தபோது, சட்டைப்பையில் ஒரு தங்கக் கடிகாரம் இருந்தது. அதைஅவர் பொலீஸுக்கு அனுப்பி விசாரித்ததில் கடிகாரம் யாருடையது என்று தெரியவில்லை.

இச்சம்பவம் பத்திரிகைகளில் வெளியானது. சில நாட்களுக்குப்பிறகு சப்ளினுக்கு கீழ்வரும் கடிதம் வந்தது.

சப்ளின் அவர்களுக்கு!

நான் இந்தக் கடிகாரத்தை திருடிக்கொண்டு வரும்போது உங்களைச் சந்தித்தேன். உங்கள் மீது எனக்கு அபார பிரியம். அதை உங்கள் சட்டைப் பையில் போட்டுவிட்டேன். எனவே அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்!'

இந்தச்செய்தியும் பத்திரிகையில் பிரசுரமானது.

சில நாட்களுக்கு பிறகு கடிகாரத்தின் சொந்தக்காரர் பின்வருமாறு சப்ளினுக்கு கடிதம் எழுதினர்.

'கடிகாரம் என்னுடையது

சார்லி சப்ளின்

தான்! என் கடிகாரத்தைத் திருடியவனைவிட எனக்கு உங்கள்மீது அபார அன்பு. என் என் தங்கக் கடிகாரத்தை நீங்கள் இதுதான் அன்பளிப்பாக பெற்றுக்கொள்ளுங்கள்!' ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ்கிமோவுக்கு தடிமன் வராது!

பனிப் பிரதேசத்தில் வாழும் எஸ்கிமோக்களுக்கு ஜலதோஷமேபிடிப்பதில்லை.

ஜலதோஷத்தைப் பரப்பும் கிருமிகளால் பனிப்பிரதேசங்களில் வாழமுடிவதில்லை என்பதே காரணம்.

பாலூட்டி வளர்க்கும் பிஜன்

பறவை இனங்களிலேயே பாலூட்டிக் குஞ்சுகளை வளர்க்கும் ஒரே பறவை, உலகிலேயே பிஜன் மட்டுமே. இப்பறவையின் இரைப்பகுதியில் காணப்படுகின்ற தோலின் உட்பகுதியில் ஒருவிதத் திரவம் சுரக்கிறது. இந்தத் திரவத்தையே குஞ்சுகளுக்கு கொடுத்து வளர்க்கின்றன. இந்தத் திரவத்தை விஞ்ஞானிகள் பரிசோதனை செய்து இது பாலூட்டிகள் சுரக்கும் பால்போன்றதுதான் என்று கூறியுள்ளனர்.

இப்பறவைகளின் மற்ருெரு சிறப்பு, நீரில் அலகினை வைத்து உறிஞ்சிக்குடிக்கிறது. மற்றப்பறவை இனங்கள் நீரை அலகில் நிரப்பிக்கொண்டு பின்னர் தலையை உயர்த்தி நீரைக்குடிக்கும்.

பிஜன் பறவைகள் புருக்களைப் போன்றேகூடுகளைக் கட்டிக்கொண்டு வாழ்கின்றன. சில பிஜன் பறவைகள் தெருவோரங்களிலுள்ள மரங்களில் கூடுகளைக் கட்டிக்கொள்வதுண்டு.

ஒன்று அல்லது இரண்டுக்கு மேல் இப்பறவைகள் முட்டைகள் இடுவதில்லை.

வடதுருவப் பிரதேசத்தில் பிஜன் பறவைகள் அதிகம். உருண்டையான கழுத்தினையுடைய பிஜன் பறவைகள் ஆபிரிக்காவில் அதிகம் வாழ்கின்றன.

காவாடு பிஜன் ஐரோப்பாவில் அதிகம். பிஜன் பறவைகள் பழங்களை யே அதிகம் உண்ணுகின்றன.

இப்பறவைகளின் உடல் பஞ்சடைக்கப்பட்டது போலவே வெளிப்பார்வைக்குத் தெரியும். பிஜன்பறவையின் சிறகுகள் சிறியனவாக உள்ளன. சின்ன வால் உறுதியான கால்கள்.

நியூஜெனிவாவில் வாழும் பெரிய பிஜன் பறவையின் தலையில் விசிறிபோன்ற விரிந்த சிறகுகள் கொண்டைபோல் உள்ளன. ★

தற்கொலை செய்வதிலும் 'கௌரவம்' பார்க்கப்படுகிறது!

தற்கொலை செய்வதிலும் கௌரவம் பார்க்கப்படுகின்றதாம்!

இங்கு அல்ல. அமெரிக்காவில்.

அங்கு சான்பிரான்ஸிஸ்கோ நகரில் இரண்டு பாலங்கள் உண்டு.

ஒன்றின் பெயர் கோல்டன் கேற் பிரிட்ஜ். என்பது.

இரண்டாவதன் பெயர் பே பிரிட்ஜ் ஒவ்வொன்றும் 200 அடி நீளமானது. 1930 களில் கட்டப்பட்டவை.

சான் பிரான்ஸிஸ்கோவைச் சேர்ந்தவர்களில் விரக்தியுற்றவர்கள் தற்கொலை செய்து கொள்வதற்கு இந்த இரண்டு பாலங்களைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

இதுவரை இரண்டு பாலங்களில் இருந்து குதித்துத் தற்கொலை செய்து கொண்டவர்கள் எத்தனைபேர் என்று ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது.

பே பிரிட்ஜில் இருந்து தற்கொலை செய்துகொண்டவர்களிலும் பார்க்க ஐந்துமடங்கு பேர் கோல்டன் கேற் பிரிட்ஜின் மேலிருந்து குதித்துத் தற்கொலை செய்துகொண்டார்கள் என்று ஆய்வில் தெரிய வந்தது.

பே பிரிட்ஜுக்கு மறுபக்கத்தில் வாழ்ந்து வந்தவர்கள் கூட பே பிரிட்ஜைத் தாண்டி வந்து கோல்டன் கேற் பிரிட்ஜில் இருந்து தற்கொலை செய்துகொண்டார்கள் என்பதும் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டது.

தற்கொலை செய்பவர்கள் ஏன் கோல்டன் கேற்பிரிட்ஜைத் தெரிவுசெய்கிருர்கள் என்பது உளவியலாளர்களைச் சிந்திக்கவைத்தது.

அதை ஆய்வுசெய்து பார்த்ததில் பாலத்தின் பெயரை தற்கொலை செய்பவர்கள் பெரிதும் விரும்புகிருர்கள் என்பது தெரியவந்தது.

'கோல்டன்' என்பது தங்கத்தை குறிக்கிறது.

ஆகவே தற்கொலை செய்வதிலும் கௌரவம் பார்க்கப்படுகிறது என்பதை ஆய்வில் உளவியலாளர்கள் கண்டுபிடித்தனர்.

தற்கொலை செய்வதற்குக் கூட கௌரவம் பார்க்கும் மனிதன் வாழும்போது ஏன் கௌரவமாக வாழவேண்டும் என்று முயற்சிக்கிருன் இல்லை?

சீனவில் புகைபிடிப்போர் 2,400 லட்சம்

சீனவில் மக்கள் தொகை நூறுகோடிக்கு மேல்போய் விட்டது. (2,000 ஆவது ஆண்டில் 1,200 கோடியை எட்டிவிடும் என்று ஏக்கம் தெரிவிக்கப்படுகிறது.)

இதில் 24 கோடிபேர் புகைக்கும் பழக்கம் கொண்டவர்கள் என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

புகைபிடிக்கும் ஆண்களில் 71 சதவீதம் பேர் தங்களது 15 ஆவது வயதில் முதல் சிகரெட்டை ருசி பார்த்து விடுகின்றனர்.

ஏதோ ஒரு ஆவலில் உந்தப்பட்டு இந்தப் பழக்கத்தை தொட்டதாக ஆண்கள் கூறுகிருர்கள்.

சமுதாயத்தில் தங்கள் 'இமேஜை' உயர்த்தி நவீனமானவர்களாகக் காட்டுவதால் இந்தப் பழக்கத்தைக் கைக்கொண்டதாக பெண்கள் சொல்கிருர்கள்.

18ஆம் நூற்ருண்டு புதையல்

18 ஆம் நூற்ருண்டைச் சேர்ந்த பிரான்சு நாட்டுக் கடற்கொள்ளைக்காரன் ஒலிவர்.

இவன் கடைசியாக இருந்து சென்ற போர்த்துக்கீசிய கப்பலைக் கொள்ளை அடித்தான்.

பிறகு தான் கொள்ளை அடித்த தங்க, வைர நகைகள் அனைத்தையும் இந்துமா கடலில் உள்ள செய்ஸல் தீவில் புதைத்து வைத்ததாகக் கூறப்படுகிறது.

அவற்றின் மதிப்பு 1,600 கோடி ரூபாவுக்கு மேல் என்று மதிப்பிடப்படுகிறது.

இப்போது அந்தப் புதையலைக் கண்டுபிடிக்கும் வேலையில் புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர்கள் ஈடுபட்டுள்ளார்கள். ★

உங்களுக்குத் தெரியுமா?

★ ஆசியா கண்டத்திலேயே முதன்முதலாக மிகப்பெரிய நூல் நெசவு ஆலை தோன்றியது 'ஷோலாப்பூரில்'

★ மரம் எப்போதும் பூமிக்கு மேலே தான் வளரும் என எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கிருேம். ஆனல் இதற்கு விதிவிலக்காக தென் அமெரிக்காவில் உள்ள பாரினேரியம் காபென்ஸ் என்ற மரம் பூமிக்குக் கீழே வளர்கிறதாம். ★

இனங்காணல் நெருக்கடியும் நமது மாணவ சமுதாயமும்

(சென்றவாரத் தொடர்ச்சி)

உயர்கல்வி வசதியைப் பொறுத்தமட்டில் இங்கு பெரும் பற்றுக்குறை நிலவுகிறது. பெரும்பாலான மாணவர்கள் க. பொ. த. உயர்தரப் பரீட்சையின் பின்னர் மேலும் தமது கல்வியைத் தொடர்வதற்கு வாய்ப்பற்ற நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இந்த வாய்ப்பின்மையினால் சிலர் தாம் விரும்பாத சில துறைகளுக்கும், தொழில்களுக்கும் இட்டுச் செல்லப்படுகிறார்கள்.

தொழிற்கல்வி, வெளிவாரிப்பட்டப் படிப்பு, திறந்த பல்கலைக் கழகக் கல்வி வசதி இங்கு இருந்தாலும் இவை பற்றிய தகவல்கள் மாணவர்களுக்குக் கிடைப்பதில்லை. இதனால் மாணவர்களினது தெரிவுக்கான சந்தர்ப்பங்கள் குறைக்கப்படுகின்றன. தொழில் சம்பந்தமான அறிவுரைகள் அல்லது வழிகாட்டல்கள், பட்டப்பின் படிப்பு சம்பந்தமான தகவல்கள் மாணவர்களுக்கு பல்கலைக் கழக புகுமுன் நிலையிலே கிடைப்பதில்லை. இதனால் மாணவர்கள் ஒரு பரந்த தகவல்களை அடிப்படையாக வைத்து தம்மை இனம் கண்டு கொள்ளும் வாய்ப்பை இழக்கிறார்கள்.

பிரித்தானிய ஆலோசனைச் சபை (British Council) மற்றும் வேறு பிறநாட்டு ஸ்தாபனங்கள் நடத்தும் மொழியியல் பரீட்சைகள், பிறநாட்டு உயர்கல்வி வாய்ப்புகள் பற்றிய தகவல்களும் மாணவர்களுக்குக் கிடைப்பதரிது. இப்படியான தகவல்கள் இல்லாத பட்சத்தில் ஒரு மாணவன் தன்னை அண்டியிருக்கும் சூழலின் அடிப்படையிலேயே தனது இனங்காணல் நெருக்கடியைக் கையாளவேண்டி ஏற்படுகிறது.

ஆக மட்டுப்படுத்தப்பட்ட கல்வி வாய்ப்புக்கள் உயர்கல்வி, தொழிற்கல்வி பற்றிய போதிய தகவல் இன்மை இவை இரண்டும் எமது சமுதாய மாணவர்களின் இனங்காணல் நெருக்கடியை மேலும் சிக்கலடையச் செய்யும் ஏதுக்களாகக் கருதலாம்.

விஞ்ஞான, தொழில் நுட்பவியலின் சமமற்ற வளர்ச்சி

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த மின்னணுவியல் (Electronic) யுகத்தில் மேலைத்தேயங்களில் ஏறக்குறைய எல்லா வகையான கல்வித் துறைகளுக்கும் தொழில் துறைகளுக்கும் கணணி இயந்திரங்களைப் புகுத்திவிட்டார்கள். ஆனால் நாங்கள் இன்னமும் கணணி இயந்திரத்தைப்புத்தகப்படங்களிலேயே பார்க்கவேண்டிய நிலையில் உள்ளோம். விஞ்ஞான தொழில் நுட்பவியலின் விருத்தி மேலைநாடுகளில் வாழ்க்கைத்தரம், கல்வி வசதி, தொழில் துறைகளை உயர்த்த சகல மட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் எமது சமுதாயத்திற்கு இவற்றின் அபிவிருத்தி பற்றி நிறைவான தகவல்கள் கூடக் கிடைப்பதில்லை.

மின்னணுவியல் யதார்த்தங்களை நாம் இன்னமும் வியப்பாகவே நோக்குகின்றோம். அந்த யதார்த்த சூழலைக் கிரகித்துக் கொள்ளக் கூட எம்மால் முடிவதில்லை. இதனால் மாணவரிடையே ஒரு தாழ்வு மனப்பான்மை வளர்கிறது. தமது திறமையில் நம்பிக்கை குறைகிறது.

இப்படியான ஒரு தாழ்வுச் சிக்கலில் உளன்று கொண்டு இருக்கும் மாணவனால் தனது திறமையின் அடிப்படையில் உள்ள வாய்ப்புக்களைச் சரிவர எடைபோட முடிவதில்லை. இதன் காரணமாகத் தனது இனங்காணல் நெருக்கடியைச் சரியான முறையில் கையாள முடியாது தவிக்கிறான்.

சமகால நிகழ்வுகளும் உளவியல் நெருக்கடிகளும்

இது ஒரு முக்கியமான காரணி. மேற்சொன்ன நான்கு காரணிகளின் தாக்கத்தையும் சமகால நிகழ்வுகளும் அதன் உளவியல் நெருக்கடிகளும் மேலும் வலுவடையச் செய்துள்ளன எனக்கூறின் அது மிகையாகாது.

சமகால நிகழ்வுகளினால் அதாவது இங்கு இருக்கும் ஒரு நெருக்கடியான நிலைமையினால் கடந்த சில காலங்களாக எமது வாலிப சமுதாயம் தமது எதிர்காலத்தைப் பற்றிச் சீரிய சிந்தனை இன்றியே முடிவெடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். அது அந்நிய நாட்டு இடப்பெயர்வாக இருக்கலாம் அல்லது வேறு பிரதேசங்களுக்குத் தொழில் தேடி அல்லது கல்வியைத் தேடிச் செல்வதாக இருக்கலாம். எல்லாமே எழுந்தமானத்தில், கிடைக்கக்கூடிய சொற்ப வாய்ப்புகள் தகவல்களின் அடிப்படையிலேயே முடிவு செய்யப்படுகின்றது. தனது இச்சை இன்றியே அல்லது நிலைமை ஏற்படுத்திய பிறநாட்டு மோகத்தின் அடிப்படையிலே ஒரு புதிய சூழலில் ஒரு புதிய சமுதாயத்தில் ஒரு தனியனாக ஒருவர் அறிமுகப்படுத்தப்படுகிறார். இவரது நிலைமை என்ன? இவர் என்ன சூழ்நிலையில் அங்கே செல்கிறார்? இவரது சமூகத்தைப் பற்றி அந்தப் புதிய சமூகத்தில் இருக்கும் கருத்து என்ன? இந்தக் கேள்விகளுக்கான விடைகள் இந்தத் தனியனினால் மட்டும் நிர்ணயிக்கப்படுவதில்லை. அந்தப் புதிய சமுதாயத்தின் அங்கத்தவர்களின் கருத்து (Attitude) அவர்கள் கொண்டிருக்கும் பிற சமுதாயம் சம்பந்தமான ஒருபடிவார்ப்பு அமைப்பு (Stereotype) என்பவற்றாலேயே நிர்ணயிக்கப்படுகின்றன. எனவே ஒரு தனியன் என்ற ரீதியில் அவரது தனித்துவம் (Individuality) அங்கே சிதைகிறது.

- கொ. றெ. கொன்சன்டைன் -

இந்தச் சூழலில் அவரால் தன்னை அறிந்து கொள்வது கடினம், தனது பாதையைத் தெரிந்துகொள்வது கடினம், தனக்கு முக்கியமானவர்கள் எனக் கருதப்படுபவர்களின் அங்கீகாரம் பெறுவதும் கடினமாகிறது.

இந்த இக்கெட்டான நிலைமையிலும் இங்கே வாழ்பவர்களில் மேற் கூறிய தனித்துவத்தை இழக்கும் அல்லது சிதைக்கும் தாக்கம் மிகக் குறைவென்றே கருதவேண்டும். ஆனாலும் இருசாராரிலும் குறிப்பாக பின்னைய சாராரில் சமகால நிகழ்வுகளின் உளவியல் தாக்கம் வருங்காலங்களில் வெளிக்காட்டத் தொடங்கும் (Post Traumatic Stress Disorder PTSD) தற்போது நாம் ஒரு ஈடுசெய்யப்பட்ட (Compensated Phase) உளசமநிலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

வியட்நாம் போரின் தாக்கங்கள் அண்மைக் காலங்களிலேயே அமெரிக்காவில் உளவியல் வீழ்படிவுகளாக நன்கு அவதானிக்கப்பட்டு வருகின்றன. எமது சமகால நிகழ்வுகளின் தாக்கம் அதைவிடப் பரந்தளவில் சமுதாயம் முழுவதையும் தழுவிய அளவில் வெளிக்காட்டப்படும்.

சாதாரணமாகவே வாலிபப் பருவம் உளவியல் கொந்தளிப்புகள் நிறைந்த பருவம். அத்துடன் உளநிலைத் தளம்பல்களினாலும் எளிதில் பாதிக்கப்படக்கூடிய பருவம். இந்தப் பருவத்தில் ஒருவன் தன்னை அறிந்துகொள்ள தான் தானாக இருக்கவேண்டும். தான் சார்ந்துள்ளசமூகம் தன்னைப்பற்றிக் கொண்டுள்ள கருத்தை, தன்னிடமிருந்து எதிர்பார்ப்பனவற்றைச் சரியானமுறையில் எடைபோடக்கூடிய மனோபக்குவத்தில் இருக்கவேண்டும். இவையாவும் மதிநுட்ப உளவியல் சமநிலையிலேயே சீராகத் திட்டமிடப்படலாம். எந்தவித உளவியல் தளம்பல்களும் இந்த நுட்ப நிலையைப் பாதிக்கும். ஆகசமகால நிகழ்வுகளின் உளவியல் தாக்கங்கள் இந்த நுட்பநிலையில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்துவதனால் இனங்காணல் நெருக்கடியை மேலும் சிக்கலாக்கும்.

இவை தவிர ஏனைய வகையான இழப்புகள், இதரசமூக அங்கத்தவர்களில் ஏற்படும் உளவியல் தாக்கங்களும் ஒரு தனியனின் இனங்காணல் நெருக்கடியை மேலும் சிக்கலடையச்செய்யும்.

குடும்ப நிலைமைகள்

எமது சமுதாயத்தைப் பொறுத்தளவில் உயர்கல்விக்காக பெற்றோர்கள் எதனையும் இழப்பார்கள். குடும்பப் பொறுப்புகள் சிலவேளைகளில் சிலரைத் தொழில்தேட அல்லது குறித்த துறைகளில் படிக்கவோ நிர்ப்பந்திக்கிறது. பொதுவாகக் கருதுமிடத்து குடும்ப நிலைமைகளின் தாக்கம் குறைவான அளவிலேயே காணப்படுகிறது.

நெருங்கியவர்களின் இழப்பு, விவாகரத்து, தொழில் இழப்பு இவையும் ஏலவே இனங்காணல் நெருக்கடியில் இருந்து மீண்டவர்களை மீண்டும் அந்த நெருக்கடியினுள் தள்ளக்கூடியன.

முடிவு

ஒவ்வொரு காரணிகளின் தாக்கம் தனியன்களுக்கிடையிலும் காலத்தைப் பொறுத்தும் வேறுபடும். அண்மைக் காலங்களாக இவற்றின் தாக்கம் கணிசமான அளவு அதிகரித்துள்ளது. எதிர்காலங்களில் சமூகஅரசியல் நிலைமைகள் அனுகூலமாக அமையும் போது பலகாரணிகளின் தாக்கத்தின் பரிமாணம் இன்னமும் அதிகரிக்கும்.

இதனால் அநேகர் எதிர்மறையான இனங்காணலுக்குள் இட்டுச் செல்லப்படலாம். இதன் விளைவாக போதைப்பொருள் பாவனை சமூகவிரோத குழுக்களின் உருவாக்கம் போன்றவை அதிகரிக்கும். அத்துடன் தான் விரும்பாத கல்விநெறிகளுக்குள் அல்லது தொழில்துறைகளுக்குள் இறங்குவதனால் சமுதாயம் பயன்படக்கூடிய விதத்தில் அவர்களால் செயற்படமுடியாது போய்விடும்.

இம்மாற்றங்களை இயன்றளவு தவிர்த்துக்கொள்வதற்கு எமது சமுதாயம் தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். எமது வாலிப சமுதாயம் தக்கவிதமாக வழிகாட்டப்படவேண்டும். அவர்களது பிரச்சினைகள் இனங்காணப்பட்டு அவற்றிற்கான தீர்வுகளை அவர்களே காண சமுதாயம் ஊன்றுகோலாகத் தொழிற்படவேண்டும்.

எமது வாலிப சமுதாயம் உளவியல் சமநிலையை எய்துவதற்கு சமுதாய நற்பணிமன்றங்களும் சமுதாய முன்னோடிகளும் உளவியல் கல்வியை சமுதாயத்தில் முறைசாராரீதியில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இது இக்காலகட்டத்தில்வாழ்ந்துகொண்டிருப்பவர்களின் பாரிய கடமையாகும்.

(முற்றும்)

புதிய அணுத்துகள் கண்டுபிடிப்பு!

இயற்கையிலேயே மிகவும் சிறிய, அடிப்படையான அணுத்துகளில்ஒன்றானடொப் குவார்க்கை (Top Quark) பார்த்து விட்டதாக விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள். ஸ்விட்சர்லாந்திலுள்ள துகள் இயற்பியல் (Particle Physics) ஆய்வகத்தில் உள்ள மாபெரும் அணு பிரிப்பு இயந்திரத்தில் எட்டு நாடுகளைச் சேர்ந்த 151 விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்துவருகிறார்கள்.

அவர்கள் டாப் குவார்க்கைப் பார்த்துவிட்டதாகச் சொல்கிறார்கள். உலகத்திலுள்ள எல்லாப் பருப்பொருள்களுக்கும் அடிப்படைக் கட்டுமானப் பொருளாக இருக்கக்கூடிய, மேலும் பிளக்கமுடியாத ஒரு துகளைக் கண்டுபிடிக்க இயற்பியல் ஓர் நிபுணர்கள் பல நூற்றாண்டுகளாகவே முயற்சிசெய்துவருகிறார்கள்.

முதலில் வேதியியல் தனிமங்கள் (Chemical elements) அவ்வாறான கட்டுமான அடிப்படைத் துகள்களாகக் கருதப்பட்டன. அதன்பிறகு தனிமங்கள் அணுக்களாலானவை என்று தெரிந்த பிறகு அணு அந்த அடிப்படைத் துகள் பதவியில் நியமிக்கப்பட்டது. அணுவையும் உடைத்துப் பிரிக்கமுடியும் என்றுவந்ததும் அணுவைவிடச்சிறிய துகள்களைக் கண்டுபிடிக்கத் தத்துவ அடிப்படையிலும் பரிசோதனை அடிப்படையிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இப்போது எல்லாப் பருப்பொருள்களும் குவார்க்குகள், லெப்டான்கள் (Leptons) என்ற இரண்டே வகையான அடிப்படைத் துகள்கள்கூடி உருவானவை என்ற கருத்துக்கு விஞ்ஞானிகள் வந்திருக்கிறார்கள். இந்தத் துகள்கள் சேர்ந்து அணுவின் கூறுகளை உண்டாக்குகின்றன.

மூன்று குவார்க்குகள் இணைந்து ஒரு புரோட்டான் உண்டாகிறது. எலக்ட்ரான் என்பது ஒரு லெப்டானுல் ஆனது (ஒரு புரோட்டானும் ஒரு எலக்ட்ரானும் சேர்ந்து ஹைட்ரஜன் அணுவாகும்.)

இதுவரை ஆறுவகைக் குவார்க்குகள் இருப்பதாகத் தத்துவ இயற்பியல் நிபுணர்கள் ஊகித்துக் கூறியிருக்கிறார்கள். அவற்றில் ஐந்து குவார்க்குகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. டொப் குவார்க் ஆறுவதாகும். குவாக்குகள் ஜோடியாகவே அமையும்.

அவற்றுக்குச் சூட்டப்பட்டிருக்கும் பெயர்கள் விசித்திரமானவை: மேல் (Up) குவார்க். கீழ் (Down) குவார்க். அடிமட்ட (Bottom) குவார்க். மந்திர (Charmed) குவார்க். விந்தை (Strange) குவார்க் ஆகியவை கண்டு பிடிக்கப்பட்டு விட்டன. இப்போது கண்டறியப்பட்டிருக்கிற உச்ச (Top) குவார்க் அடிமட்டக் குவார்க்கின் ஜோடியாக அமையும்.

இந்தக் குவார்க்குகளும் லெப்டன்களும் கூட இன்னும் அடிப்படையான துகள்களானவையாக இருக்கலாம் என்று சில விஞ்ஞானிகள் கூறி வருகிறார்கள்- அவற்றுக்கு பிரியான்கள் (Preons) அல்லது குவார்க் முந்திகள் (Pre-quarks) என்று பெயர்கூடச் சூட்டியாயிற்று. இயற்பியல் விஞ்ஞானிகளுக்குத் தலைவலி இன்னும் அதிகமாகும். இவற்றைக் கண்டு பிடிக்க, இப்போதிருக்கிறவற்றைவிடப் பன்மடங்கு பெரிய அணு உடைப்புக்கருவிகளை உருவாக்கினால்தான் முடியும். ★

தாய் சொல்லைத் தட்டாதே!

(கதைப்பாட்டு)

காலைவேளை சமலம் வீட்டுக்
கோழி எட்டுக் குஞ்சுடன்
சோலையோரம் இரையைத் தேடிச்
சுற்றிச் சுற்றி வந்தது.

பஞ்சு போன்ற வண்ண வண்ணக்
குஞ்சுக் கூட்டம் தாயுடன்
கொஞ்சிக் கொஞ்சி கொத்திக் கொத்தி
கூடியோடிச் சென்றது.

பரந்த வானில் பறந்து பறந்து
பருந்து வட்டமிட்டது
அறிந்தகோழி பயந்து மக்காள்
அருகில் வாரும் என்றது.

தாயின் சொல்லை ஏழு குஞ்சும்
தலையிற் கொண்டு வந்தன
தூய வெள்ளைக் குஞ்சு ஒன்று
துடுக்குச் செய்து சென்றது.

அந்தக் குஞ்சை உணவு தேடி
அலைந்த பருந்து கண்டது
வந்து கொத்திக் கொண்டு நீல
வான வீதி சென்றது.

''கீக்கீ'' என்ற குஞ்சின் ஒலம்
கேட்டுக் கோழி நொந்தது
தூக்கிச் செல் லும் பருந்தைக் கண்டு
துடித்துக் கொண்டு நின்றது.

பெற்ற தாயின் வார்த்தை போற்றிப்
பேண வேண்டும் பிள்ளைகாள்
பற்று ஞான சீலமோங்கும்
கண்ணிய வாழ்வும் வாழலாம்.

கு. ஜெயக்குமார்
யா / கம்பர்மலை அ. த. க. பாடசாலை.

மரங்கொத்தி

மரங்கொத்தி மற்றப் பறவைகளைப் போல் புல்லிலும் புதரிலும் இரைதேடுவதில்லை. மரப்பட்டையின் அடியிலும் அடி மரத்தின் துளைகளிலும் குடியிருக்கும் கொழுத்த வண்டுகளே இவற்றின் முக்கிய ஆகாரம்!

இவை அடிமரத்தில் செங்குத்தாக அமர்ந்திருக்க இவற்றின் வால்கள் உதவும். வால் இறகுகள் கூர் நுனியுடன் கடினமாக இருப்பதால், மரங்கொத்தி செங்குத்தாக உட்காரும்போது வால்நுனி மரப்பட்டையில் பதிந்து பறவை தலைகீழாக விழாதபடிக்கு மூன்றாவது காலாக அது உதவும்.

எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் இப்பறவைகள் அடிமரத்தில் இப்படி செங்குத்தாக உட்கார்ந்திருக்கும் இரவில் கூட இவை இப்படியே அமர்ந்து தூங்கும்.

இவற்றின் நீண்ட உளிமுனை அலகுகள் மரப்பட்டையைக் கொத்துவதற்கும், துளைப்பதற்கும், அதைத் தட்டிப் பார்த்துப் புழுக்களின் இருப்பைத் தெரிந்துகொள்வதற்கும் ஏற்ற கருவியாகப் பயன்படுகிறது.

மரங்கொத்திகள் கூடு கட்டாது. மரங்களில் ஆழமான பொந்துகளைக் கண்டுபிடித்து அதில் முட்டையிடும்.

வேகமாகக் கொஞ்ச நேரம் பறப்பது. பிறகு அப்படியே கொஞ்ச நேரம் காற்றில் மிதப்பது, மறுபடியும் இறக்கையடித்துப் பறப்பது—இது மரங்கொத்தியின் பறக்கும் பாணை. ★

சீனவில்

சீனர் ஒருவரை யாராவது சந்தித்துப் பேசும்போது அவர் கண்ணுடி அணிந்திருந்தால் அதைக் கழற்றி வைத்துக்கொண்டுதான் பேசுவார்.

காரணம் கண்ணுடியைக் கழற்றாமல் பேசுவது என்பது மற்றவரை அவமதிப்பதற்குச் சமம் என்று கருதப்படுகிறது. ★

பெண் பாவம் பொல்லாதது!

நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்க முடிவு கட்டிய காந்திஜி சில குடும்பங்களின் வீட்டுப் பிரச்சினையையும் அறிவுரைகளால் தீர்த்து வைத்திருக்கிறார்.

ஓர் இளைஞனுக்கு ஒரு பெண்ணை நிச்சயம் செய்து அவனும் ஒப்புக்கொண்டு திருமணம் நடக்க மூன்று நாட்கள் முன்பு அவன் பின்வாங்கவே பெண்வீட்டார் கோஷ்டியாகச் சேர்ந்து' அவனை நிர்ப்பந்தப்படுத்தினர். அவன் மசியவில்லை. பின் பெண் வீட்டார் காந்திஜியிடம் வந்து பையனுக்குப் புத்திசொல்ல வேண்டினர். காந்திஜி அவனையும் பெண் வீட்டாரையும் ஒரு சேர அழைத்துத் தொடர்ந்து மூன்று நாட்கள் பையனிடம் பெண்வீட்டார், எதிரில் உரையாடினார். அவன் தன் பிடிவாதத்தை விடாமல் தனது கட்சியை, அதாவது திருமணம் செய்துகொள்ள விரும்பாத காரணங்களைக் கூறி விளக்கினான். ஆனால் ''காந்திஜி'' போன்ற பெரியவர்கள் இதில் தலையிடுவதால் அவளைத் திருமணம் செய்துகொள்ளச் சம்மதிக்கிறேன்'' என்று கூறிய பின் அவனை அனுப்பி வைத்தார்.

மகாத்மாகாந்தி

பின்பு அவன் போன பின் பெண்வீட்டாரிடம் காந்திஜி கூறியது:- ''அவன் என்னுடன் பேசியதையெல்லாம் நீங்களும் கேட்டீர்கள்! உங்கள் பெண்ணைத் திருமணம் செய்யக் கொஞ்சம் கூட சம்மதமில்லை. என்னுடைய அறிவுரைப்படி திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகக் கூறியது எனக்குப் பிடிக்கவில்லை. அதில் எனக்குச் சம்மதமில்லை. காரணம் திருமணம் நிர்ப்பந்தத்திற்காக என்றால் அதில் இன்பம் இல்லை, உங்கள் பெண்ணைப் பழுங்கிணற்றில் தள்ளாதீர்கள்'' என்றார்.

பெண் வீட்டாரைக் காந்திஜியின் உரை மனம் கலங்கச் செய்தது. திருமணச் சடங்குகளை ரத்துச் செய்து நன்றி கூறிப் போனார்கள் அவர்கள். இதுபற்றிக் காந்திஜி மகாதேவ தேசாயிடம் கூறியது:-

''இன்று ஒரு 'பசுக்கொலை'' யைத் தடுத்த மனநிம்மதி எனக்கு ஏற்படுகிறது. ''பசு'' என்றால் நான்கு கால் பிராணி மட்டுமல்ல. இரண்டு கால் பசுவும் கூடத்தான்''

— ''Remniscences of Gandhi'' என்ற நூலில் இருந்து. ★

சகோதரர்களே! சலித்துக்கொள்ளாதீர்கள்

அன்றாடம் ஆண்கள் இப்படி அலுத்துக் கொள்வது உண்டு.

'நீ வீட்டில்தான் இருக்கிறாய்? இந்தப் பொத்தானைச் சரியாகத் தைத்து வைத்தால் என்ன? தண்டமா! தூங்கிற நேரத்தில் என் ஷூவுக்குப் பொலீஷ் போடக் கூடாதா? என் டிரஸ்ஸை அயர்ன் பண்ணி வைக்காம வீட்டில் உட்கார்ந்து அப்படி என்ன வெட்டி முறிக்கிறாய்?

இப்படிச் சலித்துக் கொள்வது ரொம்ப சுலபம் சகோதரர்களே! ஆனால் ஒரு பெண் குடும்ப நிர்வாகியாக இருந்து செயல்படும்போது அவள் எத்தனை வகையான, எவ்வளவு சிக்கல் நிறைந்த பிரச்சினைகளை நித்தம் நித்தம் சமாளித்து வருகிறாள் என்பதை நீங்கள் கொஞ்சம் நிதானமாக யோசித்துப் பார்த்தால் தெரியும்.

'நான் தினமும் போகவர, மூன்று கிலோ மீட்டர் சைக்கிள் மிதிக்கிறேன்........ உடம்பே இரண்டாப் போகிறது'' – என்ற படி நீங்கள் வீடு வந்ததும் ஈஸிசேரில் சாய்ந்து கொண்டு உங்கள் மனைவி சிசுரூஷை செய்ய 'ரிலாக்ஸ்' செய்து கொள்கிறீர்கள்.

ஆனால் சராசரியாக, காலை ஆறு மணிக்கு எழுந்தது முதல் இரவு படுக்கையில் சாயும் வரை ஒரு பெண் நான்கு சுவர்களுக்குள்ளேயே (வீட்டிற் குள்ளேயே) நடக்கின்ற தூரம் பதினைந்து கிலோ மீட்டர் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

இதற்காக அவள், 'நான் மட்டும் தினமும் பதினைந்து கிலோ மீட்டர் நடக்கவில்லையா? என்று எதிர்க்கேள்வி போடுவதில்லை. ★

நங்கையர்க்கு யோசனைகள்

★ காய்கறிகளை இரும்புக் கத்தியினால் நறுக்கினால் இரும்புச்சத்து உடலுக்குக் கிடைக்கும்.

★ முட்டைக்கோவில் வெளிப்புற இலைகளில் உட்புற இலைகளைவிட வைட்டமின்கள் அதிக அளவில் உள்ளன.

★ பயறுவகைகளை வேக வைப்பதற்கு முன் சில மணி நேரம் நீரில் ஊறவைப்பதால் வைட்டமின்கள் அதிக அளவில் பெறலாம்.

நங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகைச்சுவை நடிகர் சார்ளி சப்ளின் வாழ்வில்

பண மழையில் பிறந்த சிரிப்பொலி

நடிகர், இயக்குநர், தயாரிப்பாளர், திரைக்கதை எழுத்தாளர், இசையமைப்பாளர் என்று எல்லாத் துறைகளிலும் தலைசிறந்து விளங்கிய சமுதாயத்தின் எல்லாத் தரப்பினராலும் விரும்பிப் போற்றப்படும் சார்லி சப்ளின் நூறுவது பிறந்தநாள் விழா அடுத்த ஆண்டு கொண்டாடப்படுகிறது. பதினொரு வருடங்களுக்கு முன்னர் அவர் இறந்துவிட்டாலும், உலக மக்களிடையே என்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

திரையுலக மேதையான சார்லி சப்ளின் செய்யாத தொழிலே இல்லை என்று சொல்லலாம். தெருத் தெரு வாசச் சுற்றிப் பொருள்களை விற்கும் வியாபாரியாக, கண்ணுடிப்பொருட்கள் செய்பவராக, பழைய துணிகள் விற்பவராக, நடைபாதை போடும் தொழிலாளியாக, துணை நடிகராக, எடுபிடி வேலைசெய்பவராக, வெயிட்டராக, கொள்ளைக்கூட்ட உறுப்பினராக, குத்துச் சண்டைப் போட்டிகளின் நடுவராக, பல் மருத்துவராக, செவிலியராக, பெயிண்டராக, வாயில் காப்பாளராக, ரொட்டிகள் தயாரிப்பாளராக என்று சொல்லிக் கொண்டேபோகலாம்.

1889 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி பிறந்த சார்லஸ் ஸ்பென்சர் சப்ளினுக்கு ஒருவயது ஆகும்போது அவருடைய தாய் தந்தையர் பிரிந்து விட்டனர். தாய் ஹன்னுஹில் ஒரு நாடக இசைக்கலைஞர். தாயுடன் தொடர்ந்து நிகழ்ச்சிகளுக்கு செல்வதனுல் நாடகமேடையின் சூழ்நிலையில் வளர ஆரம்பித்தார் சப்ளின்.

சப்ளின் தனக்கு ஐந்து வயதாகும்போது மேடைநிகழ்ச்சி ஒன்றில் வருந்தத்தக்க சூழ்நிலையில் முதன்முதலில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவருடைய தாய் பாடிக்கொண்டிருக்கும்போது குரலில் தடுமாற்றம் ஏற்பட்டு உடைந்து போனபோது, தொடர்ந்து பாடுவதற்கு மேடைக்கு அவசர அவசரமாக அனுப்பி வைக்கப்பட்டார் சார்லஸ். அதுவே அவர் தாயின் இறுதிமேடை நிகழ்ச்சியாகவும் அமைந்தது.

முதலில் மேடையில் தோன்றியபோது தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை கூறுகிறார் சாப்ளின்''- ஆர்க்கெஸ்ட்ராவின் உதவியோடு, ஒளிவிளக்குகளின் வெளிச்சத்தில், புகை மண்டலம் நிரம்பிய அரங்கினுள் இருந்த முகங்களின் முன்னிலையில் நான் பாட ஆரம்பித்தேன். பாடிக்கொண்டிருக்கும்போது சிறிதுநேரத்தில் மேடையின்மீது பண மழை விழ ஆரம்பித்தது. நான் உடனே விழுகின்ற பணத்தையெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு பிறகு பாடுகிறேன் என்று அறிவித்தேன். மிகப்பெரிய சிரிப்பொலி ரசிகர்களிடமிருந்து எழுந்தது.

நான் அவர்களிடம் பேசினேன்; நடனமாடினேன். பல பெரிய கலைஞர்களைப் போல என் தாய்உட்பட பாடி நடித்துக்காட்டினேன். என் அம்மா சிறிதுநேரத்திற்கு முன் பாடிய பாடலைப் பாடி, அவரைப்போல தடுமாறிய குரலில் பாடத் துவங்கினேன். ரசிகர்களிடையே அதற்கு கிடைத்த வரவேற்பு என்னை வியப்பில் ஆழ்த்தியது.

நகைச்சுவைக்கு இருந்த வரவேற்பை புரிந்துகொண்டு அதிலேயே தொடர்ந்து ஈடுபட்டேன். (எ-4)

சோவியத் சினிமா; ஒரு கண்ணோட்டம்

சோவியத் சினிமாவில் ஏற்பட்டு வரும் புதிய திருப்பம் பற்றி சோவியத் திரைப்பட விமர்சகர் மிக்கெய்ல் லெவிட்மின் எழுதிய கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

சோவியத் சினிமாவில் புதிய திருப்பம் ஏற்பட்டு வருகிறது.

சோவியத் வாழ்க்கை முறைக்கு ஒவ்வாதது என்று தடைவிதிக்கப்பட்ட விஷயங்களைத் திரைப்படமாக்குவதில் சோவியத் தயாரிப்பாளர்கள் ஒவ்வொருவராக முன்வருகின்றனர்.

இளம் சந்ததியினர் பற்றிய புதிய அலை ஒன்று சோவியத் சினிமாவில் பரவி வருகிறது.

இது இயற்கையானது.

சோவியத் யூனியனில் படம் பார்ப்பவர்களில் முக்காற் பங்கினர் 30 வயதுக்குட்பட்டவர்களே.

இன்னொரு புறம் இளம் சந்ததியினர் மத்தியில் சமூகப் பிரச்சினைகள் தீவிரமடைந்து உள்ளன.

வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பிரதிபலிக்கும் படங்கள்தான் சோவியத் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து வருகின்றன.

'பிளாக்மெயிலர்', 'லிட்டில் வெரா', 'டெம்டேஷன்', 'டியர் யெலனு செர்கிவேனு' ஆகிய படங்கள் இவற்றைப் பிரதிபலிக்கின்றன.

'த நீடில்', 'புரோக்கன் ரனியா', 'இன்சென்டியரிஸ்' ஆகியன விபசாரமும், போதைவஸ்து பாவனை சமூக சமத்துவமின்மை ஆகியவற்றை மையமாக வைத்துத் தயாரிக்கப்பட்டுள்ளன. அவை இன்னும் திரைக்கு வரவில்லை.

இப்படங்கள் வெளியாகும்போது சோவியத் ரசிகர்கள் மத்தியில் பரபரப்பு ஏற்படும்.

சீரணிக்கமுடியாத உண்மைகளைத் தெரிவிக்கும் இப்படங்கள் பிரச்சினைகளின் அத்திவாரத்தை நமக்கு எடுத்துக் காட்டுவனவாக அமைந்துள்ளன.

'டெம்ப்டேஷன்' படத்தை எடுத்துக் கொள்ளுங்கள். படத்தின் இயக்குநர் வைசஸ் லெவ் சொரகின்.

லெனின் கிராட் செகண்டரி பாடசாலையை மையமாக வைத்துத் தயாரிக்கப்பட்டுள்ளது.

சொத்துக்கள் உள்ளவர்களின் பிள்ளைகள் ஒருபுறம்; இல்லாதவர்களின் குழந்தைகள் மறுபுறம்.

இல்லாதவனின் குழந்தைகள், உள்ளவருடைய குழந்தைகளை ஏக்கத்துடன் பார்க்கின்றன.

வசதிபடைத்தவர்கள் தங்கள் பிள்ளைகளை அலுவலகக் கார்களில் கொண்டு வந்து பாடசாலை வாசலில் இறக்கி விட்டுச் செல்வதை மற்ற மாணவர்கள் கவனிக்கின்றனர்.

படத்தின் கதாநாயகி பதினறு வயதான ஷென்யா, வறுமையை உணர்ந்தவள்.

பாழடைந்த வீடு ஒன்றில் தாயுடன் வாழுகின்றுள்.

வசதி படைத்த குடும்பத்தில் பிறந்த மாணவன் போரிஸ் என்பவனை அவள் காதலிக்கிறுள்.

அவனும் காதலிக்கிறுன். அவன் தரத்துக்குத் தனது அந்தஸ்து பற்றி பொய் சொல்கிறுள், அவள்.

காதல் முற்றிக் கணவன் - மனைவி ஆக நடந்தும் கொள்கிறார்கள்.

அவளின் உண்மை நிலை தெரிந்ததும் அந்தஸ்தைப் பார்க்கும் காதலன் அவளைக் கைவிட்டு விடுகிறுன்.

[illegible]

ஆனல் அவன் இறுதியில் தண்டிக்கப்படுகிறுன்.

தண்டிக்கப்படாமல் தப்பி வாழும் இத்தகைய காதலர் பலர் சோவியத்தில் உலவுகிறுர்களே! அவர்களை என்ன செய்வது!

இப்படம் அதைக் கேட்டிருக்கிறது. ★

வசனம், பாடல் இல்லாத படம்

கபில்தேவ் அபிலாஷா நடிக்க வசனம், பாடல்கள் எதுவும் இல்லாமல் புதிய படம் ஒன்று தயாராகிறது.

எல். பி. சம்பைன்ஸ் சார்பில் எல். பி ருக்மாங்கதன் 'இளமைத் துடிப்புகள்' என்ற புதிய படத்தைத் தயாரிக்கிறுர்.

என். எஸ். ராஜு ஒளிப்பதிவு செய்ய, ராஜ்கோட்டி இசை அமைக்கிறுர். கிருஷ்ண சந்திரா டைரக்டு செய்கிறுர்.

இந்தப்படத்தில் வசனமோ, பாடல்களோ இல்லாமல் புதுமையான முறையில் தயாரிக்கப்படுகிறது.

கதாநாயகனுக கபில்தேவும் அவருக்கு ஜோடியாக அபிலாஷாவும் நடிக்கிறுர்கள் மற்றும் வேணு, சுவப்னபிரியா உட்பட பலர் நடிக்கிறுர்கள்.

வசனம், பாடல்கள் எதுவும் இல்லாமல் தயாரிக்கப்படுவதால், உலகின் பல்வேறு பகுதிகளிலும் ஒரே நேரத்தில் திரையிட ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

இப்படி சார்லி சப்ளின் சொன்னர்.

துணுக்கு

ஸ்ரீதேவி நடிக்கும் தமிழ்ப் படத்தின் பெயர் 'இலட்சியப் போராட்டம்'

லட்சுமிபிரசாத் என்டர்பிரைஸஸ் நிறுவனம் இப்படத்தைத் தயாரிக்கிறது.

ஸ்ரீதேவியுடன் நகார்ஜுனன் நடிக்கும் ஒரு காட்சி மைசூர் அரண்மனையில் படமாக்கப்பட்டது.

இப்படத்தில் ஜெயந்தி, சுஹாசினி ஆகியோரும் நடிக்கின்றனர். ★

சிம்பு சினி ஆர்ட்ஸ் தயாரிக்கும் 'சம்சார சங்கீதம்' படத்தின் கதாநாயகன் நான்கு வயது சிலம்பரசன்.

பிரபல டைரக்டர் டி. ராஜேந்தரின் மகன் சிலம்பரசன், வயது 4.

'என்தங்கை கல்யாணி' படத்தில் சிலம்பரசன் அடுக்கு மொழி வசனம் பேசியதுடன் சூரத்தனமான சிலம்புச் சண்டையும் போட்டு 'குட்டி' சுப்பர் ஸ்டார் என்று பெயரும் பெற்றுர்.

சிம்பு

தந்தை டி. ராஜேந்தர் பக்கம் பக்கமாக எழுதியுள்ள வசனத்தை மனப்பாடம் செய்து வருகிறுன் சிலம்பரசன்.

படத்தை ராஜேந்தரே இயக்குகின்றுர். ★

துணுக்கு

''பாட்டுக்கு ஒரு தலைவன்'' - விஜயகாந்த் நடிக்கும் புதிய படத்தின் தலைப்பு இது.

பூந்தோட்டக் காவல்காரன் படத்தைத் தயாரித்த தமிழன்னை சினி கிரியேஷன்ஸ் நிறுவனத்தினர் இப்படத்தைத் தயாரித்து வருகின்றனர். ★

வெள்ளித் திரையில்

துணுக்கு

பிரியம் புரொடெக்ஷன்ஸார் 'துருவ நட்சத்திரம்' என்ற பெயரில் புதிய படம் ஒன்றைத் தயாரிக்கின்றனர்.

கார்த்திக் இரட்டை வேடத்தில் நடிக்கிறுர். அவரின் ஜோடி நிஷாந்தி.

ராஜா இயக்குகிறுர். இவர் 'சங்கர் குரு', 'தாய்மேல் ஆணை' ஆகிய படங்களை இயக்கியவர்.

திரைக்கதை வசனம் துறையூர் கே. மூர்த்தி. இசை: இளையராஜா.

வி. சி. குகநாதன் 'எங்க குடும்பம் பெரிசு' படத்தை இயக்கி வருகிறுர்.

கதாநாயகியாக நிஷாந்தி நடிக்கும் இப்படத்தை மதர்லாண்ட் பிக்ஸர்ஸ் தயாரித்து வருகின்றது.

ராம்கி கதாநாயகனுக நடிக்கும் இப்படத்தை ஒரே ஷெட்யூலில் படமாக்கத் திட்டமிட்டுள்ளனர். ★

நாடகத்தை உருக்குலைத்த சினிமா இன்று வீடியோவால் அழிகிறது

திரைப்படத் தொழில் வளர்ச்சி மாநாடு அண்மையில் சென்னையில் நடந்தது.

தமிழ்த்திரைப்பட வர்த்தக சபை இதனை நடத்தியது.

சிறப்பு விருந்தினராக தி. மு. க. தலைவர் கலைஞர் கருணுநிதி பேசினர்.

அவர் அப்போது சொன்னதாவது;

ஒற்றுமை பற்றி பேசவேண்டாம் எங்கே ஒற்றுமை ஏற்படப் போகிறது என்று வலம்புரிஜான் பேசினர். ஒரு குழந்தையைப்பெற்ருேர் உருப்படமாட்டாய் என்று சொல்வது அந்தக் குழந்தை உருப்பட வேண்டும் என்பதற்காகத்தான்.

சினிமாவினுல் நாடகங்கள் சிதைந்தது. இன்று வீடியோவினுல் சினிமா பாதிக்கப்பட்டுள்ளது.

சிவாஜி, எம். ஜி. ஆர், எம். ஆர். ராதா, கே. ஆர். இராமசாமி, எஸ். எஸ். ராஜேந்திரன் போன்றவர்கள் எல்லாம் நாடகத்துறையில் இருந்து வந்தவர்கள் தான்.

தரம் குறையக் காரணம்

இன்றைய தினம் ஒருசிலர் நேரடியாக சினிமாத்துறைக்கு வந்து புகழ்பெற்ருலும், நாடகத்துறையில் இருந்து வந்தவர்கள் எல்லாம் சொத்தை-சோடை இல்லாமல் புகழ் பெற்றிருக்கிறுர்கள்.

அந்தக் காலத்தில் சினிமா படப்பிடிப்புக்கு முன்னுல் 4,5 நாட்கள் ஒத்திகை நடக்கும். எந்தப்பெரிய நடிகராக இருந்தாலும்ஒத்திகைபார்த்த பிறகுதான் அவருடைய நடிப்பைப் படம் ஆக்குவார்கள். ஆனல் இன்றே காலையில் ஒருபடம், பிற்பகலில் வேறுபடம், மாலையில் வேறு படம் என்று கலந்துகொள்கிறுர்கள்.

தொழில் நுட்பம்

அதைப்போல திரைப்படத் தொழில்நுட்ப நிபுணர்களின் நிலையும் இருக்கிறது. அதனுல் தான் தற்போது படத்தின் தரம் குறைந்துள்ளது. சரியான ஒத்திகை அதில் காட்டப்படும் அக்கறை குறைந்து இருப்பதுதான் தரம் குறைவதற்குக் காரணம்.

இப்படி கலைஞர் கருணுநிதி பேசினர். ★

கையிலே கமரா ஏந்தி

காரிகை இவள் கண் சிமிட்டுவது ஏன் ...?

கமராவைக் கையில் பிடித்து எவரும் படம் எடுக்கலாம் ...

.... ஆனல் கலையம்சத்துடன் தரமான படம் பிடிப்பது என்பது ஒரு கலை. எல்லோராலும் அது முடியாது.

அது போலவே ...

படச்சுருள்களைக் கழுவுதல், பிரதி செய்தல் என்பனவற்றையும் எல்லோராலும் நுட்பமாகவும், நுணுக்கமாகவும், தரமாகவும் செய்து தர முடியாது.

- ✶ உயர்ந்த தொழில் நுட்பத்துடனும், நுணுக்கத்துடனும் படச்சுருள்களை நவீன கம்பியூட்டர் மூலம், நேரில் பார்ப்பது போன்று மின்னும் தெளிவான கலர் போட்டோ பிரதிகளாக்கித் தருவதற்கும்-
- ✶ படச்சுருள்களை முற்றிலும் இலவசமாகக் கழுவுவதற்கும்-
- ✶ **ஒரு பிரதிக்கு ரூபா 4-75 மட்டுமே செலுத்தி -**
- ✶ மூன்று முதல் ஐந்து நாட்களில் நம்பிக்கையாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரே இடம்-

ஷ ப் ரூ 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

எல்லா நாட்களிலும் படச்சுருள்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வம் யார்!

கடுகுக் கதை

மாமாவின் மகள் சுமதியை அநாதைகள் - செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலையில் சேர்ப்பதற்காக அப்பாடசாலையின் அதிபர் ஹச்சின்ஸ் அம்மையாரைச் சந்திக்கச்சென்றேன். அதிபரின் அலுவலக வாசலில் காத்திருந்தேன்.

அவ்விடத்தில் இரு குழந்தைகள். ஒன்று ஆண், மற்றது பெண். இருவருமே அழகுப் பதுமைகள்.

ஆனல் ஆண்டவன் அவர்களுக்கு பார்வையைக் கொடுக்க மறந்துவிட்டான்.

கண்களில் பார்வையில்லாவிட்டாலும் ஹச்சின்ஸ் அம்மையாரின் அன்புக் கரங்களின் துணையில் அந்தக் குழந்தைகள் உலகத்தைப் பார்க்கமுடிந்தது. தம் உணர்ச்சிகளை அவர்களால் வெளியிடவும் முடிந்தது.

'ரோஜாமலர் எப்படி இருக்கும்?' சிறுவன்.

'சிவப்பாக இருக்கும் ராஜன்' சிறுமியின் பதில்

'சிவப்பா!..எப்படியிருக்கும் சரோஜினி?'

'உனக்குத் தெரியாது... இரத்தம்மாதிரி இருக்கும்'

'போம், உமக்கு விளக்கத் தெரியாது, என்ருன் ராஜன்! ரோஜா மென்மையாக இருக்கும்' வாசனையாக இருக்கும், என தனக்குத் தெரிந்தவரை விளக்கினுள் சிறுமி சரோஜினி.

'டிங்... டிங்... டிங்...' பாடசாலை மணி ஒலிக்கிறது.

இருவரும் அங்கிருந்து நகருகின்றனர். எனக்கே அவர்களிடம் பேச வேண்டுமென்ற ஆவல் தூண்டிநிற்க, 'தம்பி, தங்கச்சி' என்றேன்.

'என்ன', குரல் வந்த திசையை நோக்கித் தம் பார்வை இழந்த விழிகளைத் திருப்பி. நீங்கள் யார், நாம் அறியலாமா?'

'நான் அதிபர் ஹச்சின்சை சந்திக்க வந்தேன். இங்கு நீங்கள் ரோஜா பற்றி பேசியதைக் கேட்டேன்' என்றேன்.

'ஆமாம் நான் ரோஜாவைப் பார்த்திருக்கிறேன்'

'என்னம்மா சொல்கிருய் நீ?' வியப்புடன் வினவினேன்.

'நான் அதிக ரோஜாவைப் பார்த்துள்ளேன், மாமா, எங்கள் வீட்டிலே, அக்காவின் வெடிங்கிலே அதிக மாலைகள் போட்டார்கள் என்னுல் அப்போ எல்லாம் பார்க்கமுடியும். அதற்குப் பின்பே பார்க்க முடியாமற்போயிற்று. ஆனல் இப்போதுஎன்கையால்கோலம் போடுவேன். எழுதுவேன்' என்ருள் சரோஜினி.

'நான்கூட நன்ருகப் படிப்பேன்' இது சிறுவனின் குரல்.

'ஆனல்எங்கள் ராஜனுக்குப் பிறந்ததிலிருந்தே கண்ணே தெரியாதாம்.

அவன் தனது அம்மாவைப் பார்க்கவில்லை. அப்பாவையும் பார்க்கவில்லை. பாவம் இல்லையா? மாமா?'

'சரோஜாவைப்போலவே ரோஜா அழகாக மென்மையாகயிருக்கும்' என்று கூறி ராஜன் சிரித்தான். அவன் முகத்தில் புரிந்துவிட்ட, அறிந்துகொண்ட திருப்தி களையிட்டது. ஆம் பிறவியிலே பார்வை இல்லாத அச்சிறுவனுக்கு உணர்வால் தெரிந்திருந்தது. பெண் அழகு புரிந்திருந்தது.

'டிங்.. டிங்... டிங்'

'சரி மாமா இரண்டாம் பெல் அடிக்கிறது. நாங்கள் போகின்ருேம் வா ராஜன்', இருவரும் கைகோர்த்துப் பழகிய பாதையில் விரைந்து சென்றனர்.

அன்று நான் வந்த வேலை முடியவில்லை. மறுநாள் காலை எட்டுமணிக்கு சுமதியின் பெற்ருேருடன் வரும்படி காரியாலயத்தில் உள்ள ஒருவர் கூறினர்.

மறுநாள் சென்றேன். அந்த இரு சிறுவர்களையும் பார்க்க வேண்டுமென்று எனது மனம் துடித்தது. அங்கு சில சிறுவர்கள் அதிபரின் அலுவலகத்தைச் சுறுசுறுப்பாக சுத்தம் செய்துகொண்டிருந்தனர்.

கண் இழந்தவர்கள் கண் இழந்ததால் உயர்வு பெற்றிருந்தார்கள். அதிபரும் அவர்களுக்கு ஒத்தாசை செய்துகொண்டிருந்தார். ஹச்சின்ஸ் அம்மையார் போன்றவர்களின் பரோபகார இரக்கச் சிந்தனையை எப்படி விபரிப்பது.

தங்கள் தனி இன்ப வாழ்வைத் துறந்து பிறருக்குச் சேவை செய்வதில் இன்பம் கண்டார். அது அவர்களுக்குரிய தனிப்பண்பு.

அம்மையார் உயிருடன் வாழும் பொழுதே அவர்களின் சேவையால் மிளிர்ந்த கோவை மக்கள் 'ஹச்சின்ஸ் ஞாபகார்த்த மண்டபத்தை' எழுப்பினுர்கள்.

சரோஜினியையும் ராஜனையும் பார்க்கவேண்டுமென்று எனதுமனம் துடித்தது. அதிபர் வந்துகொண்டிருந்தார். சரோஜினியும் வந்துகொண்டிருந்தாள். நான் அவளைக் கூப்பிட எண்ணினேன். அதற்கிடையில் ஹச்சின்ஸ் அம்மையார்,

'சரோஜினி என்ன காரியம் செய்தாய்? எங்கள் தோட்டத்திலிருந்த ரோஜாப்பூவைப் பறித்தாயா?' என்ருர்.

அதிபர் மிகுந்த கோபத்துடன் வினவினுர். பதட்டத்துடன் காணப்பட்டார். சில நிமிடங்களுக்கு முன் அதிபர் மீது நான்கொண்ட மதிப்பீடு குறைவுறுவதை உணர்ந்து ஏங்கினேன். அதிபர் சிவந்த முகத்துடன்,

'எவ்வளவு தவறு செய்துள்ளாய் சரோஜினி? தோட்டத்தில் மலர்ந்த அந்த முதற் பூவை என்பிதா யேசுவுக்கு முன் சமர்ப்பிக்க இருந்தேன், நீர் எனது விருப்பத்தைத் தவிடுபொடியாக்கிவிட்டாயே?' என்று மூச்சு விட்டார் வருத்தம் தோய்ந்த குரலில்.

'மடம், என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். உங்களது ஆசையை நிறைவேருது செய்துவிட்டேன். நான் அந்த மலரை என்னை அழகுசெய்வதற்காக எடுக்கவில்லை. கண்ணிழந்த எனக்கு, என்போல பல அனுதைகளுக்கு, வலம் குறைந்தோர்க்கு, வாழ்வளித்துவந்த, வாழ்வளித்து வரும், வாழ்க்கை வாழ்வதற்கே, உலகில்வலம் குறைந்தோர் வாழமுடியும் என்ற நம்பிக்கையை ஊட்டிவிட்ட உங்கள் காலடியில் இந்த ரோஜா மலரைச் சேர்க்க வேண்டுமென்று ஓடிவந்தேன்.

எனக்கு நீங்கள்தான் தெய்வம். என்னை மன்னித்துவிடுங்கள்' என்ருள்.

அவள் கண்களில் நீர்முட்டி வடிந்தது. சரோஜினியின் செய்கையில், பேச்சில் உண்மை உணர்வு வெளிப்பட்டது. அதனை உணர்ந்த அதிபர் சரோஜினி நீட்டியபடி வைத்திருந்த மலரை அன்போடு வாங்கி அவள் கண்ணீரைத் துடைத்து ஆதரவாக முதுகை வருடிவிட்டார்,

'எல்லாம் தேவசித்தம், சரோஜினி', என்ருர் தழுதழுத்தகுரலில் அதிபர் ஹச்சின்ஸ் அம்மையார். சரோஜினி அதிபர் கைகளில் தன் சிறு இதழ்களைப் பதித்தாள். அதிபர் 'தெய்வம் யார்' என்று விளக்கம் கூறமுடியாத நிலையில் உணர்ச்சிவசப்பட்டவராக நின்ருர்.

இந்த நிகழ்வுகள்...என் கண்களில்... என் உள்ளத்தில் உணவுகளில் ஊறி விட்டன. அதிபரின் கண்டிப்பால் அவர்மீது ஏற்பட்ட என்மதிப்பின் குறைபாடு இப்போது மேலும் உயர்ந்து நின்றது. ★

- கோண்டாவில் பூ. க. இராசரத்தினம் -

நெஞ்சக் கல்லைக் கரைக்கும் மருந்து
அருணகிரியாரின் கந்தர் அநுபூதி

அருணகிரியார் முருகனின் திருவருள் பெற்று அநுபவித்த அநுபவங்களே அநுபூதியாகும்.

அநுபூதி என்பது மகிழ்ச்சியான ஒருநிலை. நெகிழ்ந்த மனம் உடையவர்களிடமே மகிழ்ச்சி இருக்கும்.

உடலின் பலபாகங்களில் சிலருக்குக் கற்கள் இருக்கும். அவற்றையெல்லாம் மருத்துவரின் உதவி கொண்டு எடுத்துவிடலாம்.

ஆனல், நெஞ்சமாகிய கல்லைக் கரைக்க எந்த மருத்துவரிடமும் மருந்து கிடையாது. அதற்கு மருந்து வேண்டுமானுல் அருணகிரிநாதரிடம் தான் செல்ல வேண்டும். அவர் கொடுக்கும் மருந்துதான் அநுபூதி.

கந்தர் அநுபூதியைப் படிப்பதன் பயன் அல்லது பாராயணம் செய்வதன் பயன் நெஞ்சமாகிய கனத்த கல்லை உருகச் செய்வதுதான் என்று எடுத்த எடுப்பிலேயே சொல்லி விடுகின்ருர். நெஞ்சக்கனகல்லை உருக்க முதலிலேயே விநாயகப் பெருமானின் அருளை அவர் பெற்றுவிடுகின்ருர்.

நெஞ்சம் உருகியவர்களிடம் மகிழ்ச்சி குடிகொள்ளுகிறது: அவர்கள் நீடூழி வாழ்வார்கள். முருகன் அவர்களிடம் களித்திருப்பான். அவர்களே அநுபூதியை அடையத்தக்கவர்கள்.

இறை எது?

அநுபூதியில் இல்லாதவையே இல்லை. வேதங்கள், ஆகமங்கள், உபநிடதங்கள், சாத்திரங்கள், புராணங்கள் முதலிய அனைத்தின் கருத்துக்களும் இதில் அடங்கியுள்ளன.

இறை எது? என்பதற்கு வேதம் 'பிரம்மம்' என்று சொல்கிறது. அருணகிரிநாதர் 'அரிதாகிய மெய்ப்பொருள்' என்று அதனை அழகாக விளக்கி விடுகிருர். அந்தப் பிரம்மம் எங்கும் பரந்து இருக்கிறது என்ற வேதக் கருத்தை,

'சுயோனை டருவித்
துறையோடு பசுந்
தினையோ டிதனே
டுதிர்ந் தவனே'

என்று கூறுகிருர்.

- ஆத்மஜோதி நா. முத்தையா -

பெருவெள்ளம் வருகிறது. அதுவும் நீர் தான்; நம் வீட்டுக் கிணற்றிலே இருப்பதும் நீர் தான். ஆனல் இதை வெள்ளம் என்று சொல்ல மாட்டோம். அதுபோல் உலகில் எல்லாப் பொருள்களிடமும் தெய்வம் இருக்கிறது. ஆனல் நாம் எல்லாவற்றையும் தெய்வம் என்று சொல்வதில்லை. நீரானது எங்கும் பரந்திருப்பது போல் எல்லா இடங்களிலும் முருகன் உறைகிருன் என்பதை,

'உருவாய் அருவாய்
உளதாய் இலதாய்
மருவாய் மலராய்
மணியாய் ஒளியாய்'

என்று அருணகிரிநாதர் விளக்குகின்ருர்.

ஆனல் எல்லாம் முருகன் என்று மரத்தையும் மட்டையையும் வணங்க முடியுமா? அதைத் தான்,

'உருவன்று அருவன்று
உளதன்று இலதன்று
இருளன்று ஒளியன்று
எனநின் றதுவே'

என்று கூறுகிருர். அது உருவமாயிருக்கிறது; ஆனல் அது உருவமல்ல. அருவமாயிருக்கிறது; ஆனல் அருவம் அல்ல. அது எங்கும் உள்ளது; அது எங்கும் காணும்படி இல்லை; ஆனல் இருக்கிறது.

பூரண மகிழ்ச்சி

ஒவ்வொருவரும் இதை உணர்ந்து கடவுள் எங்கும் இருக்கிருர்; அவரிடம் நான் இருக்கிறேன். என்று நினைத்தால் பூரண மகிழ்ச்சி கிடைக்கும். அந்த மகிழ்ச்சியை அடைய வேண்டுமானுல்

'முருகன் குமரன்
குகனென் றுமொழிந்
துருகுஞ் செயல்தந்
துணர்வென் றருள்வாய்'

என்றுஅருணகிரிநாதர்வேண்டுகிருரே. அந்த உணர்வு வர வேண்டும். அந்த உணர்வைப் பெறுவதே அவனை அடையச் சிறந்த வழியாகும். இறைவனை இந்த உணர்வு ஒன்ருல் தான் அறிய முடியும். இந்த உணர்வைத்தான் பக்தி என்கிருேம். இறைவனை அன்புருவாகத் தான் பெரியவர்கள் வழிபட்டு வந்திருக்கிருர்கள்:

'அன்பே என்
அன்பான அறிவே
அறிவிலூறும் ஆனந்த
வெள்ளமே'

என்று தாயுமானவர் பாடுகின்ருர்.

அன்பும் அறிவும் சேர்ந்ததே அநுபூதி.

கற்கண்டு இருக்கிறது; அது சுவையாக இருக்கும் என்று அறிவு சொல்கிறது. அதனுல் அதன்பால் ஓர் அன்பு ஏற்படுகிறது.

அநுபூதி

முருகனை அறிய வேண்டும்; அறிந்து அவன்பால் அன்பு கொள்ள வேண்டும். இந்த அறிவும் அன்பும் கலந்ததனுல் ஏற்படும் அநுபவமே அநுபூதி.

மனிதன் ஆண்டவனுக்குத் தன் அன்பைச் செலுத்துகின்ருன். இறைவன் அவனுக்குத் தன் அருளைப் பொழிகின்ருன். அன்பும் அருளும் கலந்ததே ஆனந்தம். அதுவே கடவுள் நிலை; அதுவே அநுபூதி.

அன்பைச் செலுத்தும் மனிதனும் அருளைப் பொழியும் ஆண்டவனும் எப்பொழுதும் இணைந்தே நிற்கிருர்கள். அவனுக்கு இவன் மறைவதில்லை. இவனுக்கு அவன் மறைவதில்லை.

ஆனந்தத்தை அடைய என்ன செய்ய வேண்டும்? தெய்வத்தன்மையை அடைய வேண்டும். அதை அடைய வழி உள்ளும் புறமும் ஒன்ருய் இருப்பதுதான். கருத்திலே கர்ப்பமாகி வாயினுல் பாட வேண்டும்.

'பாடும்பணியே பணியாய் அருள்வாய்' என அருணகிரியாரும்,

'வாயினுல் பாடி
மனதினுல் சிந்திக்க
போயபிழையும் புகுதருவான்
நின்றனவும்
தீயினில் தூசாகும்
செப்பேலோ ரெம்பாவாய்'

என்று ஆண்டாளும் பாடுகின்ருர்கள்.

புகழ் நாமம் செவி கேட்க வேண்டும். நாநாமம் நவின்றேத்த வேண்டும் என்று பெரியவர்கள் சொல்லுகிருர்கள். ★

ஏழைக் கன்னி!

சீர்த்தளிர்க் கைகள் பொத்திய மார்பினள்
வார்த்தையில் வடிக்கவொண்ணு வண்ண வடிவினள்
காவலன் கொபீட்டாமுன் வந்தனள்
அணி அறு பாத வறிய வனிதை
பணி மொழியாள் தனை வழியினில் வாழ்த்தி வரவிட
அணியுடை மணி முடி மன்னன் வந்தனன் இறங்கி
நாளிலும் அழகி இந்த நளினப் பொற்பாவை என்று
வேளிர் வியந்துசொன்ன வார்த்தைகள் வாரியாமே
அழுக்குறு ஆடையில் அவ்விளவழகி
விளக்கறு முகிலினுள் வெண்மதியொத்தாள்.
சணுக்கால் அழகினை காந்தக் கண்களை
காரினைப் பழிக்கும் கரிய கூந்தலை
பொற்புறு மேனிப் பொழிப்பினைப் புகழ்ந்தவர்
பல்லோர் பல்லோர் பல்லோராமே
அந்நகர் தன்னில் எந்நாளேனும் உறைந்திடா
இன்முக வனப்பினள் அரம்பை அருளினள்
இவ்வேழைக் கன்னி எந்தன் ராணி
என்று சத்தியம் செய்தான் ஏந்தல் கொபீட்டா.

ஆங்கிலக் கவிஞன் அல்பிரட் ரெனிசனின்
'The Beggarmaid' என்ற கவிதையின் தமிழ்வடிவம்.
தமிழாக்கம்:ஜி. இராஜகுலேந்திரா.

தமிழுக்கு இனிமை சேர்க்கும் அப்பரின் தேவாரப் பாடல்கள்

தமிழ் அறிஞர்கள் மட்டுமன்றி சாதாரண மக்களும் தேவார, பெரிய புராண பாடல்களைப் புரிந்து கொள்ளும் வகையில் 'உரைக்கோவைகளை' வெளியிட ஆதீனங்களும், தொண்டு நிறுவனங்களும் முன்வர வேண்டும்.

தேவார மூவரில் சம்பந்தர், சுந்தரர், வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் காட்டிலும் (நாவுக்கரசர்) அப்பரது வாழ்க்கை நிகழ்ச்சிகள் பக்தி உருக்கம் நிறைந்தவை.

சைவநெறிக் குடும்பத்தில் பிறந்த அவர் சமண மதத்தில் சேர்ந்த பின்னர் இறை அருளால் மீண்டும் சைவ சமயத்துக்கு வந்து திருப்பணிகள் மூலம் ஞானஒளி பெற்ருர்.

தமிழில் நல்ல பல நூல்கள் ஏராளமாக இருந்தும் அவைகளை விடுத்துப்பயனற்ற கதைகளைவாங்கிப் படித்துமனதைப் பாழ்படுத்திக் கொள்ளும் பரிதாபத்துக்கு உரியவர்களாகப் பலர் உள்ளனர்.

அப்படிப்பட்டவர்களுக்கு நல்வழிகாட்டுவதாக, வழி தவறியவர்கள் திருந்த, [illegible] நாவுக்கரசரின் வாழ்க்கை அமைந்துள்ளதை அவரது தேவார இசைப்பாடல்கள் மூலம் உணர்ந்து அறியமுடிகிறது. தமிழ் மொழியின் மீது அவர் கொண்ட தணியாத அன்பினுல் அவரது தேவாரம் தமிழ் இசைக்கு இனிமை சேர்க்கிறது.

திருச்சியில் அப்பர் தேவார இசை விழா அண்மையில் கொண்டாடப்பட்டது. அதற்கு பாரதிதாஸன் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் எஸ். முத்துக்குமரன் தலைமை வகித்துப் பேசினுர். பேச்சின் ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது.

பல நிறுவனங்கள் தேவாரப் பாடல்களையும், பெரிய புராணப் பாடல்களையும் புத்தக வடிவில் வெளியிட்டிருக்கின்றன. ஆனல் அந்தப் பாடல்களுக்குப் பொருள், தெளிவுரைகள் வெளியிடப்படவில்லை. தமிழ் அறிஞராக இல்லாத சாதாரண மக்களுக்கு இந்தப் பாடல்கள் முழுவதுமாகப் புரிந்துவிடும். ★

பொது அறிவுப்போட்டி இல. 11

1. நீரில் நீந்தத் தெரியாத மிருகம் எது? ... ... யானை / ஒட்டகச்சிவிங்கி
2. நாட்கணக்கில் பறக்கும் பறவை எது? ... ... பச்சைக்கிளி / வெட்டுக்கிளி
3. ஆண்/பெண் ஒன்ருக உள்ள ஜந்து எது? ... ... மண்புழு / ஓணன்
4. குயிற்பாட்டுப் பாடிய கவிஞர் யார்? ... ... கண்ணதாசன் / பாரதியார்
5. 'செக்ஸ்' சாமியார் என்று பெயரெடுத்தவர் யார்? ... ... சுப்பிரமணியசுவாமி / ரஜனீஸ் சுவாமி
6. முக்கனிகளில் ஒன்று எது? ... ... பலாப்பழம் / அன்னுசி
7. பயணம் செய்பவனுக்குத் துணை எது? ... ... கற்றகல்வி / தேடிய பணம்
8. ஔவையார் கூறிய அரியது எது? ... ... தெய்வப்பிறவி / மானிடப்பிறவி
9. ஒலிம்பிக் போட்டி இம்முறை எங்கு நடைபெறுகிறது? ... ... சோல் / ஏதென்ஸ்
10. 'பைங்கிளி' பட்டம் எடுத்த நடிகை யார்? ... ... நதியா / சரோஜாதேவி
11. தலையில் சூடிக்கொள்வது எது? ... ... பூ / கிரீடம்
12. 'பிரமிட்' உள்ள நாடு எது? ... ... இஸ்ரவேல் / எகிப்து

பெயர்:- ....
விலாசம்:- ....
....

பொது அறிவுப்போட்டி இல: 11
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

------ இங்கே வெட்டுக ------

நிபந்தனைகள்:

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ளமுடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 31. 8. 88 புதன்கிழமைக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

முதலாம் பரிசு: 100 ரூபா
இரண்டாம் பரிசு: 50 ரூபா
மூன்றும் பரிசு: 25 ரூபா

டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.



'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®

ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

Grant BJK&E PFL 1157

தினமும் டியூரோல்® அருந்துங்கள்.
அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.

சில்லறை விலை ரூ. 37/50 200 மி. லி.

Pfizer

சில்லறை விலை ரூ. 39/90 200 மி. லி.

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக அரசியல் - ஒரு கண்ணோட்டம்

தேர்தல் ஒத்திவைப்பால் யாருக்கு லாபம்?

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது பற்றி அரசியல் தலைவர்கள் ஆட்சேபம் தெரிவித்தாலும், எல்லாக் கட்சிகளுக்குமே இது ஒருவகையில் வசதியாக இருக்கிறது.

இ. காங்கிரஸ் கட்சிக்குத் தமிழகத்தில் காலூன்றிக் கொள்ள மேலும் அவகாசம் தேவைப்படுகிறது. அநேகமாக எல்லாத் தொகுதிகளிலுமே இ.காங்கிரஸுக்கென்று கீழ்நிலையில் ஒரு கட்டுக்கோப்பான அமைப்பு இல்லை. இதற்கான முயற்சிகளை மூப்பனார் எடுத்து வருகிறார் என்றாலும், தொகுதிவாரியாகத் தேர்தல் கமிட்டிகளை அமைத்து இ. காங்கிரஸுக்கு ஆதரவு திரட்

ஜெயலலிதா

டும் பணியை அங்குள்ள முக்கிய தலைவர்களிடம் அவர் விட்டுவிட்டார். கட்சியிலுள்ள உட்பூசல் காரணமாக அநேகமாக எல்லா மாவட்டங்களிலும் நான் பெரியவனா, நீ பெரியவனா என்ற போட்டி இருக்கிறது.

மேலே இருந்து திணிக்கப்படும் தலைவர்கள் பொதுவாகக் கீழ்நிலைத் தொண்டர்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்பதை இ. காங்கிரஸ் கட்சியானது இன்னும் உணரவில்லை. இவர்களிடம் ஏராளமான பணத்தை ஒப்படைத்துக்கட்சிக்கான ஆதரவைத் திரட்டிவிடலாம் என்ற பேதமையான கொள்கையைக் கட்சி மேலிடம் கடைப்பிடிக்கிறது. பணத்தின் மூலம் இவர்கள் செய்ய முடிவதெல்லாம், இவர்களைச் சுற்றி ஓர் அடியாள் கூட்டத்தை ஏற்படுத்திக் கொள்வதும் சொந்த வசதிகளுக்குக் கட்சிப் பணத்தைச் சுவீகரித்துக் கொண்டு விட்டார் என்ற அபகீர்த்தியுமேயாகும்.

ஜெ: அணியுடன் கூட்டு

தமிழகத்தில் இ. காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவதா அல்லது ஏதோ ஒரு திராவிடக் கட்சியுடன் கூட்டுச் சேர்வதா என்ற குழப்பம் தொடர்ந்து நிலவுகிறது. அண்மையில் சென்னை விஜயத்தின்போது பிரதமர் இந்தக் கேள்விக்குத் தேர்தல் வரும்பொழுது யாருடன் கூட்டணி என்பதை முடிவு செய்வோம் என்று சொல்லிவிட்டார்.

இ. காங்கிரஸ், ஜெயலலிதா அணியுடன் கூட்டணி வைத்துக்கொள்ள வேண்டும் என்று காண்பித்த ஆர்வம் இப்பொழுது குறைந்துவிட்டதாகத் தெரிகிறது.

நெடுஞ்செழியன் கோஷ்டி ஜெயலலிதா அணியைவிட்டுப் பிரிந்தபின்பு தற்பொழுது இ. காங்கிரஸுக்கு வேறு கூட்டாளி கிடைத்திருக்கிறது. ஆனால் நெடுஞ்செழியன், அரங்கநாயகம், திருநாவுக்கரசு, பண்ருட்டி ராமச்சந்திரன் ஆகிய நால்வரும் அ. இ. அ. தி. மு. க. வின் மாவட்ட அமைப்புகளை வசப்படுத்த முடியுமா? ஜெயலலிதாவின் கவர்ச்சி அரசியலுக்குப் போட்டியாக நின்று எம். ஜி. ஆர். தொண்டர்களின் அபிமானத்தைப் பெறமுடியுமா? என்பதெல்லாம் சந்தேகத்திற்குரிய விஷயமாகவே இருக்கிறது.

ஜெயலலிதா அணியைப் பொறுத்தவரை கட்சித் தலைமைப்பீடமும், பெரும்பான்மை மாவட்டச் செயலர்களும், தொண்டர்களும் அவர் பக்கம் இருப்பதாகவே தெரிகிறது. அவர் மீதுள்ள குற்றச்சாட்டுகள் அவருடைய குணங்களையும் நடவடிக்கைகளையும் பற்றிய விமர்சனங்களாக இருக்கின்றன. இவற்றில் உண்மை எது, அவதூறு எது என்று பிரித்துப் பார்ப்பது சிரமம். பொதுவாக, ஜெயலலிதாமீது சுமத்தப்படும் அத்தனை குற்றச்சாட்டுகளும் எம். ஜி. ஆர். மீதும் கூறப்பட்டன.

ஜெயலலிதாவின் ஒவ்வொரு நடவடிக்கையும் எம். ஜி ஆரின் பாணியை நினைவூட்டுவதாக இருக்கின்றது என்றாலும் எம் ஜி. ஆருக்கு

எம். ஜி. ஆர்.

இருந்த ஒரு ராஜதந்திர அணுகுமுறை ஜெயலலிதாவிடம் காணப்படவில்லை. எம். ஜி. ஆருடைய சர்வாதிகாரப் போக்கு அவருடைய ஆட்சி உறுதியாக நிலைபெற்ற பிறகே வெளிப்பட்டது. அந் நிலையில் புரட்சித் தலைவருக்கு எதிராகக் குரல் எழுப்பியவர்களெல்லாம் அடங்கி, ஒடுங்கிப் போகவேண்டியதாக ஆயிற்று.

ஜெ.யின் திட்டம்

ஜெயலலிதாவோ, தான் முதல்மந்திரியாகவே ஆகிவிட்டதாக எண்ணி கட்சித் தலைவர்கள் மற்றும் தொண்டர்களிடமிருந்து பணிவை எதிர்பார்க்கிறார்கள். ஆட்சிப் பதவியில் அமரும் வரையிலாவது அனைவரையும் அரவணைத்துப் போகும் வகையில் அவர் நடந்து கொள்ளாமல் அவருடைய கட்சி உடைந்து போக அனுமதித்தது ஜெயலலிதாவின் முன்னேற்றத்திற்கு ஒரு பெரிய பின்னடைவு என்றே சொல்லவேண்டும்.

தற்பொழுதுள்ள சூழ்நிலையில் ஜெயலலிதா, இ. காங்கிரஸுக்கு எதிரணியில் நிற்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் வைக்கப்பட்டுள்ளார். அவரை முதல்வராக்க இ. காங்கிரஸின் அதிகார பலமும் பணப் பலமும் பயன்படும் என்று எண்ணி அவர் போட்ட திட்டம் பண்ருட்டி ராமச்சந்திரன் கோஷ்டியின் எதிர் நடவடிக்கைகளினால் தோல்வி அடைந்துவிட்டது. இனி அவர் தனித்து நின்று போட்டியிடவேண்டுமானால் கருணாநிதி, ஜானகி ஆகியோருக்குக் கிடைக்கக்கூடிய வோட்டுக்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டியிருக்கும்.

காங்கிரஸ் எதிர்ப்பு வோட்டுக்ள் பெரும்பான்மை தி. மு. க. விடமே உள்ளன. எம் ஜி ஆர். அபிமானிகளின் வோட்டுக்களைத்தான் ஜானகியும், ஜெயலலிதாவும் பிரித்துக்கொள்ள முடியும் என்பதோடு அ. இ. அ. தி. மு. க. வின் பூசல்களைக் கண்டு வெறுத்துப் பலர் தி. மு. க. சார்பாகவோ காங்கிரஸ் சார்பாகவோ மாறக்கூடும்.

தேர்தல் ஒத்திவைப்பினால் ஜெயலலிதாவுக்குக் கிடைத்த ஒரே ஒரு லாபம், கட்சிக்குள் இருந்து அவரது தலைமையை முழுதும் ஏற்காத மூத்த தலைவர்கள் சிலரை வெளியேற்ற முடிந்ததுதான். இனி ஜெயலலிதா தனது கட்சியின் முன்னேற்றத்திற்கு முன்னைவிட அதிகப் பிரயாசைப்பட

ஜானகி

வேண்டியிருக்கும். அதற்கு முன்பாக அவர் மீது கூறப்படும் புகார்களுக்குத் தக்க பதில்களை மக்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் அவர் தெரிவிக்கவேண்டும்.

ஜெயலலிதா கட்சியைச் சேர்ந்த சில மூத்த தலைவர்களே அவர் ஒரு சர்வாதிகாரி, கட்சிப் பணத்தைச் சொந்த வசதிகளுக்காக விரயமாக்குபவர், கட்சித் தலைவர்களையும் தொண்டர்களையும் அவமதிப்பவர், ஆணவப் போக்கு உடையவர்' என்றெல்லாம் விமரிசித்துள்ளார்கள்.

இவ்விதமான குற்றச் சாட்டுகளுக்கு இடம் கொடுக்காதவாறு இனிமேலாவது அவர் நடந்துகொண்டால்தான் அவரது தலைமையைத் தக்கவைத்துக் கொள்ள முடியும்.

கருணாநிதியின் லாபம்

தேர்தல் ஒத்திவைப்பால் அதிக லாபம் பெற்றுள்ளவர் கருணாநிதி. அவருடைய எதிரிகள், குறிப்பாக ஜெயலலிதா அணி கலகலத்துப்போய் காங்கிரஸோடு கூட்டணி வைத்துக் கொள்ளும் வாய்ப்பும் குறைந்து போய்விட்டது குறித்து தி. மு. க. தலைவர் மிகவும் உற்சாகமடைந்திருப்பதைப் பார்க்க முடிகிறது.

இது தவிர, தேசிய அளவில் இ. காங்கிரஸுக்கு மாற்றாக உருவாகியுள்ள ஏழு கட்சி எதிர்ப்புக் கூட்டணியில் தி. மு. க. விற்கு இடமும், அகில இந்திய அளவில் காங்கிரஸை வீழ்த்துவது குறித்த ஆலோசனைக் கூட்டத்திற்கு கருணாநிதி அழைக்கப்பட்டிருப்பதும் அவருக்கும் அவருடைய கட்சிக்கும் புதிய அந்தஸ்தைத் தந்துள்ளன.

தி மு. க. வின் உறவால் தமிழ்நாட்டில் வி. பி. சிங் தலைமையிலான சமாஜவாதி ஜனதா கட்சிக்கும் சந்தேகத்திற்குரிய அந்தஸ்து கிடைத்திருக்கிறது. ஆனால் இது எந்த அளவிற்குத் தமிழ்நாட்டு மக்களின் ஆதரவைப் பெறும் என்பது இனிமேல்தான் தெரியவரும்.

தி. மு. கவுடன் கூட்டுச் சேர்ந்திருப்பது, இந்தப் புதிய கட்சியின் சந்தர்ப்பவாதத்தையே வெளிப்படுத்துகிறது. சமாஜவாதி ஜனதா கட்சியின் கூட்டணியில் தி. மு. க. இடம் பெற்றால் அக் கூட்டணியின் கொள்கைகளுக்கு இசைந்து தி. மு. க. செயல்படும் என்பது உறுதியில்லை. குறிப்பாக மும்மொழித்திட்டம், ஊழல் எதிர்ப்பு ஆகிய முக்கியமான அம்சங்களில் தி. மு. க. நிலை தர்மசங்கடமானது.

தமிழ் நாட்டில் காங்கிரஸ் எதிர்ப்பு அணி என்பது தி. மு. க. கூட்டணியுடன் மட்டும் நின்றுவிடவில்லை. சிவாஜி கணேசனின் தமிழக முன்னேற்ற முன்னணி, அ. இ. அ. தி. மு. க. ஜானகி அணி,

சென்னையிலிருந்து தி. மோகன்

தற்பொழுது ஜெயலலிதா அணியும் கூட இந்த காங்கிரஸ் எதிர்ப்புக்கூட்டணியில் இடம் பெறுவதற்குத் தகுதி பெற்றுள்ளன.

காங்கிரஸ் எதிரணி என்பது தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தி. மு. க. எதிர்ப்புச் சக்தியைப்போலவே ஒருமுகப்படுத்தப்படாமல் சிதறிக் கிடக்கின்றது. ஆதரவைத் திரட்டுவதில் இ. காங்கிரஸின் தவறான அணுகுமுறை காரணமாக எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை என்றாலும் தெலுங்கு கங்கைத் திட்டம், காவிரி நீர் பற்றிய ஒரு சமரச முடிவு, விடுதலைப் புலிகளுடன் உடன்பாடு ஆகியவை குறித்த முயற்சிகளில் வெற்றி கண்டாலொழிய தேர்தலில் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பில்லை. ★

சொற்சிலம்பம்

போட்டி இல. 86



சொற்சிலம்பம் இல: 86
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ....

விலாசம்: ....

....

——— இங்கே வெட்டுக ———

முடிவு திகதி: 7-9-1988

இடமிருந்து வலம்

1. காலிலிருந்து தலை 6. மறைப்பது 7. மனைவியின் இறுதியைக் காணவில்லை 8. பெண் அல்லன் 9. குரங்கு 10. மறி 11. இழை 12. கொடை வள்ளல் 14. ஒரு மாதம் 16. கவனியாமல் விடுதல் 19. ஆண்பால் பெயர் விகுதி 20. பொருந்தும் 21. உபகாரம் 22 பலவின் பால் சுட்டுப்பெயர் 23. திரட்சியாகக் காணப்படும் நெருப்பின் வடிவம்.

மேலிருந்து கீழ்

1. அரைவாசி 2. நீர் வார்த்து ஒப்படைத்து விடு 3. ஓர் இராகம் 4. பூவைச் சேர்த்துக் கட்ட வருவது 5. பறக்கும் பூச்சி இனம் 8. உபசாரம் செய் 11. 24 நிமிடம் கொண்ட ஒரு கால அளவை 12. நீர்த்தன்மையான இடத்தில் வளரும் 13. சிறியது. காரம் பெரியது 14. விஷ்ணு 15. கால் நடைகளுள் ஒன்று 17. கணவனை இழந்தவள் 18 வயதில் சிறியவன் 19. அடைக்கும் தாழ் இல்லாதது 21. 'நாம்' வேற்றுமையுருபு ஏற்கும் போது வருவது.

நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தை பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

முதலாம் பரிசு:	100 ரூபா
இரண்டாம் பரிசு:	50 ரூபா
மூன்றும் பரிசு:	25 ரூபா

அறிவுக்கும் திறமைக்கும் ஏற்ற சமுதாயம் இன்று தமிழகத்தில் இல்லை!

"தட்டுங்கள், திறக்கப்படும்"
-பைபிள்

தமிழகம் தனது அறிவுக்கும் திறமைக்கும் ஈடான ஒரு தமிழ்ச் சமுதாயத்தை உருவாக்கத் தவறிவிட்டது.

நல்லவர்களும் படித்தவர்களும் பொதுவாழ்வில் ஈடுபடாமல் ஒதுங்கி நின்றதனால் இன்றைய நெறிகளற்ற இழிநிலைக்குத் தமிழ்ச் சமுதாயம் வந்துவிட்டது.

புதிய இரத்தம் தேவை

'இதற்கு மேலும் போகமுடியாது!' என்ற மனநிலையில் இன்று மக்கள் இருக்கிறார்கள். நாடு இன்று ஒரு திருப்பத்தை எதிர்நோக்கி நிற்கிறது. இன்று நாட்டிற்குப் புதிய இரத்தம் தேவை: புதிய நோக்குத் தேவை.

படித்தவர்களுக்கும் பாமர மக்களுக்கும் உள்ள இடைவெளி அதிகமாகிக்கொண்டிருக்கிறது. பாமர மக்களை

- டாக்டர். எம். எஸ். உதயமூர்த்தி -

ஒரு தனி இனமாகக் கருதும் மனோபாவம் சமுதாயத்தில் நிலவுகிறது, இந்தப் பாமர மக்கள் சினிமாக் கவர்ச்சியில் மயங்கி வோட்டுப் போட்டுப் போட்டு உங்கள் விதியையும் என் விதியையும் நிர்ணயிக்கிறார்கள் என்று படித்தவர்கள் குறைப்படுகிறார்கள்.

பாமர மக்களும் நமது சமுதாயத்தின் ஒரு பகுதி என்பதை உணர்ந்து அவர்கள் வாழ்வுமலர நாம் உண்மையான ஈடுபாடு கொள்ளும் போதுதான் ஒரு முழுச் சமுதாயம். மொத்தமாக விழிப்புணர்வும் – சம வளர்ச்சியும் பெற்ற சமுதாயம் மலரும்.

தமிழ் மக்களின் அறிவுக்கும் திறமைக்கும், உயர் குணங்களுக்கும் ஈடான ஒரு தமிழ்ச் சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதுதான் அதன் முதல்நோக்கம்.

இன்றைய வன்முறைகளும், சுரண்டல்களும், தரக்குறைவும், ஆணவத்தலைமைகளும் மாறி ஒரு நிரந்தர ஜனநாயகப் பாரம்பரியத்தை விட்டுச் செல்லவேண்டும் என்ற பெருநோக்கில்தான், கேவலப்படுத்தப்பட்ட 'தலைவர்' என்ற சொல்லையே நீக்கி 'அமைப்பாளர்' என்ற ஒரு காரணப் பெயரால் மனிதர்களை அழைக்கும் ஒரு மனோபாவத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

சில உதாரணங்கள்

அறிஞர்களையும், வல்லுனர்களையும், நிபுணர்களையும் உபயோகித்து நாட்டை முன்னேற்றுவதற்குப் பதில் அரசியல்வாதிகளை முன்வைத்து எடுத்த முடிவுகளால் நாடு பின்னுக்குப் போய்விட்டது. அறிஞர்களைப் பூரணமாகப் பயன்படுத்தி – அறிஞர்கள் தந்த யோசனைகளைச் செயற்படுத்தி-பிரச்சினைகளுக்கு வழிகண்டு வளம்கொழிக்கும் நாடாக அமெரிக்கா மாறியது. அறிஞர்கள் அப்படி நடத்திய அமைதியான புரட்சியின் விளைவாக, இன்று ஜப்பான், கொரியா, சிங்கப்பூர், பிரேசில் என்று பல நாடுகள் முன்னேற்றப்பாதையில் செல்கின்றன. அங்கெல்லாம் தனி மனித வருமானம் மிகப்பெரிய அளவுக்கு உயர்ந்திருக்கிறது. அதை நாமும் கொண்டுவர வேண்டும்.

ஜனநாயகம் ஒரு கழுதை

"ஜனநாயகம் என்பது ஒரு கழுதை" என்று சொல்வார்கள். அது அழுக்கு நிறைந்தது. மெதுவாகச் செல்லும்; சமயத்தில் உதைக்கும்; ஆனால் பொதிசுமக்க அதுதான் ஏற்றது. இதற்கு மாறான அமைப்பு முறைகள் மன்னராட்சி, கம்யூனசம், சர்வாதிகாரத் தலைமை என்ற பல ஆட்சிமுறைகள். இதையெல்லாம் மனத்தில் கொண்டுதான் ஒரு ஜனநாயக அமைப்பு முறையை நாம் தேர்ந்தெடுத்திருக்கிறோம்.

தனி மெஜாரிட்டியின் ஆணவ பலத்தை முறியடிக்கக் கூட்டணி அரசு ஒன்றுதான் நாம் நம் ஜனநாயகத்தில் இன்று பெற்றுள்ள ஆயுதம். தனி மெஜாரிட்டி என்ன செய்யும் என்பதற்கு முந்தைய தி. மு. க., அ. தி. மு. க. ஆட்சிகளே உதாரணங்கள்.

'தம்பீ, எழு!'

தம்பி நீ எழு! உன்னைத்தான் உலகம் எதிர்பார்க்கிறது. உன்னுடைய விதியை நாளைய தமிழ்நாட்டை நீ தான் உருவாக்கவேண்டும் படித்த தமிழ்ப் பெருமக்களே! நல்லவர்களே! நாணயமானவர்களே! இனியும் ஒதுங்கி நிற்காதீர்கள். ஒத்த உள்ளம் உடையோரெல்லாம் ஒன்று திரளுங்கள். இதில் இன்று நாம் ஈடுபடாவிட்டால் அடுத்த தலைமுறை நம்மைத்தான் குற்றஞ் சொல்லும்.

ஒரு புதிய சமுதாயத்தை, தர்மநெறிகள் மிகுந்த ஒரு தமிழ்ச் சமுதாயத்தை பொருளாதார வளம்பெற்ற ஒரு பொற்காலத்தை நமக்கும், நம் சந்ததிகளுக்குமாக உருவாக்குவோம் வாருங்கள்.

நம்பு தம்பி நம்மால் முடியும்;

நம்புங்கள் தங்கைகளே இது நம்மால் முடியும். நம்மால் இந்தச் சமுதாயத்தை நிச்சயமாக மாற்ற அமைக்க முடியும்.

நூல்:	அறுபத்துமூவர் பெருமை
ஆக்கம்:	பல்கலைப்புலவர் க. சி. குலரத்தினம் அவர்கள்
பதிப்பு:	ஸ்ரீ லங்கா அச்சகம்
விமர்சனம்:	நா. சு.

தமிழறிஞர் க. சி. குலரத்தினம் அவர்கள் சமய-பண்பாட்டுச் சிந்தனைகளிலும் ஈழத்துத் தமிழிலக்கிய பாரம்பரியத்திலும் தோய்ந்த புலமையாளர். நூல்கள், கட்டுரைகள் பல எழுதித் தமது பெயரை வரலாற்றில் நிலை நிறுத்திக் கொண்டவர். எழுத்தே மூச்சாகவும் பேச்சாகவும் உள்ளவர். அன்னார் எழுதி அண்மையில் பிரசுரமான நூல் 'அறுபத்து மூவர் பெருமை' ஆகும்.

தமிழ்நாட்டில் சைவம் தழைக்கப் பணிபுரிந்த அறுபத்து மூன்று தனியடியார்கள் பற்றிச் சேக்கிழார் பெருமான் தந்த தகவல்களின் அடியாக முக்கிய விடயங்களைத் தொகுத்துத் தருகிறது இந் நூல். சேக்கிழாரின் பெரிய புராணத்துக்கு மூல வித்தாக அமைந்த சுந்தரரின் திருத்தொண்டத்தொகை, பெரிய புராணத் தொடக்கத்தில் அமைந்த திருக்கூட்டச்சிறப்பு என்பன இந்த நூலை அணி செய்கின்றன. மேலும் நாயன்மார்கள் வீடு பெற்ற முறைமை, வீடுபேறடைந்த மாதம், நட்சத்திரம் என்பன ஒரே பார்வையில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அநுபந்தமாக மாணிக்கவாசகர், சேக்கிழார், சந்தானசிரியர்கள் தொடர்பான குறிப்புக்களும் அமைந்துள்ளன.

இவ்வகையில், சைவ நாயன்மார் தொடர்பான ஆரம்ப அறிவைப்பெற விழைவோர்க்குப் பயன்படத்தக்க திறவுகோலாகவும் கைநூலாகவும் இச்சிறு நூல் அமைந்துள்ளது. திரு. க.சி. குலரத்தினம் அவர்களது ஆழமான சமயப் பண்பாட்டுப் புலமையினை இச் சிறு நூலிலும் நன்கு தரிசிக்க முடிகின்றது. மாணவர்களுக்கு மிகவும் பயனளிக்கவல்ல ஆக்கமாக இதனைக் கொள்ளலாம்.

கிடைக்கப் பெற்றோம்

1. நூல்:- நீங்களும் சுபமுகூர்த்தம் வைக்கலாம். தொகுத்தவர்:- கி. சுப்பிரமணியசாஸ்திரிகள்
2. நூல்:- திருமுறை மனன அமுதம் தொகுத்தவர்:- கி சுப்பிரமணிய சாஸ்திரிகள்.
3. நூல்:- ஆசன யோகம் [illegible]:- யோகாசனக் கலாநிதி ஸ்வாமி ஸ்ரீ சிதானந்த யோகி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

★ படி சேட்ஸ் ★ ஸ்கேட் & பிளவ்ஸ்
★ புறக்ஸ் ★ பேபி சூட்ஸ்
★ லேடீஸ் படி பிளவ்ஸ்
அனைத்திற்கும் யாழ்நகரில்
புதிய ஓர் சங்கமம்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

சஞ்சீவ சஞ்சிகை

27-08-1988 சனிக்கிழமை

நவநாகரிகத்திற்கேற்ப
பிறிடைம் ★ பாட்லி
★ றிமோட் கொன்ரோல்
★ அக்கினி நட்சத்திரம்
மற்றும் எல்லா வகையான
பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும் யாழ்நகரில்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

வல்லரசுகள் நினைத்தால் மட்டுமே ஐக்கிய நாடுகள் சபை இயங்கும் நிலை!

உண்மையாகவே சமாதான அலை உலகில் வீசத் தொடங்கி விட்டதா?

இப்படிக் கேட்கும் அளவுக்கு உலகநாடுகளிடையே நிலவிவரும் மோதல்களுக்குத் தீர்வு காணப்பட்டு வருகின்றது.

இதுவரை காலமும் பேருக்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் இருந்து வந்தது.

இப்போதுதான் உலக சமாதானத்துக்காகப் பணியாற்ற அதற்கு சந்தர்ப்பம் அளிக்கப் பட்டுள்ளது.

ஐ. நா. வின் 'சொல்லும் செயலும்' சம்பந்தப்பட்ட நாடுகளின் 'காது'களில் ஏறக் கூடிய ஆண்டாக 1988 விளங்குகின்றது.

1945 ஆம் ஆண்டில் இருந்து இதுவரை 120க்கு மேற்பட்ட யுத்தங்கள் உலகில் இடம் பெற்றுள்ளன.

அவற்றில் பெரும்பாலானவை மூன்றும் உலக நாடுகளில் இடம்பெற்றன.

தீர்வுகாண வேண்டிய பிரச்சினைகள்

ஆப்கான் பிரச்சினை, வளைகுடாயுத்தம் ஆகியவற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ள ஐ. நா.வை எதிர்நோக்கியுள்ள ஏனைய உலகப்பிரச்சினைகள் வருமாறு;

★ கம்பூச்சியாவில் இருந்து வியட்னும் துருப்புக்களை வெளியேற்றி அங்கு சகலரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசு ஒன்றை நிறுவுவது.

★ நமீபியாவுக்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுப்பது. இது குறித்து ஐ. நா. ஒரு தீர்மானத்தை ஏற்கனவே நிறைவேற்றியுள்ளது. அதனை ஏற்றுக்கொள்ளப்போவதாகத் தென்ஆபிரிக்க அரசு தற்போது அறிவித்துள்ளது.

★ சைப்பிரஸ் பிரச்சினைக்கு தீர்வு காணுவது.

★ மேற்கு சஹாரா தனி நாடாக வேண்டும் என்று மொரொக்கோவுக்கு எதிராக நடத்தப்படும் யுத்தம்.

இவற்றுக்கு எல்லாம் பேச்சுக்கள் மூலம் தீர்வு காணுவதில் ஐ. நா. வெற்றி பெறும் என்று உலகம் நம்புகிறது.

நிதி நெருக்கடி

இந்த நிலையில் ஐ. நா பெரிய நிதி நெருக்கடியை

றேகன்

எதிர்நோக்கியிருக்கிறது என்று கூறினுல் எப்படி இருக்கும்?

உண்மையிலேயே ஐ. நா. ஸ்தாபனம் எதிர்வரும் அக்டோபருக்குப் பின்னர் இயங்க முடியாத அளவுக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று அதன் பொதுச் செயலாளர் பெரஸ் டி குயிலர் அறிவித்திருக்கிறுர்.

இந்த நிதி நெருக்கடிக்குக் காரணம் அமெரிக்காதான்.

உலகின் பல பாகங்களில் இருந்தும் நெருக்கடி தோன்றக் காரணமே வல்லரசுகள் என்பது பரவலான கருத்து.

வல்லரசுகள் தங்கள் நலன்களைக் காப்பாற்ற மற்ற நாடுகளில் 'காலூன்ற'ப்போய்த்தான் உலகில் நெருக்கடிகள், யுத்தங்கள் தோன்றுகின்றன. அப்படித்தோற்றுவிக்கப்படும் நெருக்கடிகளுக்கு ஐ. நா. தீர்வு காண முயலும்போது, அதற்கும் நெருக்கடியைத் தோற்றுவிக்க இந்த வல்லரசுகள் தவறுவதில்லை.

1983 இல்

1983 இல்—

ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில் அமெரிக்க அரசின் துணைப்பிரதிநிதி சார்ள்ஸ் லிசென்ஸ்ரீன் சவால் விடுத்தார்;

'அமெரிக்க மண்ணில் இருந்து ஐ. நா. வெளியேறலாம். ஐ. நா. வுக்கு பிரியாவிடை அளிக்க நாம் தயாராகவே உள்ளோம்'—

இப்படி அவர் கூறியதற்கு 'மூன்றுவது உலக நாடுகளின் 'ஊதுகுழலாக' ஐ. நா. மாறி வருகின்றது'— என்று காரணம் காட்டப்பட்டது.

அமெரிக்காவின் 'கோப'த்துக்கு ஆளான ஐ. நா, இன்று அதன் பலாபலனை அனுபவித்து வருகின்றது.

ஐ. நா. வின் நிதி பட்ஜட்டில் 25 சதவீதம் அமெரிக்க அரசினுல் வழங்கப்படும் நன்கொடையாகும்.

கோபம் கொண்ட அமெரிக்கா தனது கொடுப்பனவைக் கட்டுப்படுத்தத் தொடங்கியது.

இன்று ஐ. நா. வுக்கு அமெரிக்கா கொடுக்க வேண்டிய பணம் சுமார் 47 கோடி டாலராகும்.

தென் ஆபிரிக்கா (3 கோடி 39 லட்சம் டாலர்), பிரேஸில் (1 கோடி 79 லட்சம் டாலர்), ஈரான் (1 கோடி 21 லட்சம் டாலர்), சோவியத் யூனியன் (1 கோடி 21 லட்சம் டாலர்) ஆயகி நாடுகளும் ஐ. நா. சபைக்குப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது.

ஐ. நா. செலவீனம்

ஆண்டு தோறும் அமைதிப் படை அலுவல்களுக்காக ஏழு கோடி டாலரும் ஐ. நா. வின் கிளை நிறுவனங்களுக்காக 8 கோடி 90 லட்சம் டாலரும் ஐ. நா. செலவழித்து வருகிறது.

புதிய சமாதானப் பணிகள் அதிகரித்து உள்ளதால் ஐ. நா. வின் செலவீனம் மேலும் அதிகரித்துள்ளது.

ஆப்கனிஸ்தானில் அமைதிப் பணியை மேற்கொள்ள 50

கோர்ப்பச்சேவ்

லட்சம் டாலர் பணம் அக்டோபர் வரை தேவைப்படுவதாகவும் —

வளைகுடாவில் யுத்த நிறுத்தக் கண்காணிப்பில் ஈடுபட ஆண்டு தோறும் 4 கோடி டாலரும் —

நமீபியாவுக்குச் சுதந்திரம் வழங்கும் ஐ. நா. திட்டத்தைச் செயல்படுத்த 80 கோடி டாலரும் தேவைப்படுவதாக ஐ. நா. நிதிக் கட்டுப்பாட்டதிகாரி லூயிஸ் மரியா கோமஸ் தெரிவித்திருக்கிறுர்.

அமெரிக்க நிபந்தனைகள்

ஐ. நா. நிதி உதவி செய்ய மூன்று நிபந்தனைகளை அமெரிக்கா விதித்துள்ளது.

★ ஐ. நா தனது ஊழியர்களைக் குறைக்க வேண்டும்.

கூடுதல் நன்கொடை வளங்கும் நாடுகளுக்கு, ஐ. நா செலவீனம் பற்றிப் பேச அதிக வாய்ப்பு அளிக்கப்படவேண்டும்.

★ ஐ நாவில் வேலை செய்யும் சோவியத் ஊழியர்களை குறுகிய கால எல்லைக்குள் இடமாற்றஞ் செய்ய அனுமதிக்கப் படக் கூடாது. நீண்ட கால ஒப்பந்தம் ஒன்றின் கீழ் அவர்கள் பணியாற்ற வேண்டும். சோவியத்தின் உளவு வேலைகளைக் கட்டுப்படுத்தவே இந்த நடவடிக்கை.

பாக்கிப் பணத்தைப் பெறுவது பற்றிப் பொதுச்செயலாளர் பெரெஸ் டி குயிலர் அதிபர் றேகனைச் சந்தித்துப் பேசினுர்.

அதிபர் றேகனின் பதில் ஏமாற்றத்தைக் கொடுத்திருப்பதாக ஐ. நா. துணைப்பொதுச் செயலாளர் ஜோசப் வெர்னர் றீட் தெரிவித்தார்.

ஐ. நா பொதுச்செயலாளர், பேட்டி ஒன்றில், ஐ. நாவுக்கு அமெரிக்கா ஏனைய நாடுகளிலும் பார்க்க கூடுதல் நிதி உதவி அளிப்பது ஐ. நாவின் சுதந்திரத்தைப் பாதிக்கிறது என்றுர்.

சோவியத்நுக்குப் பாராட்டு

அதே நேரத்தில் சோவியத் யூனியனை அவர் பாராட்டுகின்றுர்.

அரசியல் ரீதியிலான ஆதரவுடன் நிதி உதவியும் சோவியத் அளித்து வருகிறது. பலமான ஐ. நா ஸ்தாபனம் வேண்டும் என்று கூறிக் கொண்டு, அதற்கு வழங்க வேண்டிய நிதியை வழங்காமல் இழுத்தடிப்பது சரியல்ல என்று சோவியத் யூனியன் உணருகின்றது — இது ஐ. நா பொதுச் செயலரின் கணிப்பு.

பலமுள்ள ஐ. நா

என்னதான் சொன்னுலும் வல்லரசுகள் ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே ஐ. நா, பலமுள்ளதாக அமையும்.

ஐ. நாவைப் பயன்படுத்த வேண்டும் என்று அமெரிக்காவும் சோவியத் யூனியனும் நினைப்பின் ஐ. நா ஸ்தாபனம் உலக சமாதானத்துக்குப் பயனுள்ள பணியை ஆற்ற முடியும்.

அதைத்தான் ஐ. நாவின் தற்போதைய பணிகள் எடுத்துக் காட்டுகின்றன.

உலக உலா
என்.பி.சீலன்

"ஷப்ரு" கிண்ணச் சாம்பியன் யாழ் ஜொனியன்ஸ் அணி!

ஷப்ரு கிண்ணத்திற்காக விறுவிறுப்பாக நடைபெற்று வந்த போட்டிகள் கடந்த வாரம் முடிவுற்றன.

ஷப்ரு கிண்ணத்தை யாழ். ஜொன்யன்ஸ் விளையாட்டுக் கழகம் சுவீகரித்துக்கொண்டது.

யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் 'ஷப்ரு' நிதி நிறுவனத்தின் ஆதரவில் இந்தப் போட்டியை நடத்தியது.

இந்தப் போட்டியில் 14 கழக அணிகள் பங்குபற்றின.

இவற்றிற்கிடையே முதலில் நடைபெற்ற 5 போட்டிகளின் விவரங்களை ஏற்கனவே உங்களுக்குத் தந்திருக்கின்ரேும்.

மிகுதியை இன்று தருகின்ரேும். ஆருவது— முதலாவது கால் இறுதி— ஆட்டத்தில் யாழ். யங் ஸ்ரார்ஸ் அணியை சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி இலகுவாகத் தோற்கடித்தது.

முதலில் சென்றலைட்ஸ் அணி 30 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது.

கலாவண்ணன் 58 ஓட்டங்களையும் விஜயநாதன் 38 ஓட்டங்களையும் பெற்றது குறிப்பிடத்தக்கது.

கே. செழியன், ஜே. ஜெகேந்திரன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

யங் ஸ்ரார்ஸ் அணி 18.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 64 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதுவே இந்தக் கிரிக்கெட் போட்டியில் ஓர் அணி பெற்ற ஆகக்குறைந்த ஓட்டங்களாகும்.

பாலகுமார் 6 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், விஜயநாதன் 3 ஓவர்கள் பந்து வீசி 8 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், சாந்திகரன் 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

ஏழாவது ஆட்டத்தில் யாழ். ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணியை நொதேர்ண் விளையாட்டுக் கழக அணி தோற்கடித்தது.

முதலில் ஸ்ரான்லி அணி 26.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றது.

கிருபாகரன் 36 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

நாதன் 4 ஓவர்கள் பந்து வீசி 7ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், ரி. நரேஸ் 4.4 ஓவர்களில் 27 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து நொதேர்ண் அணி 23.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 110 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றி ஈட்டியது.

மோகன் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களையும், வீரசிங்கம் ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

எட்டாவது — இரண்டாவது கால் இறுதி— ஆட்டத்தில் யாழ். நொதேர்ண் விளையாட்டுக்கழக அணியை, 'ஷப்ரு' அணி தோற்கடித்தது;

'ஷப்ரு' அணி முதலில் 26.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றது.

அன்ரூ கிறேசியன் 22 ஓட்டங்களைப் பெற்றுர்:

நாதன் 6 ஓவர்கள் பந்து வீசி 28 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினுர்.

நொதேர்ண் அணி 30 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 92 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

ஓ. வி. கே. எம். செந்தூர்வாசன் ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களைப் பெற்றுர்.

ஆர். விஜயேந்திரா 6 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினுர்.

எஸ். பி. எஸ். இளங்கோ 6 ஓவர்கள் பந்து வீசி 4 ஓட்டங்களை மட்டும் கொடுத்தார்.

ஒன்பதாவது — மூன்றுவது கால் இறுதி— ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி, தெல்லிப்பளை கிருஸ் கொப்பர்ஸ் அணியை வென்றது.

கிருஸ் கொப்பர்ஸ் அணி முதலில் 30 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றது.

ரேகான் ருஜசிங்கம் சிறப்பாக ஆடி 43 ஓட்டங்களைப் பெற்றுர்.

ரி. சதீசன் 6 ஓவர்களில் 17 ஓட்டங்களைக் கொடுத்து 2விக்கெட்டுக்களையும், பி. முரளி

- விவியன் -

6 ஓவர்களில் 21 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினுர்.

ஜொனியன்ஸ் அணி 21.5 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 123 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றியீட்டியது.

எஸ். என். புவனரெட்னம் 54 ஓட்டங்களையும், ரி. சஞ்ஜீவன் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பத்தாவது — நான்காவது கால் இறுதி — ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி, யாழ் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழக அணியை வென்றது.

சிறப்பாக ஆடிய கொக்குவில் அணி 28 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 204 ஓட்டங்களைப் பெற்றது,

என். ரஞ்சித்குமார் ஆட்டமிழக்காமல் 12 பவுண்டரிகள், 2 சிக்சர்கள் அடங்கிய 84 ஓட்டங்களையும் எல். நற்குணேந்திரன் 10 சிக்சர்கள் 2 பவுண்டரிகள் அடங்கிய 84 ஓட்டங்களையும் பெற்று ரசிகர்களின் மனதில் இடம்பிடித்துக் கொண்டனர்.

தொடர்ந்து ஜொலி ஸ்ரார்ஸ் அணி 24 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது.

எஸ். சுரேஸ 28 பந்துகளை சந்தித்து 46 ஓட்டங்களையும், எஸ். பி. பிரபானந்தன் 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

எஸ். கோகுலன் 4 ஓவர்கள் பந்து வீசி 33 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினுர்.

இவர் தொடர்ந்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றி 'ஹற்றிக்' என்ற சாதனையையும் நிலைநாட்டினுர்.

முதலாவது அரை இறுதி ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சனசமூகநிலைய அணி, யாழ் சென்றலைட்ஸ் அணியைத் தோற்கடித்தது.

மிக விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் வெற்றி தோல்வி ஆட்டத்தின் இறுதிப் பந்திலேயே நிர்ணயிக்கப்பட்டது.

முதலில் ஆடிய சென்றலைட்ஸ் அணி 28 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றது.

சாந்திகரன் ஆட்டமிழக்காமல் 62 ஓட்டங்களைப் பெற்றுர்.

எஸ். கோகுலன் 4 விக்கெட்டுக்களையும் செந்தில்வேல்நாதன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினுர்.

கொக்குவில் அணி 23ஆவது ஓவரின் கடைசிப் பந்தில் 4 ஓட்டங்களைப் பெற்று—அதாவது மொத்தமாக 154 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றியீட்டியது.

என். ரஞ்சித்குமார் 57 ஓட்டங்களையும், வி. விமல்ராஜ் 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

இரண்டாவது அரைஇறுதி ஆட்டத்தில் ஷப்ரு அணியை ஜொனியன்ஸ் அணி வென்றது.

ஜொனியன்ஸ் அணி முதலில் 27.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றது. சி சூரியகுமார் 25 ஓட்டங்களைப் பெற்றுர்.

ஆர். விஜேபந்திரா 26 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினுர்.

ஷப்ரு அணி 22 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 96 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

அன்றூ கிறேசியன் 23, எஸ். பி. எஸ். இளங்கோ 22 ஓட்டங்களைப் பெற்றனர்.

பி. முரளி 3 ஓவர்களில் 6 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் ரி. சஞ்ஜீவன் 18 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

40 ஓவர்களைக் கொண்ட இறுதிப்போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியும், யாழ் ஜொனியன்ஸ் விளையாட்டுகழக அணியும் மோதின.

இதில் ஜொனியன்ஸ் அணி வெற்றிபெற்றது.

இந்த அணி முதலில் துடுப்பெடுத்தாடி 39 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

சி. சூரியகுமார் 47, ரி. சதீசன் 36, எஸ். என். புவனரெட்னம் 25 ஓட்டங்களைப் பெற்றனர்.

கொக்குவில அணி 34.4 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து —ஒரு ஆட்டக்காரர் கையில் ஏற்பட்ட காயம் காரணமாக துடுப்பெடுத்தாட முடியவில்லை— 137 ஓட்டங்களைப்பெற்றது.

எஸ். உமாசங்கர் ஆட்டமிழக்காமல் 30ஓட்டங்களையும் வி. விமல்ராஜ் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

ரி. சஞ்ஜீவன் 7 ஓவர்களில் 21 ஓட்டங்களைக்கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினுர். ★

விளையாட்டுத் துறை

புரோட்டீன் நிறைந்த
புரோட்டினெக்ஸ்®
பக்கெட் ஒன்றை
இன்றே வாங்குங்கள்!



Grant BJK&E PFL 1158

புரோட்டினெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டினெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும்
சக்தியை மீட்டுத் தருகிறது.

சில்லறை விலை
ரூபா 68/55
125 கிரும்

Pfizer

® ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org